ம.அ11.பொ.சு.து. ந.க. எண் எச்2/404/2020

தீர்மான எண்.523/2020 **நாள்:04-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-11ல் கொரோனா வைரஸ் - தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 571 தற்காலிக பணியாளர்கள் நியமனம் - 04.04.2020 முதல் 30.06.2020 மூன்று மாதக் காலத்திற்கு ஆணையாளர் அவர்களின் ஆணை பெறப்பட்டது - மூன்று மாதக் காலம் முடிவடைந்த நிலையில் மேலும் 01.07.2020 முதல் 30.09.2020 வரை மூன்று மாதக் காலம் நீடிக்க அனுமதி.

ஆணையர் அவர்களின் 31.03.2020 நாளிட்ட காணொலி கலந்தாய்வுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கணக்கெடுப்பு செய்ய பணியாளர்களை (Survey Worker) மாத ஊதியம் ரூ.15000/- வீதத்தில் மூன்று மாதத்திற்கு பணியமர்த்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11ல் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 671 தற்காலிக பணியாளர்கள் நியமனம் 04.04.2020 முதல் 30.06.2020 மூன்று மாதக் காலத்திற்கு ஆணையாளர் அவர்களின் 05.05.2020 நாளிட்ட ஆணை பெறப்பட்டது. மூன்று மாதக் காலம் முடிவடைந்த நிலையில் மேலும் 01.07.2020 முதல் 30.09.2020 வரை மூன்று மாதக் காலம் நீடிக்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு கொரோனா நோய் தடுப்பு பணியாளர்களுக்கு பணி தொடர்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அதன் அடிப்படையில் மண்டலம்-11ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கோட்டம்-143 முதல் 155 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 790 பணியாளர்கள் தேவை என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் 193 பணியாளர்களும், சுய உதவிக்குழு மூலம் 571 பணியாளர்களும் பணியமர்த்தப்பட்டனர். மேலும் கொரோனா நோய் தடுப்பு பணிக்கு தேவைப்படும் பணியாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் 26 பணியாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்பொழுது தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட 571 பணியாளர்களுக்கு 01.07.2020 முதல் மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தப்படுகின்றனர். அதன் விவரம் பின்வருமாறு

பகுதி	வார்டு	தற்காலிகமாக (பணியமர்த்தப்பட்ட சுய உதவிககுழு (Surveyworker) பணியாளர்களின் எண்ணிக்கை	தேசிய நகர்ப்ற வாழ்வாதா இயக்கம் (NULM)	தன்னார்வ தொண்டு (NGO) நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை	மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை
32	143	83	-	..	83
	144	37	-	15	52
	146	30	-	36	66
	147	54	11	-	65
33	145	23	-	37	60
	148	22	-	44	66
	149	59	9	-	68
	152	64	4	-	68
34	150	34	-	31	65
	151	50	-	-	50
	153	48	2	-	50
	154	37	-	-	37
	155	30	-	30	60
Total		571	26	193	790

ம.அ11.பொ.சு.து. ந.க. எண் எச்2/404/2020

மேற்கண்ட அட்டவணையின்படி 790 பணியாளர்களில் 193 பணியாளர்கள் தன்னார்வலர் தொண்டு நிறுவனங்கள் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஏற்கனவே கொசு ஒழிப்பு பணியில் (Denque and Malaria) 119 பணியாளர்கள் பணிபுரிந்து வந்த நிலையில் அப்பணியாளர்களை கொண்டு கொரோனா நோய் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் 193 பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளதாலும், மேலும் பருவ மழை காலம் என்பதால் டெங்கு மற்றும் மலேரியா கொசு ஒழிப்பு பணி மிகவும் அவசியமாகிறது. எனவே, கொசு ஒழிப்பு பணிக்கு 93 பணியாளர்கள் அவசியம் என்பதால் அப்பணிக்கு ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

மேலும் 26 மலேரியா பணியாளர்கள் கொரோனா நோய் தடுப்பு பணிகள் தங்கு தடையின்றி செயல்படும் வகையில் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கைக்கு ஈடு செய்யவும் பயன்படுத்தப்படுகின்றனர். எனவே தற்போது 571 தற்காலிக சுய உதவிக்குழு பணியாளர்களுக்கு மட்டுமே 01.07.2020 முதல் 30.09.2020 வரை மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தி ஊதியம் வழங்க பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே,

1 மண்டலம்-11ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கோட்டம்-143 முதல் 155 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் போன்ற ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணகெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்கவும் 571 பணியாளர்களை (Survey Worker) மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தியதற்கு அனுமதி வேண்டியும்,

2 மேற்கண்ட 571 பணியாளர்களுக்கு (Survey Worker) ஊதியமாக ஒரு நபருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.15000/- வீதம், பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு 571X15000X3=ரூ.2,56,95,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து ஆறு லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) வழங்கவும்,

3 இப்பணிக்கான செலவினத்தை பிரிவு குறியீட்டு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீட்டு எண்.230-70-12-03 –ல் ரூ.2,56,95000/- நிதி ஒதுக்கீடு செய்திடவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

க.து.ந.க.எண்.பி1 / 870 / 2020

தீர்மான எண்.524 / 2020 **நாள்:04-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - COVID-19 - கட்டத்துறை - கொரோனா வைரஸ் தாக்கத்தை முன்னிட்டு முன் எச்சரிக்கை நடவடிக்கைக்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் NSTI, Madras University Hostel, Sathyabama University Hostel, St.Joseph Engineering college Hostel, Thanigaivel Engineering college Hostel, Jerusalam college of Engineering Hostel, Maritine University Hostel, Ambedkar Law University Hostel, Teachers Training University, KCG college of Engineering Hostel, DB Jain college Hostel, Velammal Engineering college Hostel (partial) போன்ற இடங்களில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்பாட்டிற்காக Supplying of Foam Mattress of size Length 74" , Breadth 36" and Height 3" covered with rexin (5000 nos) கொள்முதல் செய்யும் பணிக்காக ரூ.2,19,77,500/-க்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.

சென்னையில் கொரோனா வைரஸ் பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகமாகி வரும் சூழ்நிலையில் அவர்களுக்கு தேவையான பொருட்களை உடனே வழங்க ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு *NSTI, Madras University Hostel, Sathyabama University Hostel, St.Joseph Engineering college Hostel, Thanigaivel Engineering college Hostel, Jerusalam college of Engineering Hostel, Maritine University Hostel, Ambedkar Law University Hostel, Teachers Training University, KCG college of Engineering Hostel, DB Jain college Hostel, Velammal Engineering college Hostel(partial)* போன்ற இடங்களில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட உள்ளவர்களின் பயன்பாட்டிற்காக தற்காலிகமாக பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டு அங்கு ஏற்கனவே கட்டில்கள் இருந்ததால் மெத்தைகள் மட்டும் போடப்பட்டன, *Covid Care centres* முன்னேற்பாடுகள் செய்யப்பட்டது.

ஏற்கனவே விடுதிகளில் கட்டில்கள் இருந்ததால் புதிதாக மெத்தைகள் மட்டும் பல்வேறு கல்லூரிகள், விடுதிகள் ஆகிய இடங்களில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் தனிமைப்படுத்தப்பட உள்ளவர்களின் உபயோகத்திற்காக Foam Mattress of size Length 74" Breadth 36" and Height 3" covered with rexin (5000 nos) கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது.

இந்த Foam Mattress of size Length 74" Breadth 36" and Height 3" covered with rexin (5000 nos) கொள்முதல் செய்து வழங்க கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

1	மதிப்பீட்டின் தொகை	ரூ. 2,19,77,500.00
	பணி செலவு Foam Mattress of size Length 74" Breadth 36" and Height 3" covered with rexin (5000 Nos) 3725X5000 = 1,86,25,000	ரூ. 1,86,25,000.00
	(ஆ) GST 18 %	ரூ. 33,52,500.00
2	மொத்தம்	ரூ. 2,19,77,500.00
3	நிதியின் தன்மை	COVID-19

எனவே,

1. *NSTI, Madras University Hostel, Sathyabama University Hostel, St.Joseph Engineeringcollege Hostel, Thanigaivel Engineering college Hostel, Jerusalam college of Engineering Hostel, Maritine University Hostel, Ambedkar Law University Hostel, Teachers Training University, KCG college of Engineering Hostel, DB Jain college Hostel, Velammal Engineering college Hostel(partial)* ஆகிய இடங்களில் உள்ள விடுதிகளில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் தனிமைப்படுத்தப்பட உள்ளவர்களின் உபயோகத்திற்காக Foam Mattress of size Length 74" Breadth 36" and Height 3" covered with rexin (5000 nos) COVID-19

பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி கொள்முதல் செய்த பணிக்காக ரூ.2,19,77,500/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே பத்தொன்பது இலட்சத்து எழுபத்தேழாயிரத்து ஐநூறு மட்டும்) (GST 18 சதவீதம் உட்பட) பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,

2. அரசு கடித எண்.74./JS(MA)/Finance(Salaries/ 2020,நாள்.01.04.2020 Sec 16 (a) TNTT Actன்படி பணி நேரடியாக கொள்முதல் செய்யவும்,
3. இப்பணிக்காக 75 சதவீதம் முன்பணம் பெற்று மேற்கொள்ளவும்,
4. மேற்கண்ட முன்பணத்தினை பணிநிறைவுற்ற பின்னர் திரு.T.கோபால கிருஷ்ணா, உ.தவி செயற் பொறியாளர் (கட்டடம்) அவர்களால் நேர் செய்யவும்,
5. இப்பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி பணி ஆணை வழங்கி பணி மேற்கொண்டமைக்கு பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.07.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.3.பொ.சு.து.ந.க.எண்.எச்1/ 533/ 2020

தீர்மான எண்.525 / 2020 **நாள்:04-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 - பொது சுகாதாரத்துறை - கோட்டம்-22 முதல் 33 வரை கொரோனா வைரஸ் கணக்கு எடுக்கும் பணி மற்றும் கொரோனா நோய் பராவமல் தடுக்கும் பணிக்கு தேவையான 465 தற்காலிக பணியாளர்களை மீண்டும் 01.07.2020 முதல் 30.09.2020 வரை மூன்று மாதங்களுக்கு பணி நீடிப்பு செய்ய அனுமதி.

ஆணையர் அவர்களின் கம்பியில்லா தந்தி மூலம் வழங்கப்பட்ட 25/06/2020 நாளிட்ட உத்தரவின் படி மண்டலம்-3, பொது சுகாதாரத்துறை மாதவரம் கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள கொரோனா நோய் தடுப்பு பணிக்காக ஒரு குறுவட்டப்பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலான வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள 51,806 வீடுகளை 527 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறி கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பராவமல் தடுக்கும் பணிக்கும் மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் நியமித்த பணியாளர்களை தொடர்ந்து 01.07.2020 முதல் 30.09.2020 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீடிப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டது

மண்டலம்-3, சுகாதாரத்துறை மாதவரத்தில் கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள 12 கோட்டங்களில் 51,806 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு 525 செக்டரான கொரோனா நோய் தடுப்பு கணக்கு எடுக்கும் பணிக்கு 527 நபர்களை மூன்று மாதங்களுக்கு தற்காலிக பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டு கடந்த 03.04.2020 முதல் 30.06.2020 வரை பணிபுரிய ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்றது.

25.06.2020 நாளிட்ட கம்பியில்லா தந்தி மூலம் அளிக்கப்பட்ட உத்தரவின் படி 01.07.2020 முதல் 30.09.2020 வரை மூன்று மாத காலத்திற்கு தொடர்ந்து மேற்கண்ட பணிகளுக்கு பணி நீட்டிப்பு மேற்கொள்ள ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் அறிவுறுத்தலின் படி தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் வீடுகள் தோறும் கணக்கு எடுக்கும் பணி மேற்கொள்ளும் பணியாளர்களை ஒருங்கிணைத்து ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்க அறிவுறுத்தபட்டதின் பேரில் கீழ்கண்ட அட்டவணையில் கண்டுள்ளப்படி பணியாளர்களை ஒருங்கிணைத்து ஒரு நபருக்கு ஒரு மாத கால ஊதியம் ரூ.15,000/- வீதம் 465 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 69,75,000/- (ரூபாய் அறுபத்து ஒன்பது லட்சத்து ஏழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) என்ற அளவில் மூன்று மாதங்களுக்கு ரூ. 2,09,25,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஒன்பது லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) என்று மதிப்பிடப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வ.எண்	கோட்டம் எண்	மொத்த வீடுகளின் எண்ணிக்கை	செக்டர்களின் எண்ணிக்கை	ஏற்கெனவே உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை	மாநகராட்சியில் பணிபுரிந்த பணியாளர் கள் தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை(ORW)	கோட்ட வாரியாக எண்ணிக்கை (Buffer)	தற்போது மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை(SHW)	ஒரு மாத ஊதியம்(SHW)	மூன்று மாத ஊதியம் ரூ.
1	22	5456	11	55	0	0	55	825000	2475000
2	23	2796	6	30	0	0	30	450000	1350000
3	24	8872	18	90	0	2	92	1380000	4140000
4	25	3113	6	30	4	0	26	390000	1170000
5	26	4560	12	60	11	0	49	735000	2205000
6	27	2133	8	40	2	0	38	570000	1710000
7	28	4693	8	40	7	0	33	495000	1485000
8	29	2534	5	25	2	0	23	345000	1035000

9	30	2021	6	30	10	0	20	300000	900000
10	31	1622	7	35	11	0	24	360000	1080000
11	32	3481	6	30	7	0	23	345000	1035000
12	33	5365	12	60	8	0	52	780000	2340000
மொத்தம்	330	46646	105	525	62	2	465	6975000	20925000

எனவே, மண்டலம்-3, மாதவரம் கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் குறுவட்டப்பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக ஒரு குறுவட்டப்பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலான வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள 51,806 வீடுகளை 527 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறி கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பராவமல் தடுக்கும் பணிக்கும் மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் 527 தற்காலிக பணியாளர்களை மேலும் 01.07.2020 முதல் 30.09.2020 வரை மூன்று மாத காலங்களுக்கு பணி நீடிப்பு செய்ய சிறப்பு அதிகாரி அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

அ) மண்டலம்-3 கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிக்கும் மற்றும் நோய் தொற்று பராமவல் தடுப்பு பணிக்கும் மகளிர் சுய உதவி குழு மற்றும் இதர மூலங்கள் மூலம் 465 தற்காலிக பணியாளர்களை 01.07.2020 முதல் 30.09.2020 வரை மீண்டும் மூன்று மாத காலங்களுக்கு பணி நீடிப்பு செய்வதற்கும்,

ஆ) மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.15000/- வீதம் 465 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 69,75,000/- (ரூபாய் அறுபத்து ஒன்பது லட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) வீதம் என்ற அளவில் மூன்று மாதங்களுக்கு ரூ. 2,09,25,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஒன்பது லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) என்ற மதிப்பீட்டில் செலவினம் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

இ) இந்த மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கான தொகை ரூ. 2,09,25,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஒன்பது லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய நிதி ஆலோசகர் அவர்களுக்கு அனுப்புவதற்கும்,

ஈ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க ஆகும் செலவினத்தை வரவு செலவு கணக்கு பிரிவு எண் 20-21-07 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230-70-12-03 மூலம் செலவு செய்ய ஆணை வேண்டியம்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

தி.க.மே.து.ந.க.எண்.அ4/ 1727/ 2017

தீர்மான எண்.526 / 2020 **நாள்:04-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு பரப்புரையாளர் வீதம் 200 நபர்கள், ஒரு மண்டலத்திற்கு ஒரு மேற்பார்வையாளர் வீதம் 15 நபர்கள் நியமிக்கும் பணி - திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம் அவர்களுக்கு 30.09.2020 வரை பணி நீட்டிப்பு ஆணை வழங்க அனுமதி.

அரசு ஆணை (நிலை) எண்.37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.IV)துறை, நாள்.13.04.2017ன்படி, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக 15 மேற்பார்வையாளர்கள் மற்றும் 200 பரப்புரையாளர்களுக்கு ஊதியம் மற்றும் பயிற்சி செலவினங்களை மத்திய மற்றும் மாநில அரசு பங்களிப்புடன் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணை வெளியிடப்பட்டது.

திட்ட இயக்குநர், தூய்மை இந்தியா திட்டம் / நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 29.05.2017 நாளிட்ட கடிதத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தலால் ஏற்படும் சுகாதார சீர்கேடு, திடக்கழிவுகளை குறைத்திடும் வழிமுறைகள் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணிக்காக 15 மண்டல மேற்பார்வையாளர்கள் மற்றும் 200 பரப்புரையாளர்களை நியமிக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

சிறப்புஅதிகாரி, மன்ற தீர்மான எண்.643/2017, நாள்.04.10.2017ல் 2017 – 2018 ஆம் ஆண்டு திடகழிவு மேலாண்மை துறை துய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த ஒப்பந்த புள்ளி அடிப்படையில் ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு பரப்புரையாளர் வீதம் 200 நபர்கள், ஒரு மண்டலத்திற்கு ஒரு மண்டல மேற்பார்வையாளர் வீதம் 15 நபர்கள் நியமிக்கும் பணிக்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளி முலம் ஒப்பம் கோரப்பட்டு திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம் அவர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு ரூ.3,25,80,000/- ஒப்பம் ஏற்க அனுமதி பெறப்பட்டது.

திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம் அவர்களுக்கு 2017 – 2018ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை துறை துய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த ஒப்பந்த புள்ளி அடிப்படையில் ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு பரப்புரையாளர் வீதம் 200 நபர்கள், ஒரு மண்டலத்திற்கு ஒரு மண்டல மேற்பார்வையாளர் வீதம் 15 நபர்கள் நியமிக்கும் பணியினை ஒரு வருட காலத்திற்கு ரூ.3,25,80,000/- க்கு 06.10.2017 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. இப்பணிக்காலம் 06.10.2018 அன்று முடிவடைந்துள்ளது.

நகராட்சி நிர்வாகம் ஆணையர் அவர்களின் 24.09.2018 நாளிட்ட 7வது மாநில உயர் மட்ட அதிகார குழுவின் சுருக்க அறிக்கையில் (Minutes of the Meeting) கூட்ட சுருக்கம் எண்.14ல் மண்டல மேற்பார்வையாளர்கள் மற்றும் பரப்புரையாளர்களை 2018 – 2019 ஆம் ஆண்டு வரை நீட்டிப்பு செய்வதற்கு ரூ.3.62/- கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவைகளின்படி, திடக்கழிவு மேலாண்மை துறையின் முலமாக 15 மண்டலங்களில் பணிப்புரியும் மேற்பார்வையாளர்கள் மற்றும் 200 வார்டுகளில் பணிப்புரியும் பரப்புரையாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் 07.10.2018 முதல் 06.10.2019 வரை பணிபுரிய பணி நீட்டிப்பு வழங்குவதற்கு ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அரசு ஆணை எண்.353, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.09.2019ல் குறிப்பிட்டுள்ளபடி, தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் மண்டல மேற்பார்வையாளர்கள் மற்றும் பரப்புரையாளர்களை நியமிக்க 2019 - 2020ஆம் ஆண்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பங்களிப்பு தொகையாக ரூ.2.59/- கோடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் ஆணையர் அவர்களின் 11.09.2019 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் மண்டல மேற்பார்வையாளர்கள் மற்றும் பரப்புரையாளர்களை நியமிக்க 31.03.2020 வரையில் காலநீட்டிப்பு வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.677/2019, நாள்.01.11.2019ன்படி 06.10.2019 முதல் 31.03.2020 வரை திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம் அவர்களுக்கு பணிகால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்காலம் 31.03.2020 ல் முடிவடைந்தது.

தி.க.மே.து.ந.க.எண்.அ4/ 1727/ 2017

நகராட்சி நிர்வாகம் ஆணையர் அவர்களின் 30.03.2020 நாளிட்ட கடிதத்தில், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணியாற்றும் மண்டல மேற்பார்வையாளர்கள் மற்றும் பரப்புரையாளர்கள் நியமிக்க 30.06.2020 வரையில் காலநீட்டிப்பு வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, மன்ற தீர்மான எண்.307/2020, நாள். 30.04.2020ன்படி 31.03.2020 முதல் 30.06.2020 வரை திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம் அவர்களுக்கு பணிகால நீட்டிப்பு வழங்கப்பட்டது. இப்பணிக்காலம் 30.06.2020 ல் முடிவடைந்தது.

நகராட்சி நிர்வாகம் ஆணையர் அவர்களின் 29.06.2020 நாளிட்ட கடிதத்தில், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணியாற்றும் மண்டல மேற்பார்வையாளர்கள் மற்றும் பரப்புரையாளர்கள் நியமிக்க 30.09.2020 வரையில் காலநீட்டிப்பு வழங்குவதற்கு அனுமதி அளித்துள்ளார்.

மேற்கண்ட பணிக்காக திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம் அவர்களுக்கு 01.07.2020 முதல் 31.07.2020 வரை பணிக்கால நீட்டிப்பு ஆணை வழங்குவதற்கான பின்னேற்பு அனுமதியும் மற்றும் இப்பணிக்கு திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம் அவர்களுக்கு 01.08.2020 முதல் 30.09.2020 வரை பணிக்கால நீட்டிப்பு வழங்குவதற்கு அனுமதியும் வேண்டப்படுகிறது.

இதன்படி, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு பரப்புரையாளர் வீதம் 200 நபர்கள், ஒரு மண்டலத்திற்கு ஒரு மேற்பார்வையாளர் வீதம் 15 நபர்களின் பணிக்காலம் 30.06.2020ல் முடிவடைந்த நிலையில் நகராட்சி நிர்வாகம் ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி 30.09.2020 வரை நீட்டித்து அனுமதி அளித்துள்ளார்.

எனவே,

1. மேற்கண்ட பணிக்காக திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம் அவர்களுக்கு 01.07.2020 முதல் 31.07.2020 வரை பணிக்கால நீட்டிப்பு ஆணை வழங்குவதற்கான பின்னேற்பு அனுமதியும்
2. இப்பணிக்கு திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம் அவர்களுக்கு 01.08.2020 முதல் 30.09.2020 வரை பணிக்கால நீட்டிப்பு வழங்குவ தற்கு அனுமதியும் வேண்டப்படுகிறது.
3. நகராட்சி நிர்வாகம் ஆணையர் அவர்களின் கடிதத்தில் வழங்கப்பட்ட அனுமதியின் பேரில் பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் பணியில் ஈடுபட்டுள்ள மேற்பார்வையாளர்கள் 15 நபர்கள் மற்றும் பரப்புரையாளர்கள் 200 நபர்களின் பணிகாலத்தை 30.09.2020 வரை நீட்டிப்பு செய்வதற்கு அனுமதியும்,
4. மேற்கண்ட பணியினை செய்து வரும் திருவாளர்கள் ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம் அவர்களுக்கு 30.09.2020 வரை தொடர்ந்து பணிமேற்கொள்ள பணி ஆணை வழங்குவதற்கு அனுமதியும்,
5. 2020 -2021 ம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி Swachh Bharath Mission கணக்கு தலைப்பில் செலவினம் மேற்கொள்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 31.07.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

இ.பொ.து.ந.க.எண்.பி1/ 195/ 2020

தீர்மான எண்.527 / 2020 **நாள்:05-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - அச்சகம் - "கொரோனா வைரஸ்" தடுப்பு பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி அவ்வப்போது தேவைக்கேற்ப கொள்முதல் மற்றும் அச்சடித்து வழங்கும் பணிகள் செய்ய விலைப்புள்ளி கோரி, குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் மற்றும் அச்சடித்து வழங்கும் பணிகள் நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.

உலக சுகாதார நிறுவனம் "கொரோனா வைரஸ்" *(Corona Virus)* மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் *(Pandemic)* என அறிவித்துள்ளது. எனவே, இந்நிறுவனம் அனைத்து உலக நாடுகளும் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கைக்கான பணியினை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மத்திய அரசு மற்றும் தமிழக அரசும் கொரோனா வைரஸ் பாதிக்காமல் இருக்க போதிய தடுப்பு நடவடிக்கைகளையும் மற்றும் பொது மக்களிடையே தகுந்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறது. இதனை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியும் "கொரோனா வைரஸ்" பரவுவதை தடுக்கும் பொருட்டு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் 15 வரையிலான பகுதிகளில் "கொரோனா வைரஸ்" தொற்று பரவுவதை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது மக்கள் கொரோனா வைரஸ் தொற்றுலிருந்து பாதுகாத்துகொள்ள கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு ஸ்டிக்கர்கள், விளம்பர பதாகைகள், துண்டு பிரசுரங்கள் முதலியன அச்சடித்து விநியோகிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், கொரோனா வைரஸ் தடுப்பு பணியில் மேற்கொள்ளப்பட்டு வரப்படும் பலவகையான நடவடிக்கைகளுக்காக தேவையான பதிவேடுகள், படிவங்கள், அடையாள அட்டைகள், எழுதுபொருட்கள் ஆகியவைகள் அச்சகத்தின் மூலம் அச்சடித்தும் மற்றும் கொள்முதல் செய்தும் வழங்கப்பட்டு வரப்படுகிறது. இவற்றில் பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தில் உள்ள இயந்திரங்கள் மூலம் அச்சடிக்க இயலாத ஸ்டிக்கர்கள், பதிவேடுகளின் மேலுறை, துண்டு பிரசுரங்கள், படிவங்கள், பிளக்ஸ் பேனர்கள் மற்றும் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும் அவ்வப்போது ஏற்பட்ட அவசரத்தின் அடிப்படையிலும் கீழ்கண்ட அச்சடிக்கும் பணிகள் மற்றும் ஸ்டிக்கர் ரோல்கள் கொள்முதல் ஆகியவற்றை மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி தகுதியான நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலை கோரிய நிறுவனத்திற்கு தகுந்த அலுவலரின் ஆணை பெற்று பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

Sl. No	File No. Work Order No & Date	Description	Qty	Company Name	Total Amount Rs.
1.	P1/158/2020 Dated. 25.06.2020	Printing and Supply of Multicolour Pamphlets for printing of COVID 19 to create awareness among the public with door delivery shop details for essential products	3,50,000 nos	A.K.Enterprises	Rs.5,25,000
2.	P1/164/2020 Dated. 30.06.2020	Printing and Supply of Multicolour Pamphlets for printing of COVID 19 to create awareness among the public with door delivery shop details for essential products for the use of Zone 6, 9 & 10	5,75,000 nos	Maatesh Enterprises	Rs.8,62,500
3.	P1/170/2020 Dated. 30.06.2020	Printing and Supply of COVID -19 Flex Banner in the Size - 4'X3'for the use of Zone -15 with Limit Police Control Room details	1000 Nos	A.K.Enterprises	Rs.2,64,000
4.	P1/172/2020 Dated. 03.07.2020	Printing and Supply of Single Colour Pamphlets for printing of COVID 19 to create awareness among the public with door delivery shop details for essential products	3,00,000 nos	N.V.PEnterprises	Rs.4,50,000

5.	P1/174/2020 Dated. 06.07.2020	Printing and Supply of Positive Patient Quarantine Stickers in A3 Size to create awareness among the public	50,000 nos	A.K.Enterprises	Rs.5,90,000
6.	P1/179/2020 Dated. 09.07.2020	Printing and Supply of Home Quarantine Stickers in Multicolour with Sticker materials A3 size to create awareness among the public	50,000 nos	GloryEnterprises	Rs.5,90,000
7.	P1/180/2020 Dated. 09.07.2020	Printing and Supply of Enumerator Register Multicolour Wrapper Printing with Binding	12,000 nos	N.V.P.Enterprises	Rs.3,00,000
8.	P1/181/2020 Dated. 13.07.2020	Printing and Supply of Public awareness Multicolour Banner (4'X3'Feet)	1000Nos	A.K.Enterprises	Rs.2,64,000
9.	P1/185/2020 Dated. 14.07.2020	Printing and Supply of Focus Register Multicolour wrapper Printing and Binding	3000nos	N.V.P.Enterprises	Rs.75,000
10.	P1/186/2020 Dated. 16.07.2020	Designing, Printing and Supply of Home Quarantine Stickers in A3 Size Green Colour to create awareness among the public	75,000 nos	A.K. Enterprises	Rs.8,85,000
11.	P1/188/2020 Dated. 20.07.2020	Designing, Printing and Supply of Home Quarantine Stickers in Multicolour with Sticker materials A3 size to create awareness among the public	50,000 nos	R.P. Copier Services	Rs.5,90,000
12.	P1/189/2020 Dated. 20.07.2020	Printing and Supply of Multicolour Pamphlets of printing of COVID 19 – Home Quarantine Advisory for Everyone who is undergoing the test	10,000 nos	N.V.P.Enterprises	Rs.42,000
13.	P1/191/2020 Dated. 20.07.2020	Printing and Supply of Positive Patient Quarantine Stickers in A3 size (Brown Colour) to create awareness among the public	50,000 nos	Maatesh Enterprises	Rs.5,90,000
14.	P1/192/2020 Dated. 21.07.2020	Supply of Multicolour Vinyl Sticker Roll 5feet as a precautionary measure to control the spread of Pandemic disease Corona virus	5 rolls	Maatesh Enterprises	Rs.55,875
15.	P1/194/2020 Dated. 27.07.2020	Designing, Printing and Supply of Home Quarantine Stickers in A3 Size Green Colour to create awareness among the public	75,000 nos	A.K.Enterprises	Rs.8,85,000
				Total Amount	**Rs.69,68,375**

"கொரோனா வைரஸ்" தடுப்பு பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட கொள்முதல் மற்றும் அச்சடித்து வழங்கும் பணிகளின் மொத்த செலவீனத் தொகை ரூ.69,68,375/- ஆகும்.

இதற்கான செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொண்டு பின்பு இச்செலவீனத்தினை பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெற்று நேர் செய்யலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் 15 வரையிலான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் "கொரோனா வைரஸ்" தடுப்பு பணிக்கு தேவைப்படும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஸ்டிக்கர்கள், விளம்பர பதாகைகள், பதிவேடுகளின் மேலுறை, துண்டு பிரசுரங்கள், படிவங்கள், பிளக்ஸ் பேனர்கள் அச்சடித்தல் மற்றும் ஸ்டிக்கர் ரோல்கள் கொள்முதல் ஆகியவற்றை தேவைக்கேற்ப அவ்வப்போது தகுந்த அலுவலரின் ஆணை பெற்று மொத்தம் ரூ.69,68,375/-செலவினத்தில் அச்சடித்தல் மற்றும் கொள்முதல் செய்து வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,

2. "கொரோனா வைரஸ்" தடுப்பு பணிக்கு தேவையான எழுதுபொருட்கள் கொள்முதல் மற்றும் அச்சடித்தல் பணிகளுக்கு மேற்கண்ட அட்டவணையின்படி நிறுவனங்களுக்கு பணி ஆணைகள் வழங்கி பணிகளை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
3. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல் - 16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதால், தகுதிவாய்ந்த நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் பெற்று மேற்கண்ட பணியை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
4. பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு ஒப்பம் கோருவதற்கும், பாதுகாப்புத் தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,
5. இதற்கான செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொண்டு பின் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெற்ற பின் நேர் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 28.07.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

****

தி.க.மே.து.ந.க.எண்.அ8/1711/ 2020

தீர்மான எண்.528/2020 **நாள்:05-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - கொரானா நோய் தடுப்பு பணிக்காக - நிரந்திரம் மற்றும் தற்காலிக தூய்மை பணியாளர்கள், மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் வீடுகள் தோறும் கணக்கெடுக்கும் கள ஆய்வாளர்கள் ஆகியோர்களுக்கு உணவு வழங்க முன்பணம் சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர் பெயரில் காசோலையாக பெற்று வழங்குவதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகரில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக மண்டலம் 1 முதல் 15 வரை அனைத்து நிரந்திரம், தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஒட்டுனர்கள் மற்றும் வீடுகள் தோறும் கணக்கெடுக்கும் கள ஆய்வாளர்கள் ஆகியோர்கள் பணியாற்றி வருகின்றனர். ஊரடங்கு காரணமாக இப்பணியாளர்களுக்கு நேரத்தில் உணவு கிடைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே இப்பணியாளர்களுக்கு காலை மற்றும் மதியம் இரண்டு வேளை உணவு வழங்கப்பட வேண்டும்.

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 28.03.2020 நாளிட்ட ஆணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் நிரந்திர தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஒட்டுனர்கள் மற்றும் வீடுகள் தோறும் கணக்கெடுக்கும் கள ஆய்வாளர்கள் ஆகியோர்கள் அனைவருக்கும் 15 நாட்கள் உணவு வழங்குவதற்காக ரூ.3,03,20,000/- முன்பணமாக பெற்று வழங்கப்பட்டது.

மத்திய அரசின் உத்தரவின்படி 15.04.2020 முதல் 03.05.2020 வரையிலான ஊரடங்கு கால நீட்டிப்பு உத்தரவு அறிவிக்கப்பட்டதால் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களான நிரந்திரம், தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஒட்டுனர்கள் மற்றும் வீடு தோறும் கணக்கெடுக்கும் கள ஆய்வாளர்கள் ஆகியோர்களுக்கு காலை மற்றும் மாலை இரண்டு வேளை உணவு வழங்குவதற்கு மண்டலம் 3 முதல் 15 வரையில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவருக்கும் ஊரடங்கு கால நீட்டிப்பு நாட்களான 19 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக (மண்டலம் 1 மற்றும் 2ஐ தவிர்த்து) ரூ.5,77,57,000/- முன் பணமாக பெற்று வழங்கப்பட்டது.

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 04.05.2020 நாளிட்ட ஆணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் நிரந்திரம் தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஒட்டுனர்கள் மற்றும் வீடுகள் தோறும் கணக்கெடுக்கும் கள ஆய்வாளர்கள் ஆகியோர் அனைவருக்கும் 31-05-2020 வரை 28 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ.9,23,82,000/- 28 நாட்களுக்கு (04.05.2020 முதல் 31.05.2020 வரை) ஒரு தினத்திற்கு இரண்டு வேளை உணவு வழங்கும் பொருட்டு ரூ.9,23,82,000/- முன் பணமாக பெற்று வழங்கப்பட்டது.

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 01.06.2020 நாளிட்ட ஆணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் நிரந்திர, தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஒட்டுனர்கள் மற்றும் வீடுகள் தோறும் கணக்கெடுக்கும் கள ஆய்வாளர்கள் அனைவருக்கும் 30.06.2020 வரை 30 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ.9,89,73,000/- 30 நாட்களுக்கு (01.06.2020 முதல் 30.06.2020 வரை) ஒரு தினத்திற்கு இரண்டு வேளை உணவு வழங்கும் பொருட்டு ரூ.9,89,73,000/- முன்பணமாக பெறுவதற்கு அனுமதி பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது,

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 03.07.2020 ஆணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் நிரந்திர, தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஒட்டுனர்கள் மற்றும் வீடுகள் தோறும் கணக்கெடுக்கும் கள ஆய்வாளர்கள் அனைவருக்கும் 31.07.2020 வரை 31 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ.10,00,00,000/-, 31 நாட்களுக்கு (01.07.2020 முதல் 31.07.2020 வரை) ஒரு தினத்திற்கு இரண்டு வேளை உணவு வழங்கும் பொருட்டு ரூ.10,00,00,000/- முன்பணமாக பெறுவதற்கு அனுமதி பெறப்பட்டது.

திக.மே.து.ந.க.எண்.அ8/1711/ 2020

மேலும், மத்திய, மாநில அரசின் உத்தரவின்படி 01.08.2020 முதல் 31.08.2020 வரையிலான ஊரடங்கு கால நீட்டிப்பு உத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளதால், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் நிரந்திரம் தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஒட்டுனர்கள் மற்றும் வீடுகள் தோறும் கணக்கெடுக்கும் கள ஆய்வாளர்கள் அனைவருக்கும் இந்த மாதம் அதாவது 01.08.2020 முதல் 31.08.2020 வரை 31 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ.10,00,00,000/= முன்பணமாக பெறுவது அவசியமாகிறது.

எனவே,

1. மண்டலம் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் நிரந்திரம் தற்காலிக தூய்மை தொழிலாளர்கள், மண்டலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், ஒட்டுனர்கள் மற்றும் வீடுகள் தோறும் கணக்கெடுக்கும் கள ஆய்வாளர்கள் ஆகியோர்களுக்கு இந்த மாதம் அதாவது 01.08.2020 முதல் 31.08.2020 வரை 31 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ.10,00,00,000/= (ரூபாய் 10 கோடி மட்டும்) முன் பணமாக பெற அனுமதியும்
2. மண்டலம் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 31 நாட்களுக்கு உணவு வழங்குவதற்கு அந்தந்த மண்டலங்களுக்கு குறிப்பிட்டுள்ள தொகையினை பிரித்து வழங்குவதற்கும்
3. மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் பிரித்து அளிக்கப்பட்ட முன் பணத் தொகைக்கான பட்டிகள் பெறப்படவும், முன் பணத்தினை திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் பின்னர் நேர் செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

தி.க.மே.து.ந.க.எண்.அ8/ 1711-1/ 2020

தீர்மான எண்.529/2020 **நாள்:05-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - கொரோனா நோய் தடுப்பு பணிக்காக - கவன கள ஆய்வாளர்கள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்பை சேர்ந்த ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்கள் ஆகியோர்களுக்கு உணவு வழங்க முன்பணம் சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர் பெயரில் காசோலையாக பெற்று வழங்குவதற்கு அனுமதி.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 445/2020 நாள்.03.07.2020ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் கவன கள ஆய்வாளர்கள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்பை சேர்ந்த ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 01.07.2020 முதல் 31.07.2020 வரை 31 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ.1,68,27,000/= முன்பணமாக பெறுவதற்கு அனுமதி பெறப்பட்டது.

மேலும், மத்திய, மாநில அரசின் உத்தரவின்படி 01.08.2020 முதல் 31.08.2020 வரையிலான ஊரடங்கு கால நீட்டிப்பு உத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளதால், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் கவன கள ஆய்வாளர்கள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்பை சேர்ந்த ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 01.08.2020 முதல் 31.08.2020 வரை 31 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ.1,68,27,000/= முன்பணமாக பெறுவது அவசியமாகிறது.

எனவே,

1. மண்டலம் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் கவன கள ஆய்வாளர்கள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்பை சேர்ந்த ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்கள் இந்த மாதம் அதாவது 01.08.2020 முதல் 31.08.2020 வரை 31 நாட்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ.1,68,27,000/= முன் பணமாக பெற அனுமதியும்,
2. மண்டலம் 1 முதல் 15 வரையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 31 நாட்களுக்கு உணவு வழங்குவதற்கு அந்தந்த மண்டலங்களுக்கு குறிப்பிட்டுள்ள தொகையினை பிரித்து வழங்குவதற்கும்,
3. மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் பிரித்து அளிக்கப்பட்ட முன் பணத் தொகைக்கான பட்டிகள் பெறப்படவும், முன் பணத்தினை திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் பின்னர் நேர் செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

S.W.M.C.No.A7/1951/2020

Resolution No.530 /2020 **Date:06-08-2020**

Greater Chennai Corporation – Solid Waste Management Department – Engaging Manpower agency to supply 200 Animators & 15 Zonal Supervisors to carry out IEC Activities on outsourcing basis under Swachh Bharat Mission in 15 Zones in Greater Chennai Corporation - for period from 1.10.2020 to 31.03.2021- For Administrative Sanction.

Commissioner of Municipal Administration has requested vide letter dated.24.07.2020, to call for new tender for engaging 200 nos of Animators and 15 nos of Supervisors in Greater Chennai Corporation by adopting the rate approved by SHPC and to enter into new contract through outsourcing for the period from 01.10.2020 to 31.03.2021 or till the date of recommendations of the 15th finance commission come to effect whichever is earlier by adopting tender procedures and conditions as mentioned below.

1. The tender should be floated to engage the outsourcing agency for the period from 01.10.2020 to 31.03.2020 or till the date of recommendations of the 15th Finance commission come to effect whichever is earlier.
2. The outsourcing agency should be selected by following tender procedure mentioned in Tamil Nadu Transparency Act 1998 and Rule 2000 and the remuneration to be adopted as per the schedule of rate in force as approved by the SHPC.

In Greater Chennai Corporation 200 nos of Animators and 15 nos of Supervisors are to be outsourced.

The total cost for engaging Animators & Supervisors in Greater Chennai Corporation is calculated as below.

Category	No of persons	Base rate fixed by committee as per TWAD SOR 2020-21	ESI @3.25% by Employer(in Rs)	EPF @8.33% by Employer(in Rs)	Remuneration cost per day (in Rs)	Remuneration cost per Month (in Rs)	Add 2 % TDS (in Rs)	Add service charges 10 %(shall not exceed more than 10% of column 7)	Total cost per month for a person	Remuneration cost per Month for total strength (In Rs.)	Remuneration cost per six Month for total strength (In Rs)
1	2		4	5	6	7	8	9		10	11
Animator	200	426	13.85	35.49	475.33	14259.92	285.20	1425.99	15971.11	3194222	19165332
Supervisor	15	584	18.98	48.65	651.63	19548.82	390.98	1954.88	21894.67	328420	1970520
										Total	**2,11,35,852**

The total estimated value works out to Rs.2,11,35,852/- (Rupees Two crores eleven lakhs thirty five thousand and Eight hundred and Fifty Two only) for engaging 200 nos of Animators and 15 nos of Supervisors.

Hence,

1. To accord Administrative Sanction for Rs.2,11,35,852/- for engaging 200 Animators & 15 Zonal Supervisors to carry out IEC Activities on outsourcing basis under Swachh Bharat Mission in 15 Zones in Greater Chennai Corporation for the period from 01.10.2020 to 31.03.2021.\

2. To call for online tender and to meet out the expenditure under Swachh Bharat Mission fund.

Sl.No. 1 & 2 above, orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.31.07.2020 is read.

"Sl.No. 1 & 2 are approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."

****

ம.அ.5சு.து/சு2/ந.க.எண்.858/2020

தீர்மான எண்.531/2020 **நாள்:06-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்- 5, பொது சுகாதாரத் துறை - கொரோனா நோய் - தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 646 தற்காலிகமாக பணியாளர்கள் நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.

31.03.2020 அன்று காணொலி மூலம் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு செய்ய பணியாளர்களை (SURVEY WORKERS) மாத ஊதிய அடிப்படையில் ரூ.15,000/- என நிர்ணயம் செய்து மூன்று மாதத்திற்கு பணியமர்த்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மண்டலம் – 5 க்குட்பட்ட கோட்டம்- 49 முதல் 63 முடிய அனைத்து தெருக்களிலும் வீடு வீடாக சென்று காய்ச்சல் இருமல் சளி தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும், மேலும், கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளிலுள்ள வீடுகளில் பொருளாதாரம் சுய விவரம் குறித்த கண்கெடுப்பு செய்ய, 744 பணியாளர்களை (SURVEY WORKERS) 04.04.2020 முதல் மூன்று மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டனர். அதன் விவரம் கோட்ட வாரியாக கீழ்கண்டவாறு

வ. எண்.	கோட்டம்	ஏற்கெனவே உள்ள SHW	ORW ஆக மாறிய பின்பு தேவைப்படும் நபர்கள்	குறிப்பு
1	49	25	43	18 New SHW refilled insectors where more than 150 House hold.
2	50	78	59	
3	51	35	30	
4	52	42	22	
5	53	49	14	
6	54	48	48	
7	55	50	50	
8	56	45	43	
9	57	58	56	
10	58	85	81	
11	59	44	40	
12	60	48	34	
13	61	60	55	
14	62	37	31	
15	63	40	40	
		744	646	

இவர்களது பணி காலம் 03.07.2020 அன்று முடிவடைகிறது. மேலும் தற்போதைய சூழ்நிலையில் இப்பணியானது மேலும் 3 மாத காலத்திற்கு பணியமர்த்த வேண்டியுள்ளது (பொதுத் துறை கம்பியில்லா தந்தி மூலம் பெற்ற செய்தி நாள்.25.06.2020 ன்படி அறிவுறுத்தப்பட்டது)

எனவே, 646 கணக்கெடுப்பு பணியாளர்களுக்கு மட்டும் மேலும் மூன்று மாத காலத்திற்கு ஊதியம் வழங்க வேண்டியுள்ளது.

எனவே,

1. மண்டலம் – 5 ல் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக கோட்டம் – 49 முதல் 63 வரை அனைத்து தெருக்களுக்கும் வீடு வீடாக சென்று காய்ச்சல், இருமல், சளி தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மேலும், கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளிலும் வீடுகளில் பொருளாதாரம் சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 646 பணியாளர்களை (SURVEY WORKERS) மேலும் மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்த அனுமதி வேண்டியும்,

ம.அ.5சு.து/சு2/ந.க.எண்.858/2020

2. மேற்கண்ட பணியாளர்களுக்கு (SURVEY WORKERS) ஊதியமாக ஒரு நபருக்கு மாதமொன்றிற்கு ரூ.15,000/- வீதம் பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு 646 X 15000 X 3 = ரூ.2,90,70,000/- (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூறு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) வழங்கவும் நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. 25.06.2020 அன்று கம்பியில்லா தந்தி தகவல் மூலம் பொதுத்துறை அறிவுறுத்தலின்படி மண்டலம்-5ல் கோட்டம் - 49 முதல் 63 வரை 646 கணக்கெடுப்பு பணியாளர்களுக்கு மேலும் 3 மாத காலத்திற்கு 04.07.2020 முதல் 30.09.2020 வரை பணிகள் மேற்கொள்ளவும்,,
4. இச்செலவின தொகையான ரூ.2,90,70,000/- போதிய நிதியை 20-21-07, கணக்கு குறியீடு 230-70-120-3 ஒதுக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

SWM.C.No.A7/1543/2020

Resolution No.532 /2020 **Date: 07-08-2020**

Greater Chennai Corporation – Solid Waste Management Department – Rehabilitation & Reclamation of Perungudi Dumping Ground through Bio-mining Technology- Revised Detailed Feasibility Report for 6 packages with financial model submitted for Approval – to Accord for Administrative Sanction from the Government Requested – For orders.

Detailed Feasibility Report has been submitted to the Additional Chief Secretary to the Government MA&WS Department, to accord Administrative Sanction for the project of Reclamation of Perungudi Dumping Ground through Bio mining at an estimated cost of Rs. 37112.32 lakhs (Thirty Seven thousand one Hundred and Twelve point Thirty Two lakhs) Vide Council Resolution No.411/2020, Dated: 25.06.2020 & Letter to Government addressed to the Additional Chief Secretary, MA & WS Department dated: 25.06.2020.

Subsequently During the meeting by Special Secretary (Finance) suggested to arrive at the revised Biomining Fee using two different models namely (1) cost assessment when all vehicles are deployed on rental and (2) cost assessment when all vehicles are procured but the depreciation is calculated the straight line method of depreciation. Based on the suggestions of Special Secretary (Finance) two models were prepared and presented to Special Secretary (Finance) on 23.07.2020 and 25.07.2020. During the meeting held on 25.07.2020 it was decided to determine the Biomining fee (BMF) through depreciation model which comes out to be Rupess 1070.77 per cubic meter. The revised cost is presented in the following table.

Table-A: Biomining Project Cost of the Packages

Package	Total Area (acres)	Total Waste (m3)	Biomining Fee Rs/cum	Project Cost in Rs. Lakhs
Package-1	29.88	541472.91	1070.77	5797.93
Package-2	48.95	574315.16	1070.77	6149.59
Package-3	35.37	474132.78	1070.77	5076.87
Package-4	22.38	470321.24	1070.77	5036.06
Package-5	35.49	470130.21	1070.77	5034.01
Package-6 A	53.09	532750.39	1070.77	5704.53
Sub Total (A)	**225.16**	**3063122.69**		**32799.00**

Table-B: Project Cost of Interim Landfill System (ILS)

Package	Description	Value (in Rupees Lacs)
Package-6 B	Interim Land Fill System (ILF cost)	1968.78
	Sub Total (B)	**1968.78**

Table-C: Environmental Monitoring Cost

S.no	Type of Activity	Cost in Rs. Lakhs
1	Water sprinkling for Controlling air emission	19.71
2	Environmental Monitoring cost	180.00
	Sub Total (C)	**199.71**

Table-D: Social Compliance Cost

S.no	Type of Activity	Cost in Rs. Lakhs
1	IEC activities cost	97.10
	Sub Total (D)	**97.10**

The total cost to GCC is computed in the following table:

Table-E: Total Project Cost

S.No.	Cost Head	Value (in Rupees Lacs)
1.	Total Biomining Project Cost (A)	32799.00
2.	Interim Landfill System Cost (ILF) (B)	1968.78
3.	Environmental Monitoring Cost (C)	199.71
4	Social Cost (IEC Activities) (D)	97.10
	Total Project Cost	**35064.59**

It is proposed to take up the projects under SBM fund.

The project will be executed through PMC (Anna University) for overall supervision, monitoring and certification of various activities to be carried out by the Contractor including verification and certification of payment invoices.

Hence to approve the revised Detailed Feasibility Report for the project "Reclamation of Perungudi Dumping Ground through Biomining" at an estimated cost of Rupees 35064.59 lakhs (Thirty Five thousand Sixty four point Fifty Nine lakhs). Orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.06.08.2020 is read.

" Approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."

****

பொ.து.ந.க.எண்.இ9/ 11424/ 2020

தீர்மான எண்.533 / 2020 **நாள்:07-08-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்- 5 - திரு.கே. அங்கைய்யா, தூய்மை பணியாளர், பணி எண்.734339, கோட்டம்-58, பகுதி-14 அவர்கள் 03.02.2020 அன்று தன்விருப்ப ஓய்வு கோரிய மனு - சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு தனியரை 02.05.2020 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்லவிடுவிக்கப்பட்டதற்கு - பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-58, பகுதி-14ல் தூய்மை பணியாளராக தொடர்ந்து 21 வருடங்கள் மேலாக பணிபுரிந்து வரும் திரு.கே.அங்கைய்யா ஆகிய தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தன்னை, தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு கோரி, 03.02.2020 நாளிட்ட மனு, சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

தனியரின் பணிப்பதிவேட்டின்படி திரு.கே.அங்கைய்யா பணிஎண். 734339 அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை பணியாளராக பழைய மண்டலம் -3, பகுதி-18ல், 06.01.1998 அன்று பணி நியமனம் செய்யப்பட்டு, தொடர்ந்து 21 வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்து, தற்போது மண்டலம்-5ல் தூய்மைபணியாளராக தொடர்ந்து பணியாற்றி வரும் தனியருக்கு, அப்பதவியில் 06.01.1998 முதல் பணிவரன்முறைப்படுத்தியும், 06.01.1999 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், தனியருக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் மீது குற்றச்சாட்டுக்கள் நிலுவை இல்லை எனவும், பிறந்த தேதி 15.08.1965 என்பதால், 55 வயது மற்றும் தனியரின் வயது முதிர்வு ஓய்வு பெறும் நாள் 31.08.2025 ஆகும்.

தலைவர், சென்னை மாநகராட்சி தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிட், சிந்தாதிரிப்பேட்டை அவர்களின் 27.02.2020 நாளிட்ட கடிதத்தில், தனியருக்கு ரூ.3,42,295 (ரூபாய் மூன்று லட்சத்து நாற்பத்திரெண்டாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) கடன் நிலுவை தொகை உள்ளது என சான்றளிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை துணை கண்காணிப்பாளர் / விழிப்பு அலுவலர் அவர்களின் 15.04.2020 நாளிட்ட கடிதத்தில், அன்னார் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 23.04.2020 நாளிட்ட குறிப்பில், திரு.கே.அங்கைய்யா, தூய்மைபணியாளர், பணி எண்.734339, கோட்டம்-58, பகுதி-14 அவர்களின் 03.02.2020 நாளிட்ட தன்விருப்ப ஓய்வின் மனுவினை ஏற்கப்பட்டு, சென்னை மாநகராட்சி தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிட், சிந்தாதிரிப்பேட்டை அவர்களுக்கு ரூ.3,42,295 (ரூபாய் மூன்று லட்சத்து நாற்பத்திரெண்டாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) கடன் நிலுவை தொகை மற்றும் இறுதி ஊதிய சான்றின்படி பண்டிகை முன்பணம் ரூ.4,000/- (ரூபாய் நான்காயிரம் மட்டும்) மற்றும் இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை அவர்களால் தெரிவிக்கப்படும் தணிக்கைதடை மற்றும் நீண்டகால முன்பண ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், இத்தொகையினை தனியருக்கு வழங்கப்படும் ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, திரு.கே.அங்கைய்யா, தூய்மைபணியாளர், கோட்டம்-58, பகுதி-14, மண்டலம்-5 அவர்களை, சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு, 02.05.2020 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

பொ.து.ந.க.எண்.இ9/ 11424/ 2020

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் 27.04.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களின் பின்னேற்பு ஆணைக்குப்பட்டு, தனியரை 02.05.2020 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டு இவ்வாணை தனியருக்கு சார்வு செய்யப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களின் 20.07.2020 நாளிட்ட கடிதத்தின்படி, திரு.கே.அங்கையா, தூய்மைபணியாளர், பணி எண்.734339, கோட்டம்-58, பகுதி-14 அவர்களை சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு 02.05.2020 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல விடுவிக்கப்பட்டதற்கு, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 06.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தன்விருப்ப ஓய்வில் செல்ல விடுவிக்கப்பட்டதற்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.இ12/3347/ 2020

தீர்மான எண்.534/2020 **நாள்:07-08-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - கருணை அடிப்படை பணி நியமனம் தொடர்பாக - அரசாணைகளின் விரிவான வழிகாட்டுதல்கள் - பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்த அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியிடையே மரணமடைந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு சம்பந்தப்பட்ட அரசாணைகளின்படி தகுதியாக உள்ள வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கப்பட்டு வருகிறது.

பணியிடையே காலமான அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்குவது தொடர்பாக இதுவரை வெளியிடப்பட்டுள்ள அரசாணைகளை தொகுத்து அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, நாள்.23.01.2020ல் கருணை அடிப்படையில் பணி வழங்குவதற்கு விதிகளை பின்பற்றி கீழ்கண்டவாறு நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ABSTRACT

Labour and Employment Department – Appointment on Compassionate Ground – Comprehensive Guidelines – Orders – Issued.

LABOUR AND EMPLOYMENT (Q1)DEPARTMENT

G.O.(Ms).No.18 Dated. 23.01.2020

விகாரி வருடம், **தை**-9

திருவள்ளுவர் ஆண்டு 2051

Read:-

1. G.O.(Ms.) No.225 Labour Department, Dated 15.02.1972
2. G.O.(Ms.) No.1025,Labour and Employment Department,Dated 22.11.1976.
3. G.O.(Ms.) No.1083, Labour and Employment Department, Dated 18.12.1976.
4. G.O.(Ms) No.560, Labour and Employment Department, Dated 03.08.1977.
5. Memorandum No.34107/N-1/77-1, Labour and Employment Department, Dated 04.05.1978.
6. G.O.(Ms.) No.998, Labour and Employment Department, Dated 02.05.1981.
7. G.O.(Ms.) No.1505, Labour and Employment Department, Dated 14.07.1981.
8. G.O.(Ms.) No.8, Employment Services Department, Dated 07.01.1987.
9. G.O.(Ms.) No.29, Employment Services Department, Dated 07.05.1988.
10. G.O.(Ms.) No.2899, Labour and Employment Department, Dated 23.12.1988.
11. G.O.(Ms.) No.719, Labour and Employment Department, Dated 19.04.1989.
12. G.O.(Ms.) No.1499, Labour and Employment Department, Dated 03.08.1989.
13. G.O.(Ms.) No.40, Labour and Employment Department, Dated 05.01.1990.
14. G.O.(Ms.) No.554, Labour and Employment Department, Dated 09.04.1990.
15. G.O.(Ms.) No.1044, Labour and Employment Department, Dated 23.11.1990.
16. Government Letter No.43007A/Q/90-3,, Labour and Employment Department, Dated 04.03.1991.
17. Government Letter No.2286/Q1/90-2, Labour and Employment Department, Dated 17.06.1991.
18. Government Letter (Ms.) No.282, Labour and Employment Department, Dated 09.10.1991.
19. G.O.(Ms.) No.23, Labour and Employment Department, Dated 10.02.1993.
20. G.O.(Ms.) No.155, Labour and Employment Department, Dated 16.07.1993.
21. Government Letter No.2941/Q1/94-1, Labour and Employment Department, Dated 01.03.1994.
22. G.O.(Ms.) No.120, Labour and Employment Department, Dated 26.06.1995.
23. G.O.(Ms.) No.9, Labour and Employment (Q1) Department, Dated 19.01.1998.
24. G.O.(Ms.) No.70, Labour and Employment Department, Dated 02.07.1998.

25. G.O.(Ms.) No.78, Labour and Employment (Q) Department, Dated 17.07.1998.
26. G.O.(Ms.) No.134, Labour and Employment (Q1) Department, Dated 22.10.1998.
27. G.O.(Ms.) No.143, Labour and Employment (Q1) Department, Dated 11.11.1998.
28. G.O.(Ms.) No.198, Labour and Employment (Q1) Department, Dated 10.11.1999.
29. G.O.(Ms.) No.118, Labour and Employment (Q1) Department, Dated 24.07.2000.
30. G.O.(Ms.) No.168, Labour and Employment (Q1) Department, Dated 19.10.2000.
31. Government Letter (Ms.) No.34, Labour and Employment (Q1) Department, Dated 16.04.2002.
32. G.O.(Ms.) No.17, Labour and Employment Department, Dated 07.02.2003.
33. Government Letter (Ms.) No.54, Labour and Employment (Q) Department, Dated 23.05.2006.
34. G.O.(Ms.) No.61, Labour and Employment (Q1) Department, Dated 19.07.2006.
35. Government Letter (Ms.) No.126/Q-1/2006, Labour and Employment, Department Dated 16.09.2006.
36. G.O.(Ms.) No.135, Labour and Employment (Q2) Department, Dated 04.10.2006.
37. G.O.(Ms.) No.42, Labour and Employment (Q1) Department, Dated 12.03.2007.
38. Government Letter (Ms.) No.202, Labour and Employment Department, Dated 08.10.2007.
39. G.O.(Ms.) No.216, Labour and Employment (Q1) Department, Dated 15.11.2007.
40. Government Letter (Ms.) No.3/Q1/2010, Labour and Employment Department, Dated 11.01.2010.
41. Government Letter (Ms.) No.4/Q1/2010, Labour and Employment Department, Dated 11.01.2010.
42. Government Letter (Ms.) No.86/Q1/2010, Labour and Employment (Q1) Department, Dated 04.05.2010.
43. G.O.(Ms.) No.165, Labour and Employment (Q2) Department, Dated 30.08.2010.
44. G.O.(Ms.) No.155, Labour and Employment (Q1) Department, Dated 10.12.2014.
45. G.O.(Ms.) No.80, Labour and Employment (Q1) Department, Dated 02.03.2016.
46. G.O.(Ms.) No.78, Labour and Employment Department, Dated 21.04.2017.
47. Common order passed by the Madurai Bench of Madras High Court in W.P.(MD) No.6325 of 2014, dated 29.08.2018, W.P. (MD) Nos.4129, 7045, 16624 and 20786 of 2014 and W.P.(MD) Nos.19455, 19530 of 2018, dated 24.09.2018.
48. Order passed by the High Court of Madras in W.P.No.26872/2018 and W.M.P.No.31213 of 2018, dated 09.04.2019.
49. Interim orders passed by the High Court of Madras and the order passed by the Madurai Bench of Madras High Court in W.P.No.31399/2014 and 25806/2014 dated 16.04.2019 and W.P (MD) No.20900 of 2015, dated 19.06.2019 respectively.

ORDER:

The scheme of compassionate ground Appointment was introduced by the Government in the year 1972. Following are the Salient features of the scheme.

- Employment is to be provided by relaxing the normal procedure of recruitment through exployment exchanges to the legal heirs of the Government Servants who dies in tharness leaving his family in indigent circumstances.
- It is a welfare measure of the Government to help the legal heirs of the deceased Government Servants appreciating their service rendered by them for the Government.
- Compassionate Ground appointment cannot be claimed as matter of right. It is a scheme devised by the Government to help the needy legal heirs whose lives are at distress after the Government Servants dies in harness.

2. Since the introduction of the scheme, several guidelines / instructions have been issued from time to time. The orders mainly relate to the modalities to be adopted in respect to several factors like the age of the applicant, time limit for applying, education and other qualification of the applicant, persons eligible for applying, procedure to be followed by various appointing authorities etc.

3. The Honourable Madurai Bench of Madras High Court in its order dated 19.06.2019 in W.P.(MD) No.20900 of 2015 has directed as follows:-

" The Chief Secretary to the Government has to consider the entire scheme of compassionate appointment and review the situation and formulate the guidelines/conditions and thereafter to issue consolidated instructions to all the Departments enabling them to follow the same strictly and only to provide appointment to the deserving families and the families of the Government Servants in distress and the Chief Secretary should ensure that such special scheme are not utilized by taking undue advantage or to provide one Government appointment to one family of the Government servant. The very purpose and object of the scheme must be to review or to consider and the suitable guidelines/instructions are directed to be issued to all the Departments enabling them to maintain the consistency and implement the scheme uniformly without violating the constitutional provisions."

4. Almost similar instructions have been issued in respect of Compassionate Ground Appointment in the orders of Honourable High Court of Madras in W.P.No.26872 of 2018 and W.M.P.No.31213 of 2018 dated 09.04.2019 and W.P.Nos.31399 and 25806 of 2014 dated 16.04.2019 etc. Based on the above orders of the Honourable High Court the Government have examined the whole issue of compassionate ground appointment in detail and hereby issue the following comprehensive guidelines in supersession of all the earlier orders issued in the references 1 to 46 read above.

PERSONS WHOSE LEGAL HEIRS ARE ELIGIBLE FOR CONSIDERATION UNDER COMPASSIONATE GROUND APPOINTMENT

(i) Government Servants who die in harness.
(ii) Government Servants who retire on Medical invalidation.(within the age of 53)
(iii) Defence services personnel who are killed / disabled in action and who die in harness.
(iv) The Legal heir or dependants of missing government Servants, may be considered when a competent court declares that the missing Government Servant is dead in view of the provisions of sections 107 and 108 of the Indian Evidence Act 1872.
(v) Government Servants who die under suspension and yet to reach the age of superannuation.
(vi) The dependants of the persons belonging to scheduled castes killed in a communal clash.

PERSONS WHOSE LEGAL HEIRS ARE NOT ELIGIBLE FOR CONSIDERATION UNDER COMPASSIONATE GROUND APPOINTMENT

(i) Persons who are retained in service under Fundamental Rule 56(1) (c) after the date of superannuation.
(ii) Persons who are under Temporary appointments, consolidated pay, daily wages, contract appointments and whose services are not regularized.
(iii) Persons who do not come under regular time scale of pay.

LEGAL HEIRS / NEAR RELATIVES OF THE DECEASED GOVERNMENT SERVANT / PERSON WHO ARE ELIGIBLE FOR COMPASSIONATE GROUND APPOINTMENT

(i) Son / Unmarried Daughter / Wife / Husband / legally adopted son / legally Unmarried adopted daughter / widowed daughter / divorced daughter / deserted daughter of the deceased Government servant.
(ii) Father/Mother and unmarried brothers and unmarried sisters of the unmarried deceased Government Servants.
(iii) Married daughter of the deceased Government Servant who is otherwise eligible.
(iv) If any person, in the deceased Government Servant's family was employed even before the death of the Government Servant but was living separately without extending any help to the family, then the case of other eligible dependant will be considered.

(v) If any dependant/dependants of deceased Government Servant is / are employed in Military Service, one of the other dependents is eligible for appointment under compassionate ground.

(vi) If any member of the deceased Government Servant's family is working on Temporary / Part time basis such as noon-meal organizer and helpers, and those who work on daily wages, the other dependents of the family may be considered for providing appointment.

NOMINATION

Compassionate ground appointment should be given to the wife/husband of the deceased Government Servant or only to the person nominated by the wife/husband of the deceased Government Servant subject to eligibility.

TIME LIMIT OF PREFER THE APPLICATION

The application for the compassionate ground appointment may be submitted within 3 years from the date of death of the Government Servants.

AGE LIMIT FOR THOSE ELIGIBLE UNDER COMPASSIONATE GROUND APPOINTMENT

(i) The minimum age is 18 years at the time of submitting application for compassionate ground appointment.

(ii) The maximum age limit for the spouse/father/mother is 50 years on the date of death of the Government servant.

(iii) The maximum age limit for the son or daughter of the deceased Government Servant and unmarried brother/unmarried sister of the unmarried deceased Government Servant is 40 years at the time of applying.

POSTS THAT CAN BE FILLED UP UNDER COMPASSIONATE GROUND APPOINTMENT

Compassionate Ground Appointments shall be made to the posts in "C and D Groups" only.

FAMILY TO BE IN INDIGENT CIRCUMSTANCES TO BE ELIGIBLE UNDER COMPASSIONATE GROUND APPOINTMENT

(i) The appointing authorities shall examine the financial condition of the family of the deceased Government servant and offer job to an eligible member of the family only after satisfying themselves that, but for the provision of employment, the family will not be able to meet the crisis.

(ii) A family having annual income of less than Rupees 2 lakhs only will be treated to be in indigent circumstances.

(iii) The family pension of the deceased employee and the immovable property like living house of the employee need not be taken into account while assessing the income of the family. However income received from the movable/immovable properties in the name of the Government Servant's family members should be taken into account. Certificate is to be issued by the jurisdiction Tahsildar.

(iv) In the case of the deceased Government servant who belong to other State but worked in Tamil Nadu Government Service, they should obtain the requisite certificate from the Tahsildar of his place of residence in Tamil Nadu and also from the Revenue Divisional Officer or Deputy Collector of his native State.

(v) The compassionate ground appointment will not be considered:-

(a) In case any person of the deceased Government Servant's family is in regular employment in Government/Private Enterprises.

(b) The wife of the deceased Government Servant who applied for appointment for herself is remarried.

ALTERNATIVE APPLICATION

If the application (legal heir of deceased Government Servant) died after applying for compassionate ground appointment, an alternative application may be accepted from the another legal heir of the deceased Government Servant, subject to conditions prescribed for compassionate ground appointment.

RESERVATION

Rule of reservation is not applicable to compassionate ground appointment.

UNDERTAKING

(i) If son or daughter is being given compassionate ground appointment, undertaking should be taken from them that they will support the mother/father as the case may be.

(ii) If married daughter is being given compassionate ground appointment, undertaking to be taken that she will financially support the family of the deceased Government Servant.

PROCEDURE FOR PROCESSING APPLICATIONS

(i) Dependent of a deceased Government servant should apply for appointment on compassionate grounds only to that Office, where the Government servant was in service at the time of his death.

(ii) The Head of the Office should then verify the facts in the petition like the date of death, the indigent circumstances of the family, the eligibility of the applicant for employment on compassionate grounds with reference to his educational qualifications, etc.

(iii) After verification, the Head of the Office should, within a month from the date of receipt of application submit the application along with his report to the Head of the Department indicating also whether any vacancy exists in his office for providing employment to the applicant.

(iv) The date of death of Government Servant should be taken for fixing seniority for making appointments under compassionate grounds.

(v) After considering the request, if any vacancy exists either in the Office in which the deceased Government servant was working at the time of his death or in his department, the Head of the Department should issue orders of appointments within 15 days from the date of receipt of the report from the Head of the Office, provided the applicant satisfies all conditions.

(vi) If any relaxation is necessary, he should send necessary proposals within 15 days to the Government in administrative Department for orders.

(vii) In case the Head of the Department finds that there is no vacancy in any of his offices and none is likely to occur in the near future he should send the name and all relevant particulars to the Collector of the District in which the deceased Government servant last worked.

(viii) The Collector of each District should maintain a Special Register for this purpose and enter therein the name and other details of such dependants.

(ix) Whenever a vacancy in the category of Office Assistant/Record Clerk/Junior Assistant/Typist, etc., arises in any Department including that of the Head of the Department referred to in instruction above, the head of the Department should first address the Collector of the District in which the vacancy has arisen and find out whether any dependant of a deceased Government servant is available for consideration for appointment to that post.

(x) On receipt of such enquiry from ahead of Department, the Collector shall send the name or names and details of dependant from the Special Register, depending upon the number of vacancies and as per the seniority, for consideration for appointment in that Department.

(xi) Before notifying any such vacancy to the Tamil Nadu Public Service Commission or Employment Exchanges, each Head of the Department should first address the Collectors and only after obtaining from them a certificate of non-availability of the candidate in the Special Register maintained by them with reference to instruction (X) above, the Tamil Nadu Public Service Commission/Employment Exchange should be addressed.

(xii) The District Collectors should send a quarterly report to the Government in Labour and Employment Department to watch the progress of the "Special Register" proposed for dependents of the deceased Government Servant. The reports should be sent by 15th of the month following the quarter.

(xiii) The District Collectors, Heads of Departments and all other appointing authorities have to follow the above instructions whenever vacancies are not available in their departments for providing of compassionate ground appointment as per the requisite qualifications to the dependants of the deceased Government servants.

(xiv) Appointment on compassionate grounds shall be made only against the actual vacancies and no supernumerary posts shall be created.

REGULARIZATION

(i) All the Head of the Departments/Collectors should take Speedy action to regularize the services of the candidates appointed on compassionate grounds as per the rules **within one year.**

(ii) Those appointed under Compassionate Grounds before 01.02.2016 with/without any relaxation will be regularized as per G.O.(Ms).No.80, Labour and Employment (Q1) Department, dated 02.03.2016.

(iii) In G.O.(Ms).No.100, Personnel and Administrative Reforms Department, dated 01.08.2018 the procedure of obtaining concurrence from TNPSC for regularizing the services of the individual appointed under compassionate grounds has been dispensed with.

GENERAL

(i) The appointing authorities are responsible for satisfying themselves about the indigent circumstances of the family of the deceased Government servant before appointment is offered.

(ii) The candidates seeking employment under the scheme should possess all the prescribed qualifications for the posts concerned.

(iii) The concession under the scheme will not be granted to more than one dependant in the family of the deceased Government Servant.

(iv) The applicants for appointment on compassionate grounds should also send a declaration at the end of the application form in the format prescribed which should be countersigned by the appointing authority/Head of Office.

(v) Compassionate ground appointment to the post of Assistant in the Departments of Secretariat shall be made by the Personnel and Administrative Reforms Department for which applications received by the various departments shall be processed and recommended by the concerned departments.

(vi) Appointment to the posts of Office Assistants and Record Clerks in the Department of Secretariat shall be made by the respective Departments in the exiting vacancies. The appointing authority shall take necessary action for issue of orders after observing the guidelines in vogue.

பொ.து.ந.க.எண்.இ12/3347/ 2020

(vii) If widow of deceased Government Servant is not educationally qualified for appointment she could be given a job like that of a sweeper.

5. The Government hereby direct that the departments of Secretariat, District Collectors, Heads of Departments and all other appointing authorities have to follow these instructions for providing compassionate ground appointment /regularization of their services.

6. The departments of Secretariat are requested to ensure that the Head of the Departments and appointing authorities scrupulously follow these instructions.

(BY ORDER OF THE GOVERNOR)

K. SHANMUGAM,
CHIEF SECRETARY TO GOVERNMENT.

எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் இனங்களில், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, நாள்.23.01.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் அமுல்படுத்த சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 07.08.2020 **நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.**

"அரசாணையை அமுல்படுத்த சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண்.இ9/ 11174/ 2020

தீர்மான எண்.535 / 2020 **நாள்:10-08-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - முதலமைச்சர் பொது நிவாரண நிதி - கோவிட்-19 - பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா தொற்று நோய் பணியில் ஈடுபட்டு பணிக்காலத்தில் காலமான 8 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு-மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து - அரசாணையின்படி ரூ.25 லட்சம் (ரூபாய் இருபத்தைந்து லட்சம்) வீதம் காசோலையினை வழங்குவதற்கு அனுமதி.

கொரோனா தொற்று நோய் போராட்டத்தில் முன் நின்று பணிபுரியும் அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவத்துறையைச் சார்ந்த பணியாளர்கள், காவல்துறை மற்றும் பிற அரசு துறையைச் சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்பின் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் ஏதேனும் எதிர்பாராதவிதமாக இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு நிவாரணமாக ரூ.10 லட்சம் ரூபாய் வழங்குவதற்கு பதிலாக ரூ.50 லட்சம் வழங்கப்படும் எனவும், குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் அரசுப்பணி வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.04.2020 நாளிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் 28.07.2020 நாளிட்ட நேர்முக கடிதத்தில், மேற்காணும் பொருள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகையை பெறுவதற்குரிய முன்மொழிவுகளுக்கான படிவம் ஆகியவற்றுடன் அரசுக்கு அனுப்புவதற்குரிய வழிகாட்டுதல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

G.O.(Ms.)No.403, Revenue and Disaster Management Department Disaster Management Wing, D.M.I.(1) section, Dated 05.08.2020ல் பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா தொற்று நோய் தடுப்புப் பணியில் ஈடுபட்டு, நோய் தொற்றுக்குள்ளாகி, இறந்து போன கீழ்காணும் 8 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.25 லட்சத்தை காசோலையாக அல்லது அஞ்சலக சேமிப்பு வங்கி கணக்கு மூலமாக வழங்குவதற்கு அரசு நிதியிலிருந்து (CMPRF) ரூ. 2 கோடி (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	காலமான பணியாளரின் பெயர் / பணி எண் (திருவாளர்கள்)	பதவி துறை / மண்டலம்	முதன்மை வாரிசுதார் பெயர் / உறவு முறை
1	எஸ்.சேகர் 712073	எஸ்.எம்.இ.பி பணியாளர் மண்டலம்-5, கோட்டம்-50 சுகாதாரத்துறை	S.தனலட்சுமி (மனைவி)
2	அரியநாயகி 784528	மண்டலம்-8, கோட்டம்-104, பகுதி-23 தூய்மைப்பணியாளர்	S.அலெக்ஸ் (கணவர்)
3	எல்.டில்லிபாபு 820876	தூய்மைப்பணியாளர் மண்டலம்-2, கோட்டம்-21, பகுதி-5	D.நந்தினி (மனைவி)
4	ஜெ.சங்கர் 818395	தூய்மைப்பணியாளர் மண்டலம்-10, கோட்டம்-132, பகுதி-31	S.தமிழ்செல்வி (மனைவி)
5	எம்.தேவராஜ் 754010	மலேரியா தூர்வாரும் பணியாளர் மண்டலம்-5,கோட்டம்-59, பகுதி-14, சுகாதாரத்துறை	C.ரங்கநாயகி (மனைவி)

6	எ.பசவம்மா 726103	தூய்மைப்பணியாளர் மண்டலம்-6, கோட்டம்-74, பகுதி-17	I.சார்லஸ் (மகன்)
7	எஸ்.ஆறுமுகம் 160452	அலுவலக உதவியாளர் மருத்துவ சேவைகள் துறை	A.தமிழ்செல்வி (மனைவி)
8	கே.சுகுமாறன் 862431	மயான உதவியாளர் மண்டலம்-13, சுகாதாரத்துறை	S.வள்ளி (மனைவி)

அரசு துணைச்செயலாளர் மற்றும் பொருளாளர் அவர்களின் 06.08.2020 நாளிட்ட நேர்முக கடிதத்தில் மேற்காணும் காலமான 8 பணியாளர்களுக்குரிய கருணைத்தொகைக்கான காசோலை பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் பெயரில் பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு

காசோலை விவரம் :-

பெயர் - ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி
காசோலை எண் - 973732
நாள் – 06.08.2020
வங்கி - இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
கிளை – தலைமைச்செயலகம், சென்னை
தொகை - ரூ.2,00,00,000/- (ரூபாய் இரண்டு கோடி மட்டும்)

எனவே, காலமான 8 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.25 லட்சம் (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்) வீதம் காசோலையாக வழங்குவதற்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 08.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

“காலமான 8 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணைத் தொயினை காசோலையாக வழங்குவதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.

****

ம.அ.1.ந.க.எண்.பி1/ 7555 / 2020

தீர்மான எண்.536 / 2020 **நாள்:10-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1 பகுதி-1 (ம) 2 - வார்டு 1 முதல் 9 வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர்வாரி வெளியேற்றிட தேவைப்படும் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் ஆறு மாதத்திற்கு (01.02.2020 முதல் 31.07.2020) பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டது - 01.08.2020 முதல் 31.01.2021 வரை பணி கால நீட்டிப்பு செய்யஅனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1,2 (ம) 3, வார்டு 1 முதல் 14 வரை உள்ளடக்கிய கோட்டங்களாகும். இப்பகுதிகள் 26.69 ச.கி.மீ பரப்பளவு உள்ளடக்கியது ஆகும். வார்டு 1 முதல் 14 வரை உள்ள பகுதிகள் மொத்த சாலைகள் 1498 இதில் குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை 87,418 ஆகும். சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் 25.10.2011ல் திருவொற்றியூர் மற்றும் கத்திவாக்கம் நகராட்சிகள் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. நகராட்சியாக செயல்பட்டபோது மேற்கு பகுதிகளில் வார்டு எண் 1 முதல் 7 வரை உள்ள பகுதிகள் பாதாள சாக்கடை கட்டமைப்பு இல்லாததாலும் மற்றும் வார்டு எண் 8 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் பாதாளசாக்கடை கட்டமைப்பு ஒரு சில பகுதிகளை தவிர தேவையான அளவு உள்ளதாலும் தற்போது மண்டலம்-1ல் பயன்பாட்டிலுள்ள பக்க கால்வாய்கள் எண்ணிக்கை 360 (54.15 கி.மீ) அமைக்கப்பட்டு மழைநீர் சிறு பாலங்கள் வழியாக பொதுபணித்துறை பக்கிங்காம் கால்வாய் வழியே கடலில் சென்று அடைகிறது.

26.04.2013 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் தீர்மானம் எண் 204/2013 பொருள் எண் .27, பக்கவாட்டு கால்வாய் பணிகளுக்கு 64 பணியாளர்களை பணியில் அமர்த்த மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி வார்டு எண் 1 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் சேர்ந்துள்ளதால் மழை நீர் தேக்கம் அடைந்து, சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இவற்றை தவிர்த்திட போர்கால அடிப்படையில் பக்க கால்வாய்களில் சேர்ந்துள்ள மண் மற்றும் கழிவுகளால் கொசு உற்பத்தி ஆகாமல் தடுத்திடவும் அக்கால்வாய்களில் தூர்வாரி அகற்றிட தேவைப்படும் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் தினக்கூலி அடிப்படையில் ஆறு மாதத்திற்கு (01.02.2020 முதல் 31.07.2020) ஆணையர் அவர்களின் 03.03.2020 நாளிட்ட அனுமதி பெற்று பணிகள் நடைபெற்று வருகிறது

உதவி செயற்பொறியாளர் / பகுதி -1 மற்றும் 2 அவர்கள் 22.07.2020 நாளிட்ட குறிப்பில் 01.02.2020 முதல் 31.07.2020 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் நிறைவடைந்த நிலையில் இனிவரும் காலம் மழை காலம் என்பதால் பொது மக்களின் நலன் கருதி பக்க கால்வாய்களில் அடைப்புகள் ஏதும் ஏற்படாமல் இருப்பதற்கு கால்வாய்களில் தூர்வாரும் பணிக்கு பகுதி-1க்கு 12 பணியாளர்களும் மற்றும் பகுதி-2க்கு 16 பணியாளர்களும், கால நீட்டிப்பு செய்ய வேண்டியது அவசியமாகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட உதவி செயற்பொறியாளர் அவர்களின் குறிப்பின் அடிப்படையில் மண்டலம்-1ல் வார்டு 1 முதல் 9 வரையிலான பகுதிகளில் உள்ள பக்க கால்வாய்களுக்கு நாள் ஒன்றுக்கு 500 .மீட்டர் ஒரு நபர் வீதம் 3 நாட்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் (54.06 கி.மீ) NULM மூலம் தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை கொண்டு பக்க கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

வ. எண்	வார்டு எண்	தெருக்களின் எண்ணிக்கை	தெருக்களின் நீளம்/மீ	பக்ககால்வாய் எண்ணிக்கை	நீளம்/மீ	பக்க கால்வாய் தூர்வாரும் பணிக்கு தேவைப்படும் (NULM) பணியாளர்கள்	குறிப்பு
1	1	119	18779	61	10869	5	10869÷500மீ÷ 3
2	2	106	11009	93	10110	6	
3	3	104	21017	-	-	0	
4	4	148	18805	80	11135	1	

5	5	129	19434	-	-	2	
6	6	194	28668	97	16007	6	
7	7	145	26884	27	5339	2	
8	8	91	9015	-	-	4	
9	9	81	8771	1	600	2	
மொத்தம்		**1117**	**162382**	**359**	**54.06**	**28**	

மேலே பட்டியலில் குறிப்பிட்டுள்ள அட்டவணையின் படி வார்டு 1 முதல் 9 வரையிலான பகுதிகளுக்கு பக்க கால்வாய்களின் எண்ணிக்கை 359 , (54.06 கி.மீ உள்ளது) இக்கால்வாய்களில் உள்ள மண் மற்றும் கழிவுகள் அகற்றிட தினக்கூலி அடிப்படையில் NULM பணியாளர்களுக்கு பார்வை 2ல் கண்டுள்ள சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ.379/- வீதம் 28 பணியாளர்கள் 184 நாட்களுக்கு பணியமர்த்த (01.08.2020 முதல் 31.01.2021 வரை) (ரூ.379X28X184=ரூ.19,52,608/-) ரூ.19.53 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது

. மண்டலம்-1ல் 2020-21 ஆம் ஆண்டு வருவாய் நிதி, பிரிவு எண் 40-41-03, கணக்கு குறியீட்டு எண் 230-150-100ல் ரூ.7.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ3,73,60,304/- செலவுகள் மேற்கொள்ளப்பட்டு 27.07.2020 நாளிட்ட தேதியில் ரூ.3,26,39,696/- இருப்பு உள்ளது

எனவே,

1) மண்டலம்-1 பகுதி-1, (ம) 2 வார்டு 1 முதல் 9 வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர்வாரி வெளியேற்றிட NULM மூலம் தற்காலிக பணியாளர்களை. ஆகஸ்டு முதல் (01.08.2020 முதல் 31.01.2021) ஜனவரி வரை ஆறு மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்கள் அளித்துள்ள விலைப்பட்டியலின் அடிப்படையில் (நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு) ரூ.379/- வீதம் (ரூ.379 X 28 நபர்கள் X 184 நாட்கள் = ரூ. 19,52,608/-) ரூ.19.53 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2) மேற்கண்ட 359 பக்க கால்வாய்களில் தூர்வார தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணி அமர்த்தி கொள்ளவும்,
3) இப்பணிக்கு பிரிவு எண் 40-41-03, கணக்கு குறியீட்டு எண் 230-150-100ல் பட்டிகள் தீர்வு செய்திடவும்

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 07.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

H.D.C.NO. NULM-SUH/B2A/3157/2017

Resolution No.537 /2020 **Date:10-08-2020**

Greater Chennai Corporation – Public Health Department – Shelter for Urban Homeless – Action to be taken for construction of additional shelters – Change of location – For orders.

One shelter for homeless is to be opened for every one lakh population in the Cities. Currently 41 shelters (excluding 13 special shelters) are functioning and construction for additional shelters has been sanctioned.

Accordingly in the 5th PSC meeting dated.13.11.2018, establishment of 21 shelters was sanctioned for which council resolution was already obtained vide Council resolution No.419/2019 dated.29.07.2019 for the following places identified;

Sl. No	Zone	Div	Address of building	Current status of the building/land
1	3	28	Near Aavin Milk farm kulam. GCC's road side vacant land approximately 5197 sq ft.	Vacant land
2	8	102	V.S. Puram near Amma Unavagam	Vacant land
3	12	163	Near UPHC, Mannadiamman Koil street, Adambakkam	Unused building and ICDS (1st floor)
4	15	196	Kaliyamman koil main road, Karapakkam	Vacant land

In Zonal Officer, Zone 12 note for Superintending Engineer (Buildings) dated25.07.2020, it is stated that the unused building and ICDS, Near UPHC, Mannadiamman Koil street, Adambakkam, Zone-12, Division-163 where in the 1st floor was approved for construction of new shelter is now needs to be checked for stability. Hence an alternate place (Below table) has been identified and requested for construction of shelter.

Zone	Div	Address of the building	Current status of the building/land
12	165	South New street, Vanuvampet.	Vacant land

Hence, for approving the above location for construction of shelter as per the specifications. Orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.07.08.2020 is read.

"Change of location approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."

****

ம.அ.5.வ.து.ந.க.எண்.சி1/ 4353/ 2020

தீர்மான எண்.538 / 2020 **நாள்:10-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5 - வருவாய் துறை - வார்டு-49 முதல் 63 வரை - கொரானா நோய் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கை - கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் கொரானா நோய் தொற்று பாதிக்கப்பட்டுள்ள வர்களுக்கு தேவையான அத்தியாவசிய பணிகளை மேற் கொள்ளுவதற்கு 300 எண்ணிக்கையிலான தன்னார்வ பணியாளர்களை (Focus Volunteers) அவசர அவசியம் கருதி 15.06.2020 முதல் மூன்று மாதங்களுக்கு பணியமர்த்தியது - திருத்திய மன்றத்தீர்மானம் வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம் 49 முதல் 63 வரையிலான பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளை கண்காணிப்பு செய்ய ஒரு கோட்டத்திற்கு ஒரு நபருக்கு தலா 49 முதல் 63 வரையிலுள்ள உட்புற சாலைகள் என்ற வகையில் மண்டலத்தில் உள்ள 1452 உட்புற சாலைகளில் உள்ள தனிமைபடுத்தப்பட்ட (Quarantine) பகுதிகளுக்கு வாகனம் மற்றும் கைபேசி (Smart Phone) உடன் சென்று கண்காணிக்கவும் உடனுக்குடன் தகவல்களை உரிய அலுவலர்களுக்கு தெரிவிக்கவும் மற்றும் உள்ளூர் காவலர்கள் மற்றும் சமூக ஆவர்வாளர்களுடன் சேர்ந்து களப்பணி ஆற்றவும், அலுவலக அதிகாரியின் உத்தரவின்படி கொரோனா தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், கண்காணிப்பு செய்யவும், 300 நபர்களை 15.06.2020 முதல் தற்காலிக தன்னார்வ பணியாளர்களை (Focus Volunteers) ஆணையர் மற்றும் சிறப்பு அதிகாரி அவர்களின் 16.06.2020 நாளிட்ட ஆணைபடி நியமிக்க ஆணையிடப்பட்டது.

மண்டல அலுவலர்-5 அவர்களின் 15.06.2020 நாளிட்ட செயல் முறை ஆணைபடி 300 தன்னார்வ பணியாளர்களை (Focus Volunteers) கோட்டம் 49 முதல் 63 வரை பெயர் வாரியாக தேர்வு செய்யப்பட்டு 15.06.2020 முதல் பணி செய்வதற்கு மண்டலம்-5 வருவாய் பிரிவில் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டனர். இதனை தொடர்ந்து Focus Volunteers பணியாளர்களின் பணிகளை வருவாய் பிரிவு சார்ந்த வரிவசூலர்கள் மற்றும் உரிமம் ஆய்வாளர்கள் T.c's, L.I's (Ward Level Oficers) மூலம் Roll Call எடுக்கப்பட்டு Assessors (Unit level Officer) மூலம் கண்காணிக்கப்பட்டு ஆணையர் அவர்களின் உத்தரவின்படி பணி தொய்வில்லாமல் நடைபெற்று வருகிறது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.381/2020, நாள்.16.6.2020ன்படி ஏற்கெனவே பெறப்பட்ட ஆணையில் வரிசை எண்.1ல் NULM என்ற வார்த்தை குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் வரிசை எண்.3ல் வரவு செலவு கணக்கு எண். 40-41-03 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-150-100 என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த குறியீடு தன்னார்வாளர் பணியாளர்களுக்கு (Focus Volunteers) பொருந்தாது என்பதால், தன்னார்வ பணியாளர்களுக்கு (Focus Volunteers) கணக்கு பிரிவு எண்.20-21-07, கணக்கு குறியீட்டு எண்.230-70-12-03 என்ற குறியீட்டில் முன்பணமாக மண்டலம்-5ல் கணக்கு அலுவலர் மூலம் பெற்று வழங்கிடல் வேண்டும்.

உரிமம் ஆய்வாளர்கள் மற்றும் வரிவசூலர்கள் அளித்த வருகை பதிவேடு சான்றுகள் மற்றும் மண்டல அலுவலர்-5 அவர்களின் 23.07.2020 நாளிட்ட குறிப்பின்படி வரவு செலவு கணக்கு எண். 40-41-03 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-150-100 என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ள குறியீட்டில், தன்னார்வ பணியாளர்களுக்கு (Focus Volunteers) ஊதியம் ஜுன் 16.06.2020 முதல் ஜூலை 15.07.2020 வரையிலான நாட்களுக்கு மாத ஊதியம் ரூ.40,43,000/- வழங்கப்பட்டது.

இந்நிலையில், தன்னார்வ பணியாளர்களுக்கு (Focus Volunteers) வரவு செலவு கணக்கு பிரிவு எண். 40-41-03 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-150-100 என்று குறியிட்டில் தவறுதலாக செலவு செய்யப்பட்ட ரூ.40,43,000/- (ரூபாய் நாற்பது இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரம் மட்டும்) தொகையினை, கணக்கு பிரிவு எண்.20-21-07 கணக்கு குறியீட்டு எண்.230-701-203 என்ற குறியீட்டில் மேற்காணும் தொகையினை நேர்செய்ய ஆணை வேண்டப்படுகிறது.

மேலும், 300 தன்னார்வ பணியாளர்களுக்கு (Focus Volunteers) 15.06.2020 முதல் தற்காலிக பணியாளர்களாக நான்கு மாதங்களுக்கு பதில் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு பணியமர்த்த பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி (மாமன்றம்) அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

ம.அ.5.வ.து.ந.க.எண்.சி1/4353/2020

எனவே,

1. மேற்கண்ட தன்னார்வ பணியாளர்களுக்கு (Focus Volunteers) Revenue Disaster Management Department, Disaster Management Wing D.M.II Section G.O.(M.S.) No.312 Date 20.06.2020ன்படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம், ஒரு மாதத்திற்கு ஊதியம் ரூ.15,000/- X 300 நபர்களுக்கு ஒரு மாத ஊதியம் ரூ.45,00,000/-(ரூபாய் நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) என்ற விகிதத்தில், தன்னார்வ பணியாளர்களுக்கு (Focus Volunteers) மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்க தேவைப்படும் மொத்த செலவுத் தொகை ரூ.1,35,00,000/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) வழங்க நிர்வாக அனுமதியும்.
2. 2. ஒவ்வொரு மூன்று மாதங்கள் முடியும் முன்னர் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் அளவில் குறிப்பு சமர்ப்பித்து தன்னார்வ பணியாளர்களுக்கு (Focus Volunteers) 300 நபர்களுக்கு ஊதியம் பெற்று வழங்கிட அனுமதியும்,
3. 3. மேற்குறிப்பிட்ட ரூ.1,35,00,000/-த்தினை (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) Volunteers Salary Function Code 20-21-07 மற்றும் Account Head 230-70-12-03 நிதியில் நிதி ஒதுக்கீடு செய்திடவும்.
4. 4. மேற்குறிப்பிட்ட நிதியிலிருந்து ஏற்கனவே பிரிவு எண். 40-41-03 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-150-100லிருந்து தவறுதலாக பெறப்பட்ட ரூ.40,43,000/ஐ (ரூபாய் நாற்பது இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரம் மட்டும்) நேர் செய்திடவும்,
5. ஏற்கனவே பெறப்பட்ட மன்ற தீர்மான எண்.381/2020 நாள்.16.06.2020 இரத்து செய்யவும், புதிய மன்ற தீர்மானம் பெற்றிடவும்

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 06.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

S.W.D.C.No.B4/1599/2014

Resolution No.539 /2020 **Date:10-08-2020**

Greater Chennai Corporation – Storm Water Drain Department-World Bank funded Integrated Storm Water Drain Project in the expanded areas of Greater Chennai Corporation - Work completed – Completed project cost exceeded the sanctioned amount of Rs.1101.43 crore – Requested for financial assistance for meeting the additional cost escalation in Adayar and Cooum Basin ISWD sub-project – Financial Viability Letter received from TNUIFSL – For orders.

In G.O.(Ms) No.1, MA &WS (MA2) Department, dated: 02.1.2015, Government of Tamil Nadu has accorded Administrative Sanction for an amount of Rs.1101.43 Crore for the Construction of Integrated Storm Water Drain (ISWD) in Cooum & Adyar Basins in the expanded areas in Greater Chennai Corporation under World Bank funded Tamil Nadu Sustainable Urban Development Project(TNSUDP).

The funding pattern for the project is as follows:

Name of the Project	Project Cost Rs. in crores	Loan from World Bank under TNSUDP Rs. in crores		Grant from TNSUDP Rs. in crores		ULB Contribution Rs. in crores	
		Amount Rs. in crores	%	Amount Rs. in crores	%	Amount Rs. in crores	%
Integrated Storm Water Drain in the expanded areas in Greater Chennai Corporation	1101.43	660.86	60	330.43	30	110.14	10

This office letter dated.09.01.2020, TNUIFSL has been requested to provide additional funding assistance of Rs.353.11 crore for the above project under the World Bank assisted TNSUDP for meeting the additional cost escalation since the cost of completion of the project would come around Rs.1454.54 crore approximately including the GST to be paid for ISWD Drain works carried out after the implementation of GST against the original project cost of Rs.1101.43 crores. But the actual cost of completion of the project is Rs.1385.48 crore excluding the GST to be paid for ISWD Drain works as per the completion reports for all the 65 packages as submitted in the Utilization Certificate vide this office letter dated.30.05.2020.

Letter from Managing Director, TNUIFSL dated.05.08.2020, TNUIFSL has stated that the above details have been reviewed and has analyzed the financial situation of GCC. TNUIFSL have agreed in principle to provide additional funding assistance for Rs.219.75 crores by way of loan and grant under World Bank assisted TNSUDP to meet the additional cost escalation for the above project subject to approval by Sanctioning Committee under TNSUDP, revised Administrative Sanction by the Government for the revised project cost and means of finance and approval by the Board of TNUITCL, provided GCC resolves in its Council along with loan application.

Hence,

1) To avail additional funding assistance as loan and grant for the construction of Integrated Storm Water Drain along Cooum and Adayar Basin in the extended areas of Greater Chennai Corporation project under World Bank assisted TNSUDP with the following means of finance:

Sl. No.	Means of Finance	Chennai ISWD sub-project (Rs.in crores)	
		Amount	%
1	Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNSUDP	660.86	47.70%

2	Additional Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNSUDP	109.88	7.93%
3	Grant from Project Sustainability Grant fund (PSGF) under World Bank assisted TNSUDP	330.43	23.85%
4	Additional Grant from Project Sustainability Grant fund (PSGF) under World Bank assisted TNSUDP	109.87	7.93%
5	ULB Contribution	174.44	12.59%
	Total	**1385.48**	**100%**

2) To improve the general financial position of Greater Chennai Corporation by taking adequate long-term measures towards augmenting the revenues within a period of two years.
3) To meet the debt service from the general funds of the Greater Chennai Corporation.

Sl.No. 1 to 3 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.10.08.2020 is read.

"Sl.No. 1 to 3 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."

****

பொ.து.ந.க.எண். ஈ2/ 6948/ 2020

தீர்மான எண்.540 / 2020 **நாள்:10-08-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.பா.இராஜசேகர், மன்றச்செயலாளர், மன்றத்துறை அவர்கள் - மன்றச்செயலாளர் பதவியில் (வகுப்பு I-A கீழ்) இரண்டாண்டுகள் பணிமுடித்தமையால் தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்க அனுமதி.

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.12.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி திரு.பா.இராஜசேகர் அவர்கள் மன்றத்துறையில் மன்றச்செயலாளராக 03.01.2013 அன்று முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

அரசாணை (நிலை) எண்.137, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள்.08.10.2016ன்படி சென்னை மாநகராட்சி பொதுப்பணி விதிகள் 1970ன் கீழ் I-B வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ள மன்றச்செயலாளர் பணியிடத்தினை I-A வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பணியிடங்களுக்கு இணையாக தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. மன்றச்செயலாளர் அவர்களின் 25.02.2020 நாளிட்ட குறிப்பில், திரு.பா.இராஜசேகர், மன்றச்செயலாளர் அவர்கள் 30.06.2020 அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறவிருந்ததை முன்னிட்டு தனியர் சம்பளமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை எனவும், தனியர் மீது இன்றைய தேதியில் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை எனவும் அறிக்கை பெறப்பட்டது.

மேலும், முன்தணிக்கைக்கு கோப்பு அனுப்பப்பட்டதில் இணை இயக்குநர் (பொ), உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்களின் 19.02.2020 நாளிட்ட கடிதத்தில் வ.எண்.3ல் பணிவரன்முறை/ தகுதிகாண்பருவம் குறித்த விவரம் பணிப்பதிவேட்டில் பதியப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.51, பணியாளர்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள்.07.05.2020ன்படி, அரசுப் பணியாளர்களின் ஓய்வு பெறும் வயதினை 58ல் இருந்து 59 ஆக உயர்த்தப்பட்டுள்ளதால், தனியரின் வயது முதிர்வு ஓய்வு நாள்.30.06.2021 ஆகும்.

மேலும், தனியருக்கு மன்றச்செயலாளர் பதவியில் (வகுப்பு I-B) ஏற்கனவே நியமனக்குழு தீர்மான எண்.36/2014, நாள்.18.02.2014 மற்றும் சென்னை மாநகராட்சி, முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் பொ.து.ந.க.எண்.ஈ2/28480/2010, நாள்.04.03.2014ன்படி பணிவரன்முறை செய்யப்பட்டு பணிப்பதிவேடு தொகுதி-2, பக்கம் 11ல் பதியப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தனியருக்கு மன்றச் செயலாளர் பதவியில் இரண்டாண்டுகள் பணி முடிவடைந்தமையால் தகுதிகாண் பருவ காலம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டும்,

மன்றச்செயலாளர் பதவியானது அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள்.06.10.2009ன்படி, இப்பதவி வகிப்பவர்களை பணிநியமனம் சம்மந்தமாக (Appointing Authority) ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களுக்கு அதிகார பங்களிப்பு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

பொ.து.ந.க.எண். ஈ2/ 6948/ 2020

தனியரின் பணிக்கால விவரங்கள் கீழ்வருமாறு,

பெயர் மற்றும் பதவி	மன்றச்செயலாளர் பதவியில் பணியில் சேர்ந்த/பணிவரன்முறை செய்த நாள்	தகுதிகாண்பருவம் நிறைவடைந்தவராக அறிவிக்க வேண்டிய நாள்
திரு.பா.இராஜசேகர் மன்றச்செயலாளர், மன்றத்துறை.	03.01.2013	03.01.2015

ஆகவே, மன்றச்செயலாளர் பதவி வகுப்பு *I-B*லிருந்து வகுப்பு *I-A*ஆக தரம் உயர்த்தப்பட்டு மன்றச்செயலாளர் பதவியிலேயே பணிபுரிந்து வருவதால் 03.01.2015 முற்பகல் முதல் மன்றச் செயலாளர் பதவியில் தகுதிகாண்பருவம் நிறைவடைந்தவராக அறிவித்து ஆணை வழங்க சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தகுதிகாண்பருவம் நிறைவடைந்தவராக அறிவித்து ஆணை வழங்க சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பே.சா.து.ந.க.எண். பி3/ 1822/ 2019

தீர்மான எண்.541 / 2020 **நாள்:12-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை -சென்னை மாநகராட்சிக்குப்பட்ட மண்டலம்- 1 முதல் 5 வரை உள்ள 709 எண்ணிக்கையிலான பழுதடைந்த உட்புற சாலைகள் மற்றும் பேருந்து தட சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு - திட்ட மேலாண்மை கலந்தாளுனர் அமர்த்தும் பணிக்கு - ஒப்பங்கள் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். *Landtech Engineers Private Limited* அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குப்பட்ட மண்டலம்- 1 முதல் 15 வரை பழுதடைந்த உட்புற சாலைகள் மற்றும் பேருந்து தட சாலைகளை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு மத்திய அரசின் நிதி குழு மூலம் பெறப்படும் நிதி, சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் 2020-21 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு நிதி 2020-21 ஆகிய திட்டங்களின் கீழ் பெறப்படும் நிதியை எதிர்நோக்கி சிறப்பு அலுவலர் (மன்றம்) (மன்ற தீர்மான எண்.092/2020, நாள்:04.02.2020) அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்ட சிறப்பு அலுவலர்(மன்றம்) (மன்ற தீர்மான எண்.092/2020, நாள்.04.02.2020) அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டதின் அடிப்படையில் பழுதடைந்த 4366 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில், முதல் கட்டமாக 2389 எண்ணிக்கையிலான தார் சாலைகளையும், 582 எண்ணிக்கையிலான சிமெண்ட் கான்கிரீட் சாலைகளை மேம்படுத்தும் பணிக்காக ரூ.199.00 கோடிக்கு ஒப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

மேலும், சேதமடைந்த உட்புற சாலைகள் மற்றும் பேருந்து தட சாலைகளை பல கட்டங்களாக பிரித்து மேம்படுத்தும் பணிக்காக ஒப்பங்கள் கோரப்படவுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் சாலை பணிகளுக்கு திட்ட மேலாண்மை கலந்தாளுனர் நியமிக்கப்பட்டு சாலை மட்ட அளவினை ஆராயும் பணியில் தொடங்கி தரப்பரிசோதனை பணி நிறைவு மற்றும் இறுதிப்பட்டி தீர்வு செய்யும் வரை மேலாண்மை செய்யும் பணியினை மேற்கொண்டு சாலைகளை மிகவும் தரத்துடன் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

ஆகவே, முதற்கட்டமாக ஒப்பம் கோரிய 2971 எண்ணிக்கையிலான உட்புற சாலைகள் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் போது மதிப்பீடுகளை சரிபார்த்து, சாலை மட்ட அளவினை (Level Survey) ஆராயும் பணியில் தொடங்கி தர பரிசோதனை, பணி நிறைவு மற்றும் இறுதி பட்டி தீர்வு செய்யும் வரையில் மேலாண்மை செய்வதற்காக சிறப்பு அலுவலர் (மன்றம்) அவர்களின் தீர்மான எண்.245/2020, நாள்.23.03.2020 அனுமதி பெறப்பட்டது.

02.07.2020 அன்று நடைப்பெற்ற தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் 2020-21 பணிகளுக்கு திட்ட ஒப்புதல் அளிக்கும் குழும (Project Sanctioning Committee) கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ரூ.215.38 கோடி மதிப்பீட்டில் சாலை மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் 1171 உட்புற சாலைகள் மேம்படுத்தும் பணிகளும் அடங்கும். இதற்கான மன்றத்தீர்மான எண். 493/2020, நாள் 20.07.2020ன்படி பெறப்பட்டது. இதில் மண்டலம் 4 மற்றும் 5ல் உள்ள அமைந்துள்ள 254 உட்புற சாலைகளும் அடங்கும்.

முதல் கட்டமாக மண்டலம் 1 முதல் 5 வரை 709 எண்ணிக்கையிலான உட்புற சாலைப் பணிகளை மேற்கொள்ளும் போது மதிப்பீடுகளை சரிபார்த்து, சாலை மட்ட அளவினை (Level Survey) ஆராயும் பணியில் தொடங்கி தர பரிசோதனை, பணி நிறைவு மற்றும் இறுதி பட்டி தீர்வு செய்யும் வரையில் மேலாண்மை செய்வதற்காக திட்ட மேலாண்மை கலந்தாளுனர் நியமிக்க இரு உறைகள் முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் கோரி 11.06.2020 அன்று பணிகளின் அவசரத்தை கருதி, குறுகிய கால ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழ் "The Hindu", தமிழ் நாளிதழ் "நமது அம்மா" செய்தி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் தமிழ்நாடு அரசு மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது. ஒப்ப திறப்பு நாள் 10.07.2020 ஆகும். மின்னணு முறையில் (e-tender) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

"Tender conditions, Technical Committee recommendations approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."

****

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1281/2020

தீர்மான எண்.561/2020 **நாள்:21-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை - சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுத்து கொரோனா இல்லா சென்னையை உருவாக்கும் பொருட்டு, ஒலி மற்றும் ஒளி காட்சி மூலம் அனைத்து மக்களிடம் எடுத்துச் சென்று கொரோனா வைரஸ் தொற்று சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 30 எண்ணிக்கையிலான LED திரை மற்றும் விளம்பர பதாகைகள் பொருத்தப்பட்ட சிறிய ரக வாகனங்களை வாடகை முறையில் பணியமர்த்த விலை புள்ளி கோரப்பட்டது- குறைந்த விலை புள்ளி அளித்துள்ள திருவாளர்கள். Aishwarya LED Private Ltd நிறுவனத்தார் மூலம் 30 எண்ணிக்கையிலான LED திரை பொருத்தப்பட்ட விளம்பர வாகனங்களை 45 நாட்களுக்கு வாடகை முறையில் பணியமர்த்த நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.

உலக சுகாதார நிறுவனம், "கொரோனா வைரஸ்" *(Corona Virus)* மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் *(Pandemic)* என அறிவித்துள்ளது. எனவே, இந்நிறுவனம் அனைத்து உலக நாடுகளும் தகுந்த கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கைக்கான பணியினை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக, இந்திய அரசும் கொரோனா வைரஸ் பாதிக்காமல் இருக்க போதிய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது மக்களிடையே தகுந்த விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதனை தொடர்ந்து, தமிழ்நாடு அரசும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியும் கொரோனா நோய் தொற்று பரவுவதை தடுக்கும் விதமாக கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கென பல்வேறு உபகரணங்கள் கொள்முதல் செய்து கிருமி நாசினி தெளிப்பது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுத்து கொரோனா இல்லா சென்னையை உருவாக்கும் பொருட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகள், தடுப்பு மற்றும் பாதுகாப்பு முறைகள், சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணும் வழிமுறைகள், அருகில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் கொரோனா பரிசோதனை மையங்கள் ஆகியவை குறித்த பிரச்சாரங்களை *IEC* செயல்முறைகளின் ஒரு பகுதியாக, ஒலி மற்றும் ஒளி காட்சி மூலம் அனைத்து மக்களிடமும் எடுத்துச் செல்வதற்கு, *LED* திரை மற்றும் விளம்பரப் பதாகைகள் பொருத்தப்பட்ட சிறிய ரக வாகனங்களை வாடகைக்கு பணியமர்த்தி, கொரோனா வைரஸ் தொற்று சம்பந்தமான விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டது

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-*16(a)*ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும் இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதாலும், *LED* திரை பொருத்தப்பட்ட வாகனங்களை வாடகைக்கு வழங்கும் தனியார் விளம்பர நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டு, விலைப்புள்ளி 24.07.2020 அன்று திறக்கப்பட்டது. இதில் 3 நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது விலை புள்ளிகளை வழங்கியுள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு

Sl. No	Name of the Company	Description	Hire Charges per vehicle per day of 8 hrs(Exclu. GST)	GST@18%	Total Hire charges per vehicle per day of 8 hrs (inclu.GST @18%
1	M/sThe Signs Lakshmi LED Signs	Hiring of Mobile Propaganda Vans Equipped with 8'x5' Video LED Wall-Audio	Rs.17500/-	Rs.3150/-	Rs.20650/-

2.	M/s Aishwarya LED Private LTD	System,, 5 KVA Genset with Super structure for affixing Required Stickers	Rs.15000/-	Rs.2700/-	Rs.17.700/-
3.	M/s Gllitz adds		Rs.16800/-	Rs.3024/-	Rs.19824/-

மேற்கண்ட அட்டவணையின்படி திருவாளர்கள் *Aishwarya LED Private LTD* நிறுவனத்தார் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிலையில் இந்நிறுவனத்தாரை மேலும் விலைகுறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது.

திருவாளர்கள் *Aishwarya LED Private LTD* நிறுவனத்தார் தங்களது 27.07.2020 நாளிட்ட கடிதம் வாயிலாக கீழ்கண்டவாறு விலைகுறைப்பு வழங்கியுள்ளனர்.

Sl. No.	Description	Hire Charges per Vehicle Per Day Exclu. GST	GST@18%	Final Rate (Rs)	Remarks
1	Hiring of Mobile Propaganda Vans Equipped with 8'x5' Video LED Wall-Audio System,, 5 KVA Genset with Super structure for affixing Required Stickers	Rs14800/-	2664/-	17464./-	

திருவாளர்கள் *Aishwarya LED Private LTD* நிறுவனத்தார் ஒரு எண்ணிக்கையிலான *LED* திரை மற்றும் விளம்பர பதாகைகள் பொருத்தப்பட்ட சிறிய ரக வாகனம் மற்றும் 5 *KVA Genset* சேர்த்து வாடகை முறையில் வழங்க இறுதி விலைப்புள்ளியாக ரூ.17, 464/- *(Inclu. GST @* 18%) வீதம் 30 எண்ணிக்கையிலான வாகனங்களை 45 நாட்களுக்கு ரூ. 2,35,76,*400 /-* (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தைந்து இலட்சத்து எழுபத்தாறாயிரத்து நானூறு மட்டும்) என தெரிவித்துள்ளதை ஏற்று இந்நிறுவனத்திடமிருந்து தேவையான வாகனங்களை வாடகை முறையில் அமர்த்தலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவீனத்தினை இயந்திரப் பொறியியல் துறை தலைமையகத்தின் கீழ் கொரோனா நோய் தடுப்பு பணிக்கென வாகனங்கள் வாடகைக்கு அமர்த்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். மேலும், இச்செலவினத்தினை வருவாய் நிர்வாக ஆணையகத்தின் மூலம் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெற்று நேர் செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுத்து கொரோனா இல்லா சென்னையை உருவாக்கும் பொருட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகள், தடுப்பு மற்றும் பாதுகாப்பு முறைகள், சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணும் வழிமுறைகள், அருகில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் கொரோனா பரிசோதனை மையங்கள் ஆகியவை குறித்த பிரச்சாரங்களை *IEC* செயல்முறைகளின் ஒரு பகுதியாக, ஒலி மற்றும் ஒளி காட்சி மூலம் அனைத்து மக்களிடம் எடுத்துச் சென்று கொரோனா வைரஸ் தொற்று சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்திட , *30* எண்ணிக்கையிலான *LED* திரை மற்றும் விளம்பர பதாகைகள் பொருத்தப்பட்ட சிறிய ரக வாகனங்களை 45 நாட்களுக்கு ரூ2,35,76,400/- *(Inclu.GST@18%)* மதிப்பீட்டில் மன்றத்தின் பின்னேற்பினை எதிர் நோக்கி வாடகை முறையில் பணியமர்த்தமைக்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1281/2020

2. பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுத்து கொரோனா இல்லா சென்னையை உருவாக்கும் பொருட்டு, ஒலி மற்றும் ஒளி காட்சி மூலம் அனைத்து மக்களிடம் எடுத்துச் சென்று கொரோனா வைரஸ் தொற்று சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 30 எண்ணிக்கையிலான LED திரை மற்றும் விளம்பர பதாகைகள் பொருத்தப்பட்ட சிறிய ரக வாகனங்களை வாடகை முறையில் வழங்க கோரப்பட்ட அளவு ஒப்பத்தில் குறைந்த விலை புள்ளி அளித்த திருவாளர்கள் Aishwarya LED Private LTD நிறுவனத்திடமிருந்து ஒரு வாகனத்திற்கு நாளொன்றிற்கு ரூ.17,464/- (Inclu.GST@18%) வீதம் 30 எண்ணிக்கையிலான வாகனங்களை 45 நாட்களுக்கு ரூ.2,35,76,400/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தைந்து இலட்சத்து எழுபத்தாறாயிரத்து நானூறு மட்டும்) மதிப்பீட்டில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி வாடகை முறையில் அமர்த்த நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
3. இனம்-2 ஏற்பின் திருவாளர்கள். Aishwarya LED Private LTD நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
4. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இந்நிறுவனத்துடன் பாதுகாப்புத் தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,
5. இதற்கான செலவீனத்தினை இயந்திரப் பொறியியல் துறை தலைமையகத்தின் கீழ் கொரோனா நோய் தடுப்பு பணிக்கென வாகனங்கள் வாடகைக்கு அமர்த்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொண்டபின், இச்செலவினத்தினை வருவாய் நிர்வாக ஆணையகத்தின் மூலம் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெற்று நேர் செய்யவும்,
6. மொத்த தொகையில் 50% தொகையினை முன்பணமாக பெற ஆணை வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 18.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

****

இ.பொ.து.ந.க.எண்.பி1/ 229/ 2020

தீர்மான எண்.562/2020 **நாள்:21-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - அச்சகம் - "கொரோனா வைரஸ்" தடுப்பு பணி - பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் COVID - 19 "கொரோனா வைரஸ்" தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் அடங்கிய பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் (COVID 19 Pamphlets in multicolour with 3 Folding (100gsm) Art Paper in A3 size) - 10,00,000 எண்ணிக்கையில் அச்சடித்து வழங்க விலைப்புள்ளி கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள். Expression & Impression நிறுவனத்திடமிருந்து அச்சடித்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.

உலக சுகாதார நிறுவனம் "கொரோனா வைரஸ்" (Corona Virus) மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் (Pandemic) என அறிவித்துள்ளது. எனவே, இந்நிறுவனம் அனைத்து உலக நாடுகளும் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கைக்கான பணியினை போர்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மத்திய அரசு மற்றும் தமிழக அரசும் கொரோனா வைரஸ் பாதிக்காமல் இருக்க போதிய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது மக்களிடையே தகுந்த விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதனை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியும் "கொரோனா வைரஸ்" பாதிப்பு தடுப்பு நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் எடுத்து வருகின்றது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பிலிருந்து மக்களை காக்க நகர் முழுவதும் கிருமி நாசினி தெளிப்பது, மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பது போன்ற பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நடத்தி வரப்படுகிறது. இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய சுகாதார வழிமுறைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாக்க முடியும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, "கொரோனா வைரஸ்" பரவுதல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு மண்டலம் 1 முதல் 15 வரையில் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைக்கு COVID - 19 "கொரோனா வைரஸ்" தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் (COVID 19 Pamphlets in multicolour with 3 Folding (100gsm) Art Paper in A3 size – 10,00,000 எண்ணிக்கையில் பொதுமக்கள் அனைவரும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் அடங்கிய பலவண்ண மடிப்பேடு (Pamphlets) விழிப்புணர்வு பிரசுரங்கள் அச்சடித்து பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்கள் அனைவருக்கும் வழங்குவதன் மூலம் மாநகராட்சி பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களிடமும் கொரோனா வைரஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் 10 லட்சம் எண்ணிக்கையில் வழங்க மேற்கண்ட பலவண்ண மடிப்பேடு பிரசுரங்கள் அச்சடிக்க வேண்டியுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தில் பலவண்ண (Multicolour) மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் அச்சடிப்பதற்கு ஏற்ற வகையில் அச்சு இயந்திரங்கள் இல்லாத காரணத்தால் மேற்கண்ட மடிப்பேடுகள் அச்சடித்து வழங்கும் பணிகளை தகுதிவாய்ந்த தனியார் அச்சகத்தின் மூலம் மேற்கொள்ளலாம் என்ற கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தற்போதையை சூழ்நிலையில், மேற்கண்ட விழிப்புணர்வு பிரசுரத்தை உடனடியாக அனைத்து மக்களிடமும் கொண்டு சேர்ப்பது மிகவும் இன்றியமையததாகிறது. மேலும், பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்முதலுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதை தொடர்ந்து பணிகளின் அவசரம் மற்றும் அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நிலையில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி தற்போதைய ஊரடங்கு உத்தரவு காலத்தில் மேற்கண்ட பணிகளை செய்து வழங்கக்கூடிய திறனுள்ள தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டது. இவ்வொப்ப விலைப்புள்ளிகள் 14.08.2020 அன்று திறக்கப்பட்டது. இதில் மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது விலைப்புள்ளிகளை வழங்கியுள்ளனர் அதன் விவரம் பின்வருமாறு

இ.பொ.து.ந.க.எண்.பி1/ 229/ 2020

Description of items	Rate Quoted by		
	Expression & Impression	R. D. Prints	Shree Balaji Printers Private Ltd
Printing and Supply of COVID 19 Pamphlets in multicolour with 3 Folding (100gsm) Art Paper in A3 size to create awareness among the public Qty-10,00,000 Nos	**Rs.3.10 (Inclusive of GST @ 5%)**	Rs.3.15 (Inclusive of GST @ 5%)	Rs.3.25 (Inclusive of GST @ 5%)
Total Amount	**Rs.31,00,000/-**	Rs.31,50,000/-	Rs.32,50,000/-

மேற்கண்ட அட்டவணையின்படி திருவாளர்கள். Expression & Impression நிறுவனத்தார் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிலையில், இந்நிறுவனத்தை விலைக்குறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது. திருவாளர்கள். Expression & Impression நிறுவனத்தார் தங்களது 17.08.2020 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு விலைக்குறைப்பு செய்துள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

Description of items	Rate Quoted by M/s. Expression & Impression		
	Qty	Rate Quoted	Rate After Negotiation
Printing and Supply of COVID 19 Pamphlets in multicolour with 3 Folding (100gsm) Art Paper in A3 size – 10,00,000 nos to create awareness among the public	10,00,000 Nos	Rs.3.10 (Inclusive of GST @ 5%)	**Rs.3.05 (Inclusive of GST @ 5%)**
Total Amount		Rs.31,00,000/-	**Rs.30,50,000/-**

மேற்கண்ட நிறுவனத்தார் விலைக்குறைப்பை தொடர்ந்து "கொரோனா வைரஸ்" பரவுவதை தடுக்கும் பொருட்டு மண்டலம் 1 முதல் 15 வரையில் COVID - 19 "கொரோனா வைரஸ்" தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் (COVID 19 Pamphlets in multicolour with 3 Folding (100gsm) Art Paper in A3 size) மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரம் ஒன்றின் விலை ரூ.3.05 வீதம் 10 லட்சம் எண்ணிக்கையில் அச்சடித்து வழங்குவதற்கு மொத்தம் ரூ.30,50,000/- திருவாளர்கள். Expression & Impression பணியினை வழங்கலாம் என்ற கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொண்டு பின்னர் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து நேர் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் COVID - 19 "கொரோனா வைரஸ்" தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் (COVID 19 Pamphlets in multicolour with 3 Folding (100gsm) Art Paper in A3 size) மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரம் ஒன்றின் விலை ரூ.3.05 வீதம் 10 லட்சம் எண்ணிக்கையில் அச்சடித்து வழங்குவதற்கு மொத்தம் ரூ.30,50,000/- மதிப்பீட்டில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி வெளிநிறுவனங்கள் மூலம் அச்சடித்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் COVID - 19 "கொரோனா வைரஸ்" தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் (COVID 19 Pamphlets in multicolour with 3 Folding (100gsm) Art Paper in A3 size) மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் திருவாளர்கள். Expression & Impression நிறுவனத்திடமிருந்து ரூ.3.05 வீதம் 10 லட்சம் எண்ணிக்கையில் அச்சடித்து வழங்குவதற்கு மொத்தம் ரூ.30,50,000/- மதிப்பீட்டில் அச்சடித்து வழங்க பின்னேற்பு அனுமதி வேண்டியும்.
3. இனம் 2 ஏற்பின் திருவாளர்கள். Expression & Impression நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியதற்கு பின்னேற்பு ஆணை வேண்டியும்,
4. சுகாதார பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்பங்கள் கோராமல் நேரிடையாக பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல் - 16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதால், தகுதிவாய்ந்த நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று இப்பணியை மேற்கொண்டதற்கு பின்னேற்பு ஆணை வேண்டியும்.
5. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனங்களுடன் பாதுகாப்பு தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,
6. இதற்கான செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொண்டு பின் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து நேர் செய்யவும்.

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 20.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

****

இ.பொ.து.ந.க.எண்.பி1/ 230/ 2020

தீர்மான எண்.563/2020 **நாள்:21-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - அச்சகம் - பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் குறித்த பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் - 10,00,000 எண்ணிக்கையில் அச்சடித்து வழங்க விலைப்புள்ளி கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள். Expression & Impression நிறுவனத்திடமிருந்து அச்சடித்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி இயந்திரப் பொறியியல் துறையின் கீழ்வரும் அச்சகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான அனைத்து புத்தகங்கள், பதிவேடுகள், வருகைப்பதிவேடுகள், படிவங்கள், துறைரீதியான விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் இதர பணிகள் அச்சகத்தில் அச்சடித்து அனைத்து துறைகள் மற்றும் மண்டலம் 1 முதல் 15 வரையில் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வருகின்ற பருவ மழை காலங்களில் மழைநீர் சேகரிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் குறித்த பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் - 10,00,000 எண்ணிக்கையில் அச்சடித்து மண்டலம் 1 முதல் 15 வரையிலான அனைத்து மண்டலங்களில் உள்ள பொது மக்களுக்கு உடனடியாக விநியோகிக்க அறிவுறுத்தினார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தில், பலவண்ண (Multicolour) மடிப்பேடுகள் அச்சடிப்பதற்கு ஏற்ற வகையில் அச்சு இயத்திரங்கள் இல்லாத காரணத்தால் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் குறித்த பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் - 10,00,000 எண்ணிக்கையில் அச்சடித்து வழங்கும் பணிகளின் அவசரம் மற்றும் அவசியம் கருதி உடனடியாக பணியை மேற்கொள்ள தகுதிவாயந்த வெளி நிறுவனத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட ஒப்பம் கோரி பணிகளை மேற்கொள்ளலாம் என்ற கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தற்போதையை சூழ்நிலையில், மேற்கண்ட விழிப்புணர்வு பிரசுரத்தை உடனடியாக அனைத்து மக்களிடமும் கொண்டு சேர்ப்பது மிகவும் இன்றியமையாததாகிறது. மேலும், அவ்அச்சடித்து வழங்கும் பணிகளின் அவசரம் மற்றும் அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நிலையில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி தற்போதைய ஊரடங்கு உத்தரவு காலத்தில் மேற்கண்ட பணிகளை செய்து வழங்கக்கூடிய திறனுள்ள தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டது. இவ்வொப்ப விலைப்புள்ளிகள் 14.08.2020 அன்று திறக்கப்பட்டது. இதில் மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது விலைப்புள்ளிகளை வழங்கியுள்ளனர் அதன் விவரம் பின்வருமாறு

Description of items	Rate Quoted by		
	Expression & Impression	R. D. Prints	Shree Balaji Printers Private Ltd
Printing and Supply of Rainwater Harvesting awareness pamphlets in multicolour with 3 Folding (100gsm) Art Paper in A3 size for Zone 1 to 15 awareness purpose Qty-10,00,000 Nos	**Rs.3.10 (Inclusive of GST @ 5%)**	Rs.3.15 (Inclusive of GST @ 5%)	Rs.3.25 (Inclusive of GST @ 5%)
Total Amount	**Rs.31,00,000/-**	Rs.31,50,000/-	Rs.32,50,000/-

இ.பொ.து.ந.க.எண்.பி1/ 230/ 2020

மேற்கண்ட அட்டவணையின்படி திருவாளர்கள். *Expression & Impression* நிறுவனத்தார் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிலையில், இந்நிறுவனத்தை விலைக்குறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது. திருவாளர்கள். *Expression & Impression* நிறுவனத்தார் தங்களது 17.08.2020 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு விலைக்குறைப்பு செய்துள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

Description of items	*Rate Quoted by M/s. Expression & Impression*		
	Qty	*Rate Quoted*	*Rate After Negotiation*
Printing and Supply of Rainwater Harvesting awareness pamphlets in multicolour with 3 Folding (100gsm) Art Paper in A3 size for Zone 1 to 15 awareness purpose	*10,00,000 Nos*	*Rs.3.10 (Inclusive of GST @ 5%)*	***Rs.3.05 (Inclusive of GST @ 5%)***
Total Amount		*Rs.31,00,000/-*	***Rs.30,50,000/-***

மேற்கண்ட நிறுவனத்தார் விலைக்குறைப்பை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் குறித்த பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் ஒன்றின் விலை ரூ.3.05 வீதம் 10 லட்சம் எண்ணிக்கையில் அச்சடித்து வழங்குவதற்கு மொத்தம் ரூ.30,50,000/- திருவாளர்கள். *Expression & Impression* பணியினை வழங்கலாம் என்ற கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தின் கணக்கு குறியீடு எண். 220-21-01-02ன் கீழ் மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் குறித்த பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் ஒன்றின் விலை ரூ.3.05 வீதம் 10 லட்சம் எண்ணிக்கையில் அச்சடித்து வழங்கியதற்கு மொத்தம் ரூ.30,50,000/- மதிப்பீட்டில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி வெளிநிறுவனங்கள் மூலம் அச்சடித்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்.

2. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் குறித்த பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் திருவாளர்கள். *Expression & Impression* நிறுவனத்திடமிருந்து ஒன்றின் விலை ரூ.3.05 வீதம் 10 லட்சம் எண்ணிக்கையில் அச்சடித்து வழங்கியதற்கு மொத்தம் ரூ.30,50,000/- மதிப்பீட்டில் அச்சடித்து வழங்க பின்னேற்பு அனுமதி வேண்டியும்.

3. இனம் 2 ஏற்பின் திருவாளர்கள். *Expression & Impression* நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியதற்கு பின்னேற்பு ஆணை வேண்டியும்.

4. அவசர காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்பங்கள் கோராமல் வரையறுக்கப்பட்ட ஒப்பம் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ள ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்து, தகுதிவாய்ந்த நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று இப்பணியை மேற்கொண்டதற்கு பின்னேற்பு ஆணை வேண்டியும்.

5. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனங்களுடன் பாதுகாப்பு தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,

6. இதற்கான செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தின் கணக்கு குறியீடு எண். 220-21-01-02ன் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 20.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

****

இ.பொ.து.ந.க.எண்.பி1/ 231/ 2020

தீர்மான எண்.564/2020 **நாள்:21-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - அச்சகம் - பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் டெங்கு காய்ச்சல் மற்றும் அதனை தடுக்கும் முறைகள் குறித்த பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் - 10,00,000 அச்சடித்து வழங்க விலைப்புள்ளி கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள். Expression & Impression நிறுவனத்திடமிருந்து அச்சடித்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி இயந்திரப் பொறியியல் துறையின் கீழ்வரும் அச்சகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான அனைத்து புத்தகங்கள், பதிவேடுகள், வருகைப்பதிவேடுகள், படிவங்கள், துறைரீதியான விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் இதர பணிகள் அச்சகத்தில் அச்சடித்து அனைத்து துறைகள் மற்றும் மண்டலம் 1 முதல் 15 வரையில் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வருகின்ற பருவ மழை காலங்களில் டெங்கு காய்ச்சல் மற்றும் அதனை தடுக்கும் முறைகள் குறித்த பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் – 10,00,000 எண்ணிக்கையில் அச்சடித்து மண்டலம் 1 முதல் 15 வரையிலான அனைத்து மண்டலங்களில் உள்ள பொது மக்களுக்கு உடனடியாக விநியோகிக்க அறிவுறுத்தினார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தில், பலவண்ண *(Multicolour)* மடிப்பேடுகள் அச்சடிப்பதற்கு ஏற்ற வகையில் அச்சு இயத்திரங்கள் இல்லாத காரணத்தால் டெங்கு காய்ச்சல் மற்றும் அதனை தடுக்கும் முறைகள் குறித்த பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் – 10,00,000 எண்ணிக்கையில் அச்சடித்து வழங்க பணிகளின் அவசரம் மற்றும் அவசியம் கருதி உடனடியாக பணியை மேற்கொள்ள தகுதிவாய்ந்த வெளி நிறுவனத்தின் மூலம் பணிகளை மேற்கொள்ளலாம் என்ற கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தற்போதையை சூழ்நிலையில், மேற்கண்ட விழிப்புணர்வு பிரசுரத்தை உடனடியாக அனைத்து மக்களிடமும் கொண்டு சேர்ப்பது மிகவும் இன்றியமையாததாகிறது. மேலும், அவ்அச்சடித்து வழங்கும் பணிகளின் அவசரம் மற்றும் அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நிலையில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி தற்போதைய ஊரடங்கு உத்தரவு காலத்தில் மேற்கண்ட பணிகளை செய்து வழங்கக்கூடிய திறனுள்ள தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டது. இவ்வொப்ப விலைப்புள்ளிகள் 14.08.2020 அன்று திறக்கப்பட்டது. இதில் மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது விலைப்புள்ளிகளை வழங்கியுள்ளனர் அதன் விவரம் பின்வருமாறு

Description of items	*Rate Quoted by*		
	Expression & Impression	*R.D.Prints*	*Shree Balaji Printers Private Ltd*
Printing and Supply of Dengue Fever Control pamphlets in multicolour with 2 Folding (100gsm) Art Paper in A3 size for Zone 1 to 15 awareness purpose Qty-10,00,000 Nos	***Rs.2.15 (Inclusive of GST @ 5%)***	*Rs.2.20 (Inclusive of GST @ 5%)*	*Rs.2.25 (Inclusive of GST @ 5%)*
Total Amount	***Rs.21,50,000/-***	*Rs.22,20,000/-*	*Rs.22,50,000/-*

மேற்கண்ட அட்டவணையின்படி திருவாளர்கள். *Expression & Impression* நிறுவனத்தார் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிலையில், இந்நிறுவனத்தை விலைக்குறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது. திருவாளர்கள். *Expression & Impression* நிறுவனத்தார் தங்களது 17.08.2020 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு விலைக்குறைப்பு செய்துள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

Description of items	*Rate Quoted by M/s. Expression & Impression*		
	Qty	*Rate Quoted*	*Rate After Negotiation*
Printing and Supply of Dengue Fever Control pamphlets in multicolour with 2 Folding (100gsm) Art Paper in A3 size for Zone 1 to 15 awareness purpose	*10,00,000 Nos*	*Rs.2.15 (Inclusive of GST @ 5%)*	***Rs.2.05 (Inclusive of GST @ 5%)***
Total Amount		*Rs.21,50,000/-*	***Rs.20,50,000/-***

மேற்கண்ட நிறுவனத்தார் விலைக்குறைப்பை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் டெங்கு காய்ச்சல் மற்றும் அதனை தடுக்கும் முறைகள் குறித்த பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் ஒன்றின் விலை ரூ.2.05 வீதம் 10 லட்சம் எண்ணிக்கையில் அச்சடித்து வழங்குவதற்கு மொத்தம் ரூ.20,50,000/- திருவாளர்கள். *Expression & Impression* பணியினை வழங்கலாம் என்ற கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தின் கணக்கு குறியீடு எண். 220-*21-01*-02ன் கீழ் மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 15 வரையில் டெங்கு காய்ச்சல் மற்றும் அதனை தடுக்கும் முறைகள் குறித்த பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் ஒன்றின் விலை ரூ.2.05 வீதம் 10 லட்சம் எண்ணிக்கையில் அச்சடித்து வழங்குவதற்கு மொத்தம் ரூ.20,50,000/- மதிப்பீட்டில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி வெளிநிறுவனங்கள் மூலம் அச்சடித்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்.

2. டெங்கு காய்ச்சல் மற்றும் அதனை தடுக்கும் முறைகள் குறித்த பலவண்ண மடிப்பேடு விழிப்புணர்வு பிரசுரங்கள் திருவாளர்கள். *Expression & Impression* நிறுவனத்திடமிருந்து ஒன்றின் விலை ரூ.2.05 வீதம் 10 லட்சம் எண்ணிக்கையில் அச்சடித்து வழங்குவதற்கு மொத்தம் ரூ.20,50,000/- மதிப்பீட்டில் அச்சடித்து வழங்க பின்னேற்பு அனுமதி வேண்டியும்.

3. இனம் 2 ஏற்பின் திருவாளர்கள். *Expression & Impression* நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியதற்கு பின்னேற்பு ஆணை வேண்டியும்.

4. அவசர காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்பங்கள் கோராமல் வரையறுக்கப்பட்ட ஒப்பம் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ள ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்து, தகுதிவாய்ந்த நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று இப்பணியை மேற்கொண்டதற்கு பின்னேற்பு ஆணை வேண்டியும்.

5. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனங்களுடன் பாதுகாப்பு தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,

6. இதற்கான செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தின் கணக்கு குறியீடு எண். 220-21-01-02ன் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 20.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

****

இ.பொ.து.ந.க.எண்.W5/038/2019

தீர்மான எண்.565/2020 **நாள்:21-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - பொது தொழிற்சாலை - அச்சகம் - 7 டன் உபயோகமற்ற காகித ஜெல்லி, காகித துண்டுகள் மற்றும் குப்பை காகிதங்கள், கொண்ட ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய M/s MSTC Ltd, சேவை நிறுவனம் மூலம் 29.07.2020. அன்று மின்னணு ஏலம் நடைப்பெற்றதில் உயர்ந்த விலை (ரூ.1,03,000/-) கோரிய திருவாளர்கள் M/s. A.K. Enterprises., நிறுவனத்திற்கு விற்பனை ஆணை வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப்பொறியியல் துறை கட்டுப்பாட்டில் இயங்கும் அச்சகத்தில் 7 டன் உபயோகமற்ற காகித ஜெல்லி, காகித துண்டுகள் மற்றும் குப்பை காகிதங்கள் பயனற்றது என கழிவு செய்து உள்ளது உள்ளபடி விற்பனை செய்ய மதிப்பாய்வு செய்வதற்கு மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்/பாலங்கள்) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப குழு 03.01.2020 அன்று அச்சகத்தில் ஆய்வு செய்யப்பட்டது. அவை அனைத்தும் உபயோகமற்றவை என கழிவு செய்யப்பட்ட நிலையில் அச்சக காகித குடோனின் இடத்தை முழுவதுமாக அடைத்து உள்ள காரணத்தினாலும், கொசு உற்பத்திக்கு காரணமாக உள்ள நிலையில் காணப்படுவதால் மேற்கண்ட பயனற்ற காகித கழிவுகளை மதிப்பு ஒரு டன் ரூ.14,000/- மொத்தம் 7 டன் எடையுள்ள (7 X 14000 = ரூ.98,000/-) காகித கழிவுகளை மொத்தம் மதிப்பு ரூ.98,000/- விலை நிர்ணயம் செய்யப்பட்டு ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்து தீர்வு செய்யலாம் என தொழில்நுட்பக்குழு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதன்படி 07.02.2020 அன்று மின்னணு ஏலம் நடத்த திருவாளர்கள். MSTC Ltd., சேவை நிறுவனத்திற்கு 31.01.2020 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. 07.02.2020 அன்று நடைபெற்ற மின்னணு ஏலத்தில் கோரிய உயர்ந்த விலையான ரூ.66,000/- தொழில்நுட்ப குழு அளித்த விலையான (ரூ.98,000/-) விட (-) 33.00% குறைவாக உள்ளதால் மின்னணு ஏலம் நிரகரிக்கப்பட்டது.

மீண்டும் 10.03.2020 அன்று மறு-மின்னணு ஏலம் நடத்த திருவாளர்கள். MSTC Ltd., சேவை நிறுவனத்திற்கு 02.03.2020 நாளிட்ட மின்னஞ்சல் கடிதம் அனுப்பப்பட்டது.. 10.03.2020 அன்று நடைபெற்ற மின்னணு ஏலத்தில் எவரும் கோரவில்லை.

மீண்டும் 29.07.2020 அன்று மறு-மின்னணு ஏலம் நடத்த திருவாளர்கள். MSTC Ltd., சேவை நிறுவனத்திற்கு 17.07.2020 நாளிட்ட மின்னஞ்சல் கடிதம் அனுப்பப்பட்டது. 29.07.2020 அன்று நடைபெற்ற மின்னணு ஏலத்தில் கோரிய உயர்ந்த விலையான ரூ.1,03,000/- தொழில்நுட்ப குழு அளித்த விலையான (ரூ.98,000/-) விட (+) 5.10% உயர்வாக உள்ளதால் மின்னணு ஏலம் ஏற்கப்பட்டது.

29.07.2020 அன்று மின்னணு ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய நிறுவனத்தின் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	விவரம்	தொழில்நுட்ப குழு மதிப்பீடு செய்த தொகை	மின்னணு ஏலத்தில் கோரிய உயர்ந்த விலை	உயர்ந்த விலை கோரியுள்ள ஏலத்தாரர்
1	7 டன் உபயோகமற்ற காகிதஜெல்லி, காகித துண்டுகள் மற்றும் குப்பை காகிதங்கள் ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய	ரூ.98,000/-	ரூ.1,03,000/-	M/s. A.K.Enterprises.,

இ.பொ.து.ந.க.எண்.W5/038/2019

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையை ஆய்வு செய்ததின் அடிப்படையில் அச்சகத்தில் உள்ள 7 டன் உபயோகமற்ற காகித ஜெல்லி, காகித துண்டுகள் மற்றும் குப்பை காகிதங்கள் ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய மின்னணு ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் *M/s. A.K. Enterprises.*, அவர்களின் உயர்ந்த விலையான ரூ.1,03,000/- தொழில்நுட்ப குழு மதிப்பீட்டில் ஒப்பிடும்போது (+) 5.10% கூடுதலாகும். ஆதலால் ஏலத்தில் அதிக தொகை கோரியுள்ள *M/s A.K. Enterprises.*, நிறுவனத்தாருக்கு மேற்கண்ட பொருட்களை விற்பனை செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும், மின்னணு ஏலத்தில் அதிக விலை கோரியுள்ள திருவாளர்கள். *A.K. Enterprises.*, நிறுவனம் அளித்த விலைப்புள்ளி ரூ.1,03,000/-யில் இருந்து மொத்த தொகையில் 25% தொகையினை பாதுகாப்பு வைப்புத் தொகையாக ரூ.25,750/- பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டது செலுத்து சீட்டு எண் *(M/2020-21/0004325)* – நாள். 06.08.2020).

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப்பொறியியல் துறை, அச்சகத்தில் உள்ள 7 டன் உபயோகமற்ற காகித ஜெல்லி, காகித துண்டுகள் மற்றும் குப்பை காகிதங்கள் ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய திருவாளர்கள். *MSTC Ltd.*, சேவை நிறுவனம் மூலம் மின்னணு ஏலம் 29.07.2020 அன்று நடத்தப்பட்டு திருவாளர்கள். *A.K. Enterprises.*, அவர்கள் கோரிய உயர்ந்த விலை ரூ.1,03,000/- விலையானது அதிகபட்ச நிர்ணய விலை ரூ.98,000/- மதிப்பைவிட (+5.10%) கூடுதலாக இருப்பதால் அதனை ஏற்று திருவாளர்கள். *A.K. Enterprises.*, நிறுவனத்தாருக்கு விற்பனை ஆணை வழங்கவும்,
2. மேற்கண்ட பொருட்களை விற்பனை செய்யும் பொருட்டு, மின்னணு ஏலத்தில் அதிக விலை ரூ.1,03,000/-கோரிய திருவாளர்கள். *A.K. Enterprises.*, நிறுவனத்தார் மொத்த ஏல தொகையில் தற்போது 25% பாதுகாப்பு தொகையான ரூ.25,750/- செலுத்தியுள்ள தொகை போக மீதமுள்ள 75% தொகையான ரூ.77,250/- உடன் *GST 12%* ரூ.12,360/- வருமான வரி 1% ரூ.1,154/- அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமலிலுள்ள வரி தொகைக்கு ஏற்ப *M/s. A.K. Enterprises.*, அவர்களிடம் இருந்து பெற்று மொத்த தொகையான ரூ.1,16,514/-ஐ திருவாளர்கள். *MSTCLtd.*, நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, தனித்தனியாக செலுத்துச்சீட்டின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய பின் மேற்கண்ட பொருட்களை உள்ளது உள்ளபடி நிலையில் எடுத்து செல்ல திருவாளர்கள். *A.K. Enterprises.*, அவர்களுக்கு அனுமதி வழங்கிடவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"*1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

Br.D.C.No.B3/385-1/2018

Resolution No.566 /2020 **Date:21-08-2020**

Greater Chennai Corporation – Bridges Department - Construction of Bridge across Puzhal Surplus Water Canal at Vadaperumbakkam in Dn – 17, Zone-II – Alignment of the bridge to be shifted – For approval.

The work of Construction of Bridge across Puzhal Surplus Water Canal at Vadaperumbakkam in Dn – 17, Zone-II has been entrusted to Mr. Rajkumar for the tender amount of Rs.17,19,20,000/- vide Special Officer (Council) Resolution No. 375/2019 dated 11.07.2019.

As per the contract, the Contractor submitted the drawing for the 14.00m wide bridge with foot path on cantilever portions and a duct for accommodating the CMWSSB desalination water line.

The Contractor vide his letter dated.15.07.2020, has stated that the pipe line has to be shifted temporarily adjacent to the existing location and after construction of the bridge only it will be accommodated permanently on the duct provided in the cantilever portion.

The shifting of the pipe line will take about 4 months and after that due to North - East monsoon period, work could not be taken up for another 3 months and hence the project will be delayed further by 7 months and hence requested to shift the alignment of the bridge without infringing the existing CMWSSB water line.

In this regard it is submitted that CMWSSB has requested to remit Rs.3.28 Crores (based on 2018-19 rates) towards shifting of the water line. In order to save the time and the shifting charges, the alignment of the bridge may be shifted towards the downstream side and the foot path on upstream side may be eliminated. Due to shifting of alignment, the CMWSSB water line needs to be shifted only on the southern side ramp portion, about 100m instead of shifting the entire length of 302m.

The foot path provided on either side of the ramp portion may be eliminated since staircase will be provided on both sides thereby Land acquisition cost will be saved. This additional staircase construction cost would be adjusted in the savings due to reduction in the width of the deck slab. The width of the service road also will be reduced from 5m to 3.75m. Due to this, Land acquisition cost will be reduced from Rs.4.27 Crores to Rs.2.37 Crores, thereby Rs.1.90 Crores will be saved approximately.

If the alignment of the bridge is be shifted, Rs. 1,36,27,518.60 will be reduced due to reduction in the width of the deck slab and footpath on ramp portion as detailed below

S.No	Description	Amount in Rs.
1	PILE	1520484.12
2	PILE CAP	321101.04
3	PIER CAP	395953.62
4	ABUTMENT WALL AND APPROACH ROAD IN RAMP	3132591.78
5	DECK SLAB	1573323.41
6	CRASH BARRIER & WEARING COURSE	2845914.00
7	SERVICE ROAD	571282.70
8	PAINTING WORK	407835.00
	Total	**1,07,68,485.66**
	Tender premium @26.55%	**28,59,032.94**
	Grand Total	**1,36,27,518.60**

The amount Rs.1,36,27,518.60 will be deducted in each items mentioned above (Sl.No.1 to 8), as per the Billing Schedule of the Tender Document.

Hence,

1. To change the alignment of the bridge towards downstream side.
2. To reduce the width of bridge from 14.00m to 10.50m according to site condition and to avoid the cost of shifting of CMWSSB line.
3. To reduce the ramp portion and service road from 12.00m to 8.50m and 5.00m to 3.75m respectively.

Sl.No. 1 to 3 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.21.08.2020 is read.

"Sl.No. 1 to 3 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."

****

பூ.து.ந.க.எண்.பி2/132-2/2020

தீர்மான எண்.566A/2020 **நாள்:21-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் பூங்கா துறை - மூலதன நிதி / இதர நிதியின் கீழ் மண்டலம்-2, கோட்டம்-15, மணலி நியூ டவுன், பொன்னியம்மன் நகர் (பால் பூத், அம்மா உணவகம் அருகில்) மற்றும் மண்டலம்-3, கோட்டம்-25, திருமலை சீனிவாசா நகர், செம்பியம்-ரெட்ஹில்ஸ் சாலை அருகில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணி - திரு.கே.தனசேகரன் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

1	பணியின் பெயர்	:	மண்டலம்-2, கோட்டம்-15, மணலி நியூ டவுன், பொன்னியம்மன் நகர் (பால் பூத், அம்மா உணவகம் அருகில்) மற்றும் மண்டலம்-3, கோட்டம்-25, திருமலை சீனிவாசா நகர், செம்பியம்-ரெட்ஹில்ஸ் சாலை அருகில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	:	சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் மன்றத்தீர்மான எண்.076/2020, நாள்:28.01.2020 & 112/2020, 13.02.2020
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	பூங்கா துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	:	2019-20 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை:	:	**ரூ. 1,36,43,000/-**
அ	பணியின் மதிப்பு மற்றும் ஜி.எஸ்.டி.12%	:	ரூ. 1,30,55,652.85
ஆ	மேலான மேற்பார்வை செலவு -10%	:	--
இ	சிறு மேற்பார்வை செலவு - 2.5 %	:	--
ஈ	தரக்கட்டுப்பாடு – 1%	:	ரூ. 1,30,556.53
உ	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	:	ரூ. 1,30,556.53
ஊ	கலந்தாளுனர் கட்டணம்	:	--
எ	மற்றைய எதிர்பாரா செலவு	:	ரூ. 3,26,234.09
	மொத்தம்	:	**ரூ. 1,36,43,000/-**
6	எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்		1. தி இந்து நாளிதழ்,நாள்:04.02.2020 2. நமது அம்மா நாளிதழ், நாள்: 04.02.2020 3. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், நாள்: 06.02.2020
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	:	09.03.2020
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்		ஆம்
9	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	:	நான்கு - இணையத்தளத்தின் (e-tender) மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது.

பூ.து.ந.க.எண்.பி2/132-2/2020

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்,

வ. எண்	திரு / திருமதி / திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ரூ. (ஜி.எஸ்.டி 12%)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. (ஜி.எஸ்.டி 12%)	2019-20 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு
1.	திரு.கே. தனசேகரன்	1,30,55,652.85	1,42,30,661.61	(+) 9.00 % அதிகம்
2.	திரு.ஏ.அசோக் குமார்	1,30,55,652.85	1,51,44,557.31	(+)16.00% அதிகம்
3.	செல்வலஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்	முன்வைப்பு தொகைக்கு வரைவோலை அளிக்காமல், வங்கி உத்திரவாதம் அளித்ததால் அவர்களது ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.		
4.	விவேக் கன்ஸ்ட்ரக்ஷன்	குறித்த நேரத்தில் முன்வைப்புத்தொகை அளிக்காததால் அவர்களது ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.		

10	குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	:	ஆம், 12.03.2020 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.
11	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை / ஒப்ப சதவீதம் (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	:	ரூ.1,36,34,018.27 (+) 4.43 % அதிகம் 2019-20 ஆம் ஆண்டின் விலை விவரப்படி
12	குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு	:	வகுப்பு-1
13	பணிக்கான நிதி ஆதாரம்	:	மூலதன / இதர நிதி
14	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	:	05.09.2020

சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் மன்றத்தீர்மான எண்.076/2020, நாள்:28.01.2020 & 112/2020, 13.02.2020ன்படி, மத்திய அரசின் நிதி குழும நிதி *(CFC)*/இதர நிதியின் மண்டலம்-2, கோட்டம்-15, மணலி நியூ டவுன், பொன்னியம்மன் நகர் (பால் பூத், அம்மா உணவகம் அருகில்) மற்றும் மண்டலம்-3, கோட்டம்-25, திருமலை சீனிவாசா நகர், செம்பியம்-ரெட்ஹில்ஸ் சாலை அருகில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிக்கு ரூ.1,36,43,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்ப இறுதி நாளான 09.03.2020 அன்று 4 ஒப்பங்கள் e-tender மூலமாக பெறப்பட்டு, 10.03.2020 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டன. இதில், திருவாளர்கள். செல்வலஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் முன்வைப்பு தொகைக்கு வரைவோலை அளிக்காமல், வங்கி உத்திரவாதம் அளித்துள்ளதாலும், திருவாளர்கள். விவேக் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் குறித்த நேரத்தில் முன்வைப்பு தொகையினை அளிக்காததாலும் அவர்களது ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. மற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களில் குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரான திரு.கே.தனசேகரன் அவர்களின் ஒப்ப சதவீதம், 2019-20 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,30,55,652.85-ஐ விட (+)9.00% அதிகமாகும். இதன்படி குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,42,30,661.61-ஆகும். 12.03.2020 அன்று நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் (+)4.43 % அதிகம் ஆகும். இதன்படி, ஒப்பத்தொகை ரூ.1,36,34,018.27 ஆகும்.

2019-20 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத்தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,30,55,652.85
ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,36,34,018.27
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2019-20ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி	(+) 4.43 % அதிகம்

பூ.து.ந.க.எண்.பி2/132-2/2020

இதன்படி, 28.07.2020 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவில் (Tender Scrutiny Committee) மேற்கண்ட பணிக்காக (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,36,34,018.27-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை ஒப்பந்ததாரர் திரு.கே.தனசேகரன் அவர்களுக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இப்பணியினை மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, மண்டலம்-2, கோட்டம்-15, மணலி நியூ டவுன், பொன்னியம்மன் நகர் (பால் பூத், அம்மா உணவகம் அருகில்) மற்றும் மண்டலம்-3, கோட்டம்-25, திருமலை சீனிவாசா நகர், செம்பியம்-ரெட்ஹில்ஸ் சாலை அருகில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிக்கு குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.கே.தனசேகரன் அவர்களுக்கு (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,36,34,018.27 (+4.43 % அதிகம், 2019-20 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி) (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஆறு லட்சத்து முப்பத்து நான்காயிரத்து பதினெட்டு மற்றும் இருபத்து ஏழு பைசா மட்டும்)-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை வழங்க சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பூ.து.ந.க.எண்.பி2/ 132-3/ 2020

தீர்மான எண்.566B/2020 **நாள்:21-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் பூங்கா துறை - மூலதன நிதி / இதர நிதியின் கீழ் மண்டலம்-2, கோட்டம்-16, ஆர்.எல்.நகர், அய்யா கோவில் அருகில் மற்றும் கோட்டம்-17, தியாகி விஸ்வநாத தாஸ் நகர், கொசப்பூர் அருகில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிகள் - திருவாளர்கள்.வள்ளி சரவணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

1	பணியின் பெயர்	:	மண்டலம்-2, கோட்டம்-16, ஆர்.எல்.நகர், அய்யா கோவில் அருகில் மற்றும் கோட்டம்-17, தியாகி விஸ்வநாத தாஸ் நகர், கொசப்பூர் அருகில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிகள்
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	:	சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் மன்றத் தீர்மான எண்.076 / 2020, நாள்:28.01.2020 & 112 / 2020, 13.02.2020
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	பூங்கா துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	:	2019-20 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	**மதிப்பீட்டின் தொகை:**	:	**ரூ. 1,37,78,000/-**
அ	பணியின் மதிப்பு மற்றும் ஜி.எஸ்.டி.12%	:	ரூ. 1,31,84,617.00
ஆ	மேலான மேற்பார்வை செலவு -10%	:	--
இ	சிறு மேற்பார்வை செலவு - 2.5 %	:	--
ஈ	தரக்கட்டுப்பாடு – 1%	:	ரூ. 1,31,846.17
உ	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	:	ரூ. 1,31,846.17
ஊ	கலந்தாளுனர் கட்டணம்	:	--
எ	மற்றைய எதிர்பாரா செலவு - 2.5%	:	ரூ. 3,29,690.66
	மொத்தம்	:	**ரூ. 1,37,78,000/-**
6	எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்		4. தி இந்து நாளிதழ்,நாள்:04.02.2020 5. நமது அம்மா நாளிதழ், நாள்: 04.02.2020 6. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், நாள்: 06.02.2020
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	:	09.03.2020
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலகரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்		ஆம்
9	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	:	மூன்று - இணையத்தளத்தின் (e-tender) மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது.

பூ.து.நக.எண்.பி2/ 132-3/ 2020

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்,

வ. எண்	திரு / திருமதி / திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ரூ. (ஜி.எஸ்.டி 12%)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. (ஜி.எஸ்.டி 12%)	2019-20 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு
1.	வள்ளி சரவணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	1,31,84,617.00	1,51,62,309.55	(+) 15.00 % அதிகம்
2.	எஸ்.வள்ளி	1,31,84,617.00	1,71,40,002.10	(+) 30.00 % அதிகம்
3.	கே.எஸ்.கே.இஞ்சினியர்ஸ்	முன்வைப்பு தொகைக்குரிய வரைவோலை காலாவதியான வரைவோலையாக இருந்ததால் அவர்களது ஒப்பம் நிராகரிக்கப்பட்டது		

10	குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	:	ஆம், 12.03.2020 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.
11	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை / ஒப்ப சதவீதம் (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	:	ரூ.1,37,75,287.84 (+) 4.48 % அதிகம் 2019-20 ஆம் ஆண்டின் விலை விவரப்படி
12	குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு	:	வகுப்பு-1
13	பணிக்கான நிதி ஆதாரம்	:	மூலதன / இதர நிதி
14	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	:	05.09.2020

சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் மன்றத்தீர்மான எண்.076/2020, நாள்:28.01.2020 & 112/2020, 13.02.2020ன்படி, மத்திய அரசின் நிதி குழும நிதி *(CFC)*/இதர நிதியின் மண்டலம்-*2*, கோட்டம்-*16*, ஆர்.எல்.நகர், அய்யா கோவில் அருகில் மற்றும் கோட்டம்-*17*, தியாகி விஸ்வநாத தாஸ் நகர், கொசப்பூர் அருகில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிகளுக்கு ரூ.1,37,78,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்ப இறுதி நாளான 09.03.2020 அன்று 3 ஒப்பங்கள் e-tender மூலமாக பெறப்பட்டு, 10.03.2020 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டன. இதில், திருவாளர்கள். கே.எஸ்.கே.இஞ்சினியர்ஸ் அவர்கள் அளித்த முன்வைப்பு தொகை காலாவதியான வரைவோலையாக இருந்ததால் அவர்களது ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. மற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களில் குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். வள்ளி சரவணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்ப சதவீதம், 2019-20 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,31,84,617.00-ஐ விட (+)15.00% அதிகமாகும். இதன்படி குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,51,62,309.55-ஆகும். 12.03.2020 அன்று நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் (+)4.48 % அதிகம் ஆகும். இதன்படி, ஒப்பத்தொகை ரூ.1,37,75,287.84 ஆகும்.

2019-20 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத்தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,31,84,617.00
ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,37,75,287.84
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2019-20ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி	(+) 4.48 % அதிகம்

இதன்படி, 28.07.2020 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவில் (Tender Scrutiny Committee) மேற்கண்ட பணிக்காக (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,37,75,287.84-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.வள்ளி சரவணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பூ.து.நக.எண்.பி2/ 132-3/ 2020

மேலும், இப்பணியினை மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, மண்டலம்-2, கோட்டம்-16, ஆர்.எல்.நகர், அய்யா கோவில் அருகில் மற்றும் கோட்டம்-17, தியாகி விஸ்வநாத தாஸ் நகர், கொசப்பூர் அருகில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிகளுக்கு, குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.வள்ளி சரவணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,37,75,287.84 (+ 4.48 % அதிகம், 2019-20 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி) (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஏழு லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து இருநூற்று எண்பத்து ஏழு மற்றும் எண்பத்து நான்கு பைசா மட்டும்)-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை வழங்க சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பூ.து.ந.க.எண்.பி2/ 132-4/ 2020

தீர்மான எண்.566C/2020 **நாள்:21-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - பூங்கா துறை - மூலதன நிதி / இதர நிதியின் கீழ் மண்டலம்-3, கோட்டம்-23, வி.எஸ்.மணி நகர் 3வது தெரு (மேற்கு) பூங்கா-4, மாதவரம் ரவுண்டானா அருகில் மற்றும் கோட்டம்-24, சண்முகாபுரம் அம்பத்தூர்-ரெட் ஹில்ஸ் சாலை அருகில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிகள் - ஒப்பந்ததாரர் திருமதி.எஸ்.வள்ளி அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

1	பணியின் பெயர்	:	மண்டலம்-3, கோட்டம்-23, வி.எஸ்.மணி நகர் 3வது தெரு (மேற்கு) பூங்கா-4, மாதவரம் ரவுண்டானா அருகில் மற்றும் கோட்டம்-24, சண்முகாபுரம் அம்பத்தூர்-ரெட் ஹில்ஸ் சாலை அருகில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிகள்
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	:	சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் மன்றத் தீர்மான எண்.076/2020, நாள்:28.01.2020 & 112/2020, நாள்:13.02.2020
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	பூங்கா துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	:	2019-20 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	**மதிப்பீட்டின் தொகை:**	:	**ரூ. 1,91,22,000 /-**
அ	பணியின் மதிப்பு மற்றும் ஜி.எஸ்.டி.12%	:	ரூ. 1,82,98,821.64
ஆ	மேலான மேற்பார்வை செலவு -10%	:	--
இ	சிறு மேற்பார்வை செலவு - 2.5 %	:	--
ஈ	தரக்கட்டுப்பாடு – 1%	:	ரூ. 1,82,988.22
உ	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	:	ரூ. 1,82,988.22
ஊ	கலந்தாளுனர் கட்டணம்	:	--
எ	மற்றைய எதிர்பாரா செலவு - 2.5%	:	ரூ. 4,57,201.92
	மொத்தம்	:	**ரூ. 1,91,22,000 /-**
6	எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்		7. தி இந்து நாளிதழ்,நாள்:04.02.2020 8. நமது அம்மா நாளிதழ், நாள்: 04.02.2020 9. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், நாள்: 06.02.2020
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	:	09.03.2020
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்		ஆம்
9	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	:	ஐந்து - இணையத்தளத்தின் (e-tender) மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது.

பூ.து.ந.க.எண்.பி2/ 132-4/ 2020

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்,

வ. எண்	திரு / திருமதி / திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ரூ. (ஜி.எஸ்.டி.12%)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. (ஜி.எஸ்.டி.12%)	2019-20 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு
1.	ஸ்ரீ பச்சையம்மன்	1,82,98,821.64	2,34,20,661.82	(+) 27.99 % அதிகம்
2.	ஸ்ரீ வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்	1,82,98,821.64	2,39,09,240.35	(+) 30.66 % அதிகம்
3.	எஸ். வள்ளி	1,82,98,821.64	2,26,90,538.83	(+) 24.00 % அதிகம்
4.	ஏ.அசோக்குமார்	1,82,98,821.64	2,28,73,527.05	(+) 25.00 % அதிகம்
5.	விசாலம் கன்ஸ்ட்ரக்ஷன்	ஒப்பத்தில் பங்கு பெற தகுதி பெறாததால், அவர்களது ஒப்பம் நிராகரிக்கப்பட்டது		

10	குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	:	ஆம், 18.03.2020 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.
11	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை / ஒப்ப சதவீதம் (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	:	ரூ.1,91,05,799.67 (+) 4.41 % அதிகம் 2019-20 ஆம் ஆண்டின் விலை விவரப்படி
12	குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு	:	வகுப்பு-1
13	பணிக்கான நிதி ஆதாரம்	:	மூலதன / இதர நிதி
14	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	:	05.09.2020

சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் மன்றத்தீர்மான எண்.076/2020, நாள்:28.01.2020 & 112/2020, 13.02.2020ன்படி, மத்திய அரசின் நிதி குழும நிதி (CFC)/ இதர நிதியின் மண்டலம்-3, கோட்டம்-23, வி.எஸ்.மணி நகர் 3வது தெரு (மேற்கு) பூங்கா-4, மாதவரம் ரவுண்டானா அருகில் மற்றும் கோட்டம்24, சண்முகாபுரம் அம்பத்தூர்-ரெட் ஹில்ஸ் சாலை அருகில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிக்கு ரூ.1,91,22,000 /-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்ப இறுதி நாளான 09.03.2020 அன்று 5 ஒப்பங்கள் e-tender மூலமாக பெறப்பட்டு, 10.03.2020 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டன. இதில், ஒரு ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.விசாலம் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் ஒப்பத்தில் பங்கு பெற தகுதி பெறாததால், அவரது ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. இதன்படி, குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரான திருமதி.எஸ்.வள்ளி அவர்களின் ஒப்ப சதவீதம், 2019-20 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,82,98,821.64-ஐ விட (+)24.00% அதிகமாகும். இதன்படி குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.2,26,90,538.83-ஆகும். 18.03.2020 அன்று நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் (+)4.41% அதிகம் ஆகும். இதன்படி, ஒப்பத்தொகை ரூ.1,91,05,799.67 ஆகும்.

2019-20 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத்தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,82,98,821.64
ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,91,05,799.67
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2019-20ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி	(+) 4.41 % அதிகம்

இதன்படி, 28.07.2020 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவில் (Tender Scrutiny Committee) மேற்கண்ட பணிக்காக (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,91,05,799.67-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை ஒப்பந்ததாரர் திருமதி.எஸ்.வள்ளி அவர்களுக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பூ.து.ந.க.எண்.பி2/ 132-4/ 2020

மேலும், இப்பணியினை மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, மண்டலம்-3, கோட்டம்-23, வி.எஸ்.மணி நகர் 3வது தெரு (மேற்கு) பூங்கா-4, மாதவரம் ரவுண்டானா அருகில் மற்றும் கோட்டம்-24, சண்முகாபுரம் அம்பத்தூர்-ரெட் ஹில்ஸ் சாலை அருகில் புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிகளுக்கு, குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருமதி.எஸ்.வள்ளி அவர்களுக்கு (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,91,05,799.67 (+ 4.41 % அதிகம், 2019-20 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி) (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஒரு லட்சத்து ஐந்தாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஒன்பது மற்றும் அறுபத்து ஏழு பைசா மட்டும்)-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை வழங்க சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஒப்பம் வழங்க, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பூ.து.ந.க.எண்.பி2/ 132-1/ 2020

தீர்மான எண்.566D/2020 **நாள்:21-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - பூங்கா துறை - மூலதன நிதி / இதர நிதியின் கீழ் மண்டலம்-2, கோட்டம்-17, வி.எஸ்.மணி நகர் பூங்கா-5, மாதவரம் ரவுண்டானா அருகில் புதிய பூங்கா அமைக்கும் பணி - ஒப்பந்ததாரர் திரு.கே.சுந்தர்ராஜன் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

1	பணியின் பெயர்	:	மண்டலம்-2, கோட்டம்-17, வி.எஸ்.மணி நகர் பூங்கா-5, மாதவரம் ரவுண்டானா அருகில் புதிய பூங்கா அமைக்கும் பணி
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	:	சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் மன்றத் தீர்மான எண்.076/2020, நாள்:28.01.2020 & 112/2020, 13.02.2020
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	:	பூங்கா துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	:	2019-20 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை:	:	**ரூ. 1,26,95,000/-**
அ	பணியின் மதிப்பு மற்றும் ஜி.எஸ்.டி.12%	:	ரூ. 1,21,48,372.63
ஆ	மேலான மேற்பார்வை செலவு -10%	:	--
இ	சிறு மேற்பார்வை செலவு - 2.5 %	:	--
ஈ	தரக்கட்டுப்பாடு – 1%	:	ரூ. 1,21,483.73
உ	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	:	ரூ. 1,21,483.73
ஊ	கலந்தாளுனர் கட்டணம்	:	--
எ	மற்றைய எதிர்பாரா செலவு	:	ரூ. 3,03,659.91
	மொத்தம்	:	**ரூ. 1,26,95,000/-**
6	எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்		10. தி இந்து நாளிதழ்,நாள்:04.02.2020 11. நமது அம்மா நாளிதழ், நாள்: 04.02.2020 12. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், நாள்: 06.02.2020
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	:	09.03.2020
8	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? இல்லை எனில் உரிய அலுவலகரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்		ஆம்
9	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	:	மூன்று - இணையத்தளத்தின் (e-tender) மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது.

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்,

வ. எண்	திரு / திருமதி / திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ரூ.(ஜி.எஸ்.டி12%)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. (ஜி.எஸ்.டி12%)	2019-20 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு
1.	மார்ஸ் கன்ஸ்ட்ரக் ஷன்ஸ்	1,21,48,372.63	1,57,92,884.42	(+) 30.00 % அதிகம்
2.	திரு.கே.சுந்தர்ராஜன்	1,21,48,372.63	1,51,85,465.79	(+) 25.00 % அதிகம்
3.	ஆர்.எல்.ஜி. அசோசியேட்ஸ்	குறித்த நேரத்தில் ஒப்ப விவரங்கள் அளிக்காததால் அவர்களது ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.		

10	குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்	:	ஆம், 17.03.2020 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.
11	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை / ஒப்ப சதவீதம் (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	:	ரூ.1,26,88,975.21 (+) 4.45 % அதிகம் 2019-20 ஆம் ஆண்டின் விலை விவரப்படி
12	குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு	:	வகுப்பு-1
13	பணிக்கான நிதி ஆதாரம்	:	மூலதன / இதர நிதி
14	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	:	05.09.2020

சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் மன்றத்தீர்மான எண்.076/2020, நாள்:28.01.2020 & 112/2020, 13.02.2020ன்படி, மத்திய அரசின் நிதி குழும நிதி (CFC)/இதர நிதியின் கீழ் மண்டலம்-2, கோட்டம்-17, வி.எஸ்.மணி நகர் பூங்கா-5, மாதவரம் ரவுண்டானா அருகில் புதிய பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ.1,26,95,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்ப இறுதி நாளான 09.03.2020 அன்று 3 ஒப்பங்கள் e-tender மூலமாக பெறப்பட்டு, 10.03.2020 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டன. இதில், ஒரு ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஆர்.எல்.ஜி. அசோசியேட்ஸ் அவர்கள் குறித்த நேரத்தில் ஒப்ப விவரங்கள் அளிக்காததால் அவர்களது ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. இதன்படி, குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரான திரு.கே.சுந்தர்ராஜன் அவர்களின் ஒப்ப சதவீதம், 2019-20 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,21,48,372.63-ஐ விட (+)25.00% அதிகமாகும். இதன்படி குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,51,85,465.79-ஆகும். 17.03.2020 அன்று நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் (+)4.45 % அதிகம் ஆகும். இதன்படி, ஒப்பத்தொகை ரூ.1,26,88,975.21 ஆகும்.

2019-20 ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டுத்தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,21,48,372.63
ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை (ஜி.எஸ்.டி 12% சேர்த்து)	ரூ. 1,26,88,975.21
ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2019-20ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி	(+) 4.45 % அதிகம்

இதன்படி, 28.07.2020 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவில் (Tender Scrutiny Committee) மேற்கண்ட பணிக்காக (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,26,88,975.21-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை ஒப்பந்ததாரர் திரு.கே.சுந்தர்ராஜன் அவர்களுக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பூ.து.ந.க.எண்.பி2/ 132-1/ 2020

மேலும், இப்பணியினை மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, மண்டலம்-2, கோட்டம்-17, வி.எஸ்.மணி நகர் பூங்கா-5, மாதவரம் ரவுண்டானா அருகில் புதிய பூங்கா அமைக்கும் பணிக்கு குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.கே.சுந்தர்ராஜன் அவர்களுக்கு (ஜி.எஸ்.டி 12% சேர்த்து) ரூ.1,26,88,975.21 (+4.45% அதிகம், 2019-20 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி) (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஆறு லட்சத்து எண்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தைந்து மற்றும் இருபத்து ஒரு பைசா மட்டும்)-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை வழங்க சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.து.ந.க.எண். இ5/17297/2020

தீர்மான எண்.567/2020 **நாள்:24-08-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திருமதி.T.ஜெயந்தி, கண்காணிப்பாளர், மண்டலம் 12 அவர்கள் 25.08.2020 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-12ல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வரும் திருமதி. T.ஜெயந்தி, அவர்கள் தன்னுடைய உடல்நிலை மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக தன்னால் பணியில் தொடர முடியாத சூழ்நிலை உள்ளதால் தனக்கு விருப்பார்ந்த ஓய்வு (Voluntary Retirement) வழங்க கோரி 28.05.2020 நாளிட்ட கடிதத்தினை சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களுக்கு அளித்துள்ளார்.

திருமதி.T.ஜெயந்தி, கண்காணிப்பாளர், மண்டலம் 12 அவர்கள் 26.10.1992 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியில் சுருக்கெழுத்து தட்டச்சராக பணியில் சேர்ந்துள்ளார். தனியருக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் பதவியில் 26.10.1992 அன்று பணிவரன்முறை செய்யப்பட்டு 26.10.1994 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தனியர் 01.03.1999 அன்று சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 2 பதவி உயர்வு பெற்றும் அதனைத் தொடர்ந்து 01.06.2017 முதல் கண்காணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளார். தனியரின் பணிவிவரங்கள் கீழ்வருமாறு அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	தனியரின் பணி விவரங்கள்	ஆரம்ப பதவி / பதவி உயர்வு மற்றும் நாள்
01	பிறந்த தேதி	14.07.1970
02	தனியர் முதன் முதலில் பணியில் சேர்ந்த பதவி மற்றும் நாள் மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பதவி மற்றும் நாள்	மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் சுருக்கெழுத்து தட்டச்சர் நாள் 26.10.1992. பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் 26.10.1992 தகுதிகாண் பருவம் முடித்த நாள் 26.10.1994
03	சுருக்கெழுத்து தட்டச்சர் பணியில் பணிபுரிந்த துறைகள் மற்றும் பணிபுரிந்த காலம்	26.10.1992 முதல் 24.11.1992 வரை – பொது சுகாதாரத்துறை 25.11.1992 முதல் 08.12.1996 வரை - பணித்துறை 09.12.1996 முதல் 11.02.1997 வரை - மண்டலம் 13 12.02.1997 முதல் 25.11.1997 வரை - பகுதி கணக்கு குழுமம், மண்டலம் 8 26.11.1997 முதல் 01.03.1999 வரை - மண்டலம் 10 02.03.1999 முதல் 31.05.2017 வரை - மத்திய கணக்கு குழுமம் கண்காணிப்பாளர் - 01.06.2017 முதல் 19.11.2019 வரை - மண்டலம் 14 20.11.2019 முதல் இது நாள் வரை - மண்டலம் 12
04	தனியர் பெற்ற பதவி உயர்வு மற்றும் பணியில் சேர்ந்த நாள்	சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 2, நாள் 01.03.1999 கண்காணிப்பாளர், நாள் : 01.06.2017

05	கண்காணிப்பாளர் பதவியில் சேர்ந்த நாள் மற்றும் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள்	01.06.2017 பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் 01.06.2017
06	தனியர் தன்விருப்ப ஓய்வு கடிதத்தினை சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு அளித்த நாள்	28.05.2020
07	தன்விருப்ப ஓய்வு பெறும் நாள்	25.08.2020 பிற்பகல்
08	தன்விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த அன்று தனியரின் வயது	49 வயது
09	தனியர் பணி நிறைவு செய்த ஆண்டுகள்	27 வருடங்கள், 9 மாதங்கள், 29 நாட்கள்
10	தனியர் உள்ளபடியாக ஓய்வு பெறும் நாள் மற்றும் வருடம்	31.07.2029

தனியர் பணிபுரிந்த துறைகள் / மண்டல அலுவலகங்களிலிருந்து தனியர் மீது தணிக்கைத் தடைகள், முன்பண தீர்வு செய்தல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்து அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது.

நிர்வாக இயக்குநர், சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கம் அவர்களின் 30.07.2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என சான்று அளிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை துணை கண்காணிப்பாளர் / விழிப்பு அலுவலர் அவர்களின் 27.07.2020 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் அன்னார் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறை 06.08.2020 நாளிட்ட கடிதத்தில் திருமதி.T.ஜெயந்தி, கண்காணிப்பாளர் அவர்கள் மீது *As on date, no enquiry or investigation is pending against the official* என சான்று பெறப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர் அவர்களின் 12.08.2020 நாளிட்ட குறிப்பில் திருமதி.ட்டி.ஜெயந்தி, கண்காணிப்பாளர், மண்டலம் 12 அவர்கள் அளித்துள்ள 28.05.2020 நாளிட்ட தன்விருப்ப ஓய்வு மனுவினை ஏற்று தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, தணிக்கைத்தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை 25.08.2020 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள்:07.10.1991–மற்றும் அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள்:11.12.1995–ன்படி, திருமதி.T.ஜெயந்தி, கண்காணிப்பாளர் அவர்கள் 27 ஆண்டுகள் 9 மாதங்கள் பணிக்காலம் நிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதால், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதிக்குட்பட்டு தன்விருப்ப ஓய்வில் (*Voluntary retirement*) செல்ல அனுமதிக்கலாம் என கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, திருமதி.T.ஜெயந்தி, கண்காணிப்பாளர், மண்டலம்-12 (*EMP No. 100024*) அவர்கள் விருப்பார்ந்த ஓய்வு (*Voluntary retirement*) அளிக்க கோரி 90 நாட்கள் முன்னறிவிப்புடன் 28.05.2020 நாளிட்ட கடிதத்தினை சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த

பொ.து.ந.க.எண். இ5/17297/2020

வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படி தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, *25.08.2020* அன்று பிற்பகல் முதல் தனியரை விருப்பார்ந்த ஓய்வில் செல்ல அனுமதிக்க சிறப்பு அதிகாரி -மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தன்விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/1199/2020

தீர்மான எண்.568/2020 **நாள்:24-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - மண்டலம்-15, வார்டு-193, சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம், புல எண்.75/2-ல் பரப்பு 0.20.0 ஏர்ஸ்-ல் 0.02.58 ஏர்ஸ் ருத்ர பூமி வகைபாடு கொண்ட அரசு நிலம் பக்கிங்காம் கால்வாய் குறுக்கே ராஜீவ் காந்தி சாலை இணைக்கும் இணைப்பு சாலை மற்றும் பாலம் அமைக்க நெடுஞ்சாலைத்துறைக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பதற்கு அனுமதி.

மாவட்ட வருவாய் அலுவலர், சென்னை மாவட்டம் அவர்களின் 05.08.2020 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம், புல எண்.75/2-ல் மொத்த பரப்பு 0.20.0 ஏர்ஸ்-ல் 0.02.58 ஏர்ஸ் ருத்ர பூமி வகைபாடு கொண்ட அரசு நிலம் பக்கிங்காம் கால்வாய் குறுக்கே ராஜீவ் காந்தி சாலை மற்றும் கிழக்கு கடற்கரைச்சாலை இணைக்கும் இணைப்பு சாலை மற்றும் பாலம் அமைக்கும் பணிக்காக நெடுஞ்சாலைத்துறைக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலத்தினை நெடுஞ்சாலைத்துறைக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை தெரிவிக்கும் பொருட்டு இந்நிலத்தினை ஆய்வு செய்து வரைப்படத்துடன் விரிவான அறிக்கை அளிக்குமாறு இவ்வலுவலக 20.08.2020 நாளிட்ட கடிதத்தின் மூலம் 15-வது மண்டல அலுவலரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தனிவட்டாட்சியர்/நிமஉது அவர்களின் 20.08.2020 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில் மேற்படி புலமானது வருவாய் நிலப்பதிவேட்டில் ('அ' பதிவேடு) புல எண்.75/2 அரசு புறம்போக்கு, விஸ்தீரணம் 0.20.0 ஏர்ஸ், வகைப்பாடு ருத்ர பூமி என பதிவாகியுள்ளதாகவும், இப்புலத்தின் வடகிழக்கு பகுதியில் நெடுஞ்சாலைத்துறைக்கு நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள 0.02.58 ஏர்ஸ் நிலத்தை சுற்றி கோரை புற்களால் அடர்ந்து புதராக காணப்படுவதாகவும், இது போக மீதமுள்ள பரப்பு காலியாக காணப்படுவதாகவும், இவ்விடத்தில் இறந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்ததற்கான அறிகுறிகள் ஏதும் தென்படவில்லை எனவும், இப்புலத்தினை கிழக்கு கடற்கரை சாலை பக்கிங்காம் கால்வாய் குறுக்கே இராஜீவ் காந்தி சாலை இணைக்கும் இணைப்பு சாலை மற்றும் பாலம் அமைக்க நெடுஞ்சாலை துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை தெரிவிக்கும் பொருட்டு 15-வது மண்டல அலுவலரின் குறிப்பினை பெற்று மன்றத்திற்க்கு பொருள் சமர்ப்பிக்க மேல் நடவடிக்கை தொடரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலரின் 20.08.2020 நாளிட்ட குறிப்பில் சோழிங்கநல்லூர் வட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம், புல எண்.75/2-ல் பரப்பு 0.20.0 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட ருத்ர பூமி வகைப்பாடு கொண்ட நிலப்பகுதியில் நெடுஞ்சாலைத்துறை மூலமாக சாலை மற்றும் பாலம் அமைப்பதற்கு தோரயமாக பத்தில் ஒரு பகுதியாக அதாவது 0.02.58 ஏர்ஸ் நிலப்பகுதி மற்றும் நிலஉரிமை கேட்பதாலும், ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமத்தில் ருத்ரபூமி வகைப்பாடு கொண்ட இந்த மயான பூமியின் கடந்த 5 வருடங்களில் தோரயமாக வருடத்திற்கு 5 முதல் 6 எண்ணிக்கையில் மட்டுமே இறந்த சடலங்கள் புதைக்க இந்த மயான பூமி பயன்படுத்தப்பட்டு வருவதால் பெரிய அளவு பாதிப்பு இல்லை என்பதாலும், பக்கிங்காம் கால்வாய் குறுக்கே இராஜீவ் காந்தி சாலையுடன் கிழக்கு கடற்கரை சாலை இணைக்கும் இணைப்பு சாலை மற்றும் பாலம் அமைக்கும் பணி தமிழக

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/1199/2020

அரசின் நெடுஞ்சாலைத்துறை மூலமாக மேற்கொள்ள இருப்பதாலும், அரசின் அத்தியாவசிய கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்காக தேவைப்படுவதாலும் புல எண்.75/2-ல் பரப்பு 0.20.0 ஏர்ஸ்-ல் 0.02.58 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட ருத்ர பூமி வகைப்பாடு நிலத்தை நெடுஞ்சாலைத்துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய முன்நுழைவு அனுமதி வழங்கும் பொருட்டு தடையில்லாச்சான்று அளிக்கலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, மண்டலம்-15, வார்டு-193, சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம், புல எண்.75/2-ல் மொத்த விஸ்தீரணம் 0.20.0 ஏர்ஸ்-ல் 0.02.58 ஏர்ஸ் ருத்ர பூமி வகைபாடு கொண்ட அரசு நிலம் கிழக்கு கடற்கரை சாலை பக்கிங்காம் கால்வாய் குறுக்கே ராஜீவ் காந்தி சாலை இணைக்கும் இணைப்பு சாலை மற்றும் பாலம் அமைக்க நெடுஞ்சாலைத்துறைக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பதற்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"நிலஉரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பதற்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

மி.து. ந.க. எண். மே2/பி1/945/2020

தீர்மான எண்.569/2020 **நாள்:25-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மின்துறை - மறு மின்னணு ஒப்பம் - பெருநகர சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை துறைக்கு மண்டலம் 1 முதல் 15 ல் இருந்து உற்பத்தியாகும் கட்டுமான மற்றும் கட்டிட கழிவுகள் மேலாண்மை வசதிகள் செயலாக்கம் செய்ய கொடுங்கையூர் மண்டலம் 4 மற்றும் பெருங்குடி மண்டலம் 14 குப்பை கொட்டும் வளாகத்தில், தலா ஒரு எண்ணிக்கையில் 1000 KVA திறன் கொண்ட மின்மாற்றி நிறுவி மற்றும் இயக்கி வைத்து 2 வருடகாலத்திற்கு பராமரிப்பு செய்யவும் மற்றும் 3 phase HT line with separate feeder power supply தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து மின் இணைப்பு பெறும் பணிக்கு இரண்டு தனித்தனி ஒப்பங்களாக கோரப்பட்டது– குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த நிறுவனங்களின் ஒப்பத்தை ஏற்று, பணி ஆணை வழங்கஅனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மைத் துறையில் மண்டலம் 1 முதல் 15 வரை மண்டலங்களில் இருந்து உற்பத்தியாகும் கட்டுமான மற்றும் கட்டிட கழிவுகளை கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் செயலாக்க வசதிகள் செய்ய *Vibrating Grizzly Feeder*, *Perforated Vibrating Feeder*, *Recycle Crusher*, *Primary / Secondary Crusher*, *Vibrating Screen – Wet type*, *Ace Tech Power Wet Wash*, *Water Clarifier Conveyor*, *Water Civil Tank*, *Water Sludge Tank*, *Vertical Shift Impact*, *Brick Machine Unit* & *Belt Conveyor 1 & 19* போன்ற இயந்திரங்கள் தேவைப்படுகிறது. அதற்கு *1000 KVA* திறன் கொண்ட *Transformer* நிறுவி, இயந்திரங்கள் அமைத்து மற்றும் *TANGEDCO* வில் இருந்து *3 phase HT line with separate feeder power supply* பெறுவது அவசியமாகிறது.

இப்பணிக்கான விவரப்பட்டியல் பின்வருமாறு:

Sl.No	*Name of Location*	*Power capacity Required*	*Power consumption details*	*Electrical Installations Required*
1	*Kodungaiyur Dumping Ground - Zone 4 (Construction & Demolition Waste Generated from Zone 1 to 8)*	*796 KVA*	*960 HP*	*1000 KVA Transformer with Necessary Panels*
2	*Perungudi Dumping Ground – Zone 14 (Construction & Demolition Waste Generated from Zone 9 to 15)*	*796 KVA*	*960 HP*	*1000 KVA Transformer with Necessary Panels*

பெருநகர சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை துறைக்கு மண்டலம் 1 முதல் 15 ல் இருந்து உற்பத்தியாகும் கட்டுமான மற்றும் கட்டிட கழிவுகள் மேலாண்மை வசதிகள் செயலாக்கம் செய்ய கொடுங்கையூர் மண்டலம் 4 மற்றும் பெருங்குடி மண்டலம் 14 குப்பை கொட்டும் வளாகத்தில், தலா ஒரு எண்ணிக்கையில் *1000 KVA* திறன் கொண்ட மின்மாற்றி நிறுவி மற்றும் இயக்கி வைத்து 2 வருடகாலத்திற்கு பராமரிப்பு செய்யவும் மற்றும் *3 phase HT line with separate feeder power supply* தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து மின் இணைப்பு பெறும் பணிக்கு நிர்வாக அனுமதி சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண் .212 / 2020 நாள். 16/03/2020 மூலம் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி தலைமை பொறியாளர் (திட்டம் மற்றும் மின்சாரம்) அவர்களிடம், குறுகிய கால மறு மின்னணு ஒப்பம் கோரப்பட 13.07.2020 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்கூறிய 2 பணிகளுக்கு தனிதனியாக இரண்டு எண்ணிக்கையிலான, குறுகிய கால மறு மின்னணு ஒப்பங்கள் (இரு உறை) முறையில் 24.07.2020 ஒப்ப திறப்பு நாளாக வைத்து கோரப்பட்டு, ஒப்ப அறிவிப்பு 15.07.2020 அன்று ஆங்கில நாளிதழ் *The Hindu* மற்றும் தமிழ் நாளிதழ் மக்கள் குரல் நாளிதழ்களிலும், 16.07.2020 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது, மின்னணு முறையில் (*e-tender*) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

மி.து.ந.க. எண். மே2/பி1/945/2020

24.07.2020 அன்று இரண்டு தனித்தனி ஒப்பங்களின் தொழில் நுட்ப ஆவணம் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. ஒப்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

இந்த ஒப்பங்களின் தகுதிவாய்ந்த நிறுவனங்களின் நிதி ஆவணம் 04.08.2020 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. கோரப்பட்ட இரண்டு ஒப்பங்களின், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு.

வ. எண்	கோப்பு எண்.	பணியின் பெயர்	பணியின் மதிப்பு அனைத்து வரிகள் உட்பட (ரூபாய்)	பங்கு பெற்ற நிறுவனங்கள்	குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (வரிகள் உட்பட) (ரூபாய்)	மதிப்பீட்டுத் தொகையுடன் (வரிகள் உட்பட) ஒப்பிடுகையில் ஒப்ப சதவீதம்
1	மி.து.ந.க.எண்.சி. பி.மே2/பி1 /945 / 2020	**மண்டலம் -4 ல், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில்** இயந்திரங்கள் அமைக்க உயர்மின் அழுத்த மின் இணைப்பு வசதி (3 phase HT line with separate feeder power supply) பெற்று, 1000 KVA திறன் கொண்ட மின்மாற்றி வழங்கி, நிறுவி மற்றும் இயக்கி வைத்து 2 வருடகாலத்திற்கு பராமரிப்பு செய்யும் பணி	99,32,272	1. M/s R.K.M Electricals 2. M/s Sabhari Electricals	***M/s R.K.M Electricals***	1,05,03,377.64	**(+)5.75**
2	மி.து.ந.க.எண்.சி. பி.மே2/பி3 /947 / 2020	**மண்டலம்-14ல் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில்** இயந்திரங்கள் அமைக்க உயர்மின் அழுத்த மின் இணைப்பு வசதி (3 phase HT line with separate feeder power supply) பெற்று, 1000 KVA திறன் கொண்ட மின்மாற்றி வழங்கி, நிறுவி மற்றும் இயக்கி வைத்து 2 வருடகாலத்திற்கு பராமரிப்பு செய்யும் பணி.	99,32,272	1. M/s R.K.M Electricals 2. M/s Sabhari Electricals	***M/s Sabhari Electricals***	1,05,23242.18	**(+)5.95**

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்தவிலைப்புள்ளி அளிக்குமாறு நிறுவனங்களிடம் 04.08.2020 நாளிட்ட கடிதம் மூலம் கீழ்க்கண்டவாறு முதல் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

I) முதல் பேச்சுவார்த்தைக்கு பின் அளிக்கப்பட்ட ஒப்பத் தொகை :

வ. எண்	கோப்பு எண்.	பணியின் பெயர்	பணியின் மதிப்பு அனைத்து வரிகள் உட்பட (ரூபாய்)	குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர்	1 வது பேச்சு வார்த்தைக்கு பின், ஒப்பந்ததாரர் அளித்த தொகை (வரிகள் உட்பட) (ரூபாய்)	மதிப்பீட்டுத் தொகையுடன் (வரிகள் உட்பட) ஒப்பிடுகையில் ஒப்ப சதவீதம்

மி.து.ந.க. எண். மே2/பி1/945/2020

1	மி.து.ந.க.எண். சி.பி.மே2/பி1 /945/2020	**மண்டலம் -4 ¢, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில்** இயந்திரங்கள் அமைக்க உயர்மின் அழுத்த மின் இணைப்பு வசதி (3 phase HT line with separate feeder power supply) பெற்று, 1000 KVA திறன் கொண்ட மின்மாற்றி வழங்கி, நிறுவி மற்றும் இயக்கி வைத்து 2 வருடகாலத்திற்கு பராமரிப்பு செய்யும் பணி	99,32,272	***M/s R.K.M Electricals***	1,02,25,273.42	**(+)2.95**
2	மி.து.ந.க.எண். சி.பி.மே2/பி3 /947/2020	**மண்டலம்-14ல் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில்** இயந்திரங்கள் அமைக்க உயர்மின் அழுத்த மின் இணைப்பு வசதி (3 phase HT line with separate feeder power supply) பெற்று, 1000 KVA திறன் கொண்ட மின்மாற்றி வழங்கி, நிறுவி மற்றும் இயக்கி வைத்து 2 வருடகாலத்திற்கு பராமரிப்பு செய்யும் பணி	99,32,272	***M/s Sabhari Electricals***	1,02,30,245.40	**(+)3.0**

அதன் பின் அளிக்கப்பட்ட விலைப்புள்ளி மதிப்பீட்டுத் தொகையை விட ***(+)2.75*** மற்றும் ***(+)3.0*** சதவிதம் அதிகமாக உள்ளது. எனவே, 05.08.2020 நாளிட்ட கடிதம் மூலம் கீழ்க்கண்டவாறு இரண்டாவது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

II) இரண்டாவது பேச்சுவார்த்தைக்கு பின் அளிக்கப்பட்ட ஒப்பத் தொகை :

வ. எண்	கோப்பு எண்.	பணியின் பெயர்	பணியின் மதிப்பு அனைத்து வரிகள் உட்பட (ரூபாய்)	குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர்	2 வது பேச்சு வார்த்தைக்கு பின், ஒப்பந்ததாரர் அளித்த தொகை (வரிகள் உட்பட) (ரூபாய்)	மதிப்பீட்டுத் தொகையயுடன் (வரிகள் உட்பட) ஒப்பிடுகையில் ஒப்ப சதவீதம்
1	மி.து.ந.க.எண். சி.பி.மே2/பி1 /945/2020	**மண்டலம் -4, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில்** இயந்திரங்கள் அமைக்க உயர்மின் அழுத்த மின் இணைப்பு வசதி (3 phase HT line with separate feeder power supply) பெற்று, 1000 KVA திறன் கொண்ட மின்மாற்றி வழங்கி, நிறுவி மற்றும் இயக்கி வைத்து 2 வருடகாலத்திற்கு பராமரிப்பு செய்யும் பணி	99,32,272	***M/s R.K.M Electricals***	**99,27,298.92**	**(-)0.05**
2	மி.து.ந.க.எண். சி.பி.மே2/பி3 /947/2020	**மண்டலம்-14, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில்** இயந்திரங்கள் அமைக்க உயர்மின் அழுத்த மின் இணைப்பு வசதி (3 phase HT line with separate feeder power supply) பெற்று, 1000 KVA திறன் கொண்ட மின்மாற்றி வழங்கி, நிறுவி மற்றும் இயக்கி வைத்து 2 வருடகாலத்திற்கு பராமரிப்பு செய்யும் பணி	99,32,272	***M/s Sabhari Electricals***	**99,27,298.92**	**(-)0.05**

அதன் பின் அளிக்கப்பட்ட விலைப்புள்ளி மதிப்பீட்டுத் தொகையை விட ***(-)0.05*** சதவீதம் குறைவாக உள்ளது. மேலும் விலைகுறைப்பு செய்ய, *06.08.2020* நாளிட்ட கடிதம் மூலம் கீழ்க்கண்டவாறு மூன்றாவது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

06.08.2020 தேதியிட்ட கடிதத்தில் ஒப்பந்ததாரர்கள்கீழ்க்கண்ட காரணங்களால் மேலும் விலைகுறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள்.

" With the reference we have given over best price on the earlier negotiation letter. We are not in position to reduce the rates further as the COVID-19 lockdown has made drastic changes in the following:

1. *The petrol and diesel prices are high which will increase in the material , transportation charges*
2. *The MS. items , Aluminium, Copper, Sand, Bricks, Cement, etc. rates are also increase at a high price*
3. *Man power scarcity is going on which will cause increase in labour wages.*
4. *This work involves in erection of HT equipments which requires to employ Licensed engineers whose wages are high*
5. *The CEIG inspection has to be carried out which will cause more expense "*

எனவே, மேற்கண்ட காரணத்தினை கருத்தில் கொண்டு *2* ஒப்பங்களில் பெறப்பட்ட குறைந்த விலையானது மதீப்பீட்டு தொகையை விட *(-)0.05* சதவீதம் குறைவாக உள்ளதாலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மைத் துறையில் மண்டலம் *1* முதல் *15* வரை மண்டலங்களில் இருந்து உற்பத்தியாகும் கட்டுமான மற்றும் கட்டிட கழிவுகளை கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் செயலாக்க வசதிகள் செய்ய *Vibrating Grizzly Feeder , Perforated Vibrating Feeder , Recycle Crusher, Primary / Secondary Crusher , Vibrating Screen – Wet type, Ace Tech Power Wet Wash, Water Clarifier Conveyor , Water Civil Tank , Water Sludge Tank , Vertical Shift Impact , Brick Machine Unit & Belt Conveyor 1 & 19* போன்ற இயந்திரங்கள் தேவைப்படுகிறது. அதற்கு *1000 KVA* திறன் கொண்ட *Transformer* நிறுவி , இயந்திரங்கள் அமைத்து மற்றும் *TANGEDCO* வில் இருந்து *3 phase HT line with separate feeder power supply* பெறுவது அவசியமாகிறது.

12.08.2020 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் *(Tender Scrutinizing Committee)* பார்வைக்கு மேற்கண்ட அனைத்து விவரங்களும் எடுத்துரைக்கப்பட்டது, இதனை ஏற்றுக்கொண்ட ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமம் *2* ஒப்பங்களை மன்றம் எற்க பரிந்துரைத்தது.

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்வதற்காக ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்தின் *(Tender Scrutinizing Committee)* பரிந்துரையின்படி பேச்சுவார்த்தைக்குப் பின்அளிக்கப்பட்ட ஒப்பத் தொகைக்கு பணி ஆணை வழங்க சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

1. பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறைக்கு மண்டலம் *1* முதல் *8* ல் இருந்து உற்பத்தியாகும் கட்டுமான மற்றும் கட்டிட கழிவுகள் செயலாக்க வசதி கொடுங்கையூர் மண்டலம்-***4***, குப்பை கொட்டும் வளாகத்தில் ஒரு எண்ணிக்கையில் *1000 KVA* திறன் கொண்ட மின்மாற்றி வழங்கி, நிறுவி மற்றும் இயந்திரங்கள் அமைத்து உயர்மின் அழுத்த மின் இணைப்பு வசதி *(3 phase HT line with separate feeder power supply)* பெற்று, இயக்கி வைத்து மற்றும் *2* வருடகாலத்திற்கு பராமரிப்பு செய்யும் பணிக்கு திருவாளர் *R.K.M Electricals* நிறுவனம் மதிப்பீட்டுத் தொகையை விட (-)0.05% குறைவாக உள்ள ஒப்பத் தொகையான ரூ. ***99,27,298.92/-*** (12% ஜி எஸ் டி உள்ளிட்டது) பணி ஆணை வழங்கவும்,

மி.து.ந.க. எண். மே2/பி1/945/2020

2. பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறைக்கு மண்டலம் 9 முதல் 15 ல் இருந்து உற்பத்தியாகும் கட்டுமான மற்றும் கட்டிட கழிவுகள் செயலாக்க வசதி பெருங்குடி மண்டலம்-14 குப்பை கொட்டும் வளாகத்தில் ஒரு எண்ணிக்கையில் 1000 KVA திறன் கொண்ட மின்மாற்றி வழங்கி, நிறுவி மற்றும் இயந்திரங்கள் அமைத்து உயர்மின் அழுத்த மின் இணைப்பு வசதி (3 phase HT line with separate feeder power supply) பெற்று, இயக்கி வைத்து மற்றும் 2 வருடகாலத்திற்கு பராமரிப்பு செய்யும் பணிக்கு திருவாளர் Sabhari Electricals நிறுவனம் மதிப்பீட்டுத் தொகையை விட (-)0.05% குறைவாக உள்ள ஒப்பத் தொகையான ரூ. ***99,27,298.92/-*** (12% ஜி எஸ் டி உள்ளிட்டது) பணி ஆணை வழங்கவும்,

3. இப்பணிக்கான செலவினத்தை திடக்கழிவு மேலாண்மை துறையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து மின்சாரத்துரையின் மூலதன நிதிக்கு மாற்றி, பணியினை மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.சு.கா.பி.ந.க.எண்.அ2/0260/2020

தீர்மான எண்.570/2020 **நாள்:25-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கால்நடை மருத்துவப்பிரிவு - நாய் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை - தனியார் கால்நடை மருத்துவர்களின் கட்டணத்தை உயர்த்தி வழங்கிட நியமிக்கப்பட்ட கட்டண நிர்ணய குழுவின் பரிந்துரைகளுக்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த, அவை பிடிக்கப்பட்டு, அரசின் விதிமுறைகளை பின்பற்றி பிராணிகள் வதை தடுப்புச்சட்டம் 1960, நாய் இனக் கட்டுப்பாடு விதி (2001)-ன்படி கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனை செயல்படுத்த நாய் இனக்கட்டுப்பாடு மையங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் பேசின் பாலம், லாயிட்ஸ் காலனி, கண்ணம்மாபேட்டை ஆகிய மூன்று இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் மண்டலங்களிலிருந்து பிடிக்கப்படும் தெரு நாய்கள் பெறப்பட்டு, இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்படுகின்றது. இம்மையங்களில் மேற்கொள்ளப்படும் கருத்தடை அறுவை சிகிச்சை ஒன்றிற்கு தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு ரூ.100/- என 2015-ஆம் ஆண்டு முதல் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் தற்பொழுது நாய் ஒன்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காக வழங்கப்படும் தொகை ரூ.100/- என்பது குறைவான தொகை என்றும், ஆகவே அதனை உயர்த்தி வழங்கிட கட்டண நிர்ணயக்குழு ஒன்றை நியமித்து, அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு ஆணையர் அவர்களின் 29/07/2020 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

அதன்படி, 06.08.2020 அன்று கட்டண நிர்ணயக்குழுவின் ஆலோசனைக்கூட்டம் நடத்தப்பட்டு கீழ்க்காணும் பரிந்துரைகளை நான்கு உறுப்பினர்களைக்கொண்ட குழு வழங்கியுள்ளது.

1. தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை ஒன்றிற்கான கட்டணம் ரூ.100/- என்பது கடந்த 2015-ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. இக்கட்டணத்தை உயர்த்தி தருமாறு தனியார் கால்நடை மருத்துவர்கள் கோருவது பரிசீலிக்கத் தக்கதே ஆகும். எனவே, இக்கட்டணத்தை உயர்த்தி வழங்கலாம் என்று இக்குழு பரிந்துரைக்கிறது.
2. மும்பை, பெங்களூரு ஆகிய மாநகராட்சிகளில் தெருநாய்களுக்கான இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு நாய் ஒன்றிற்கு ரூ.1200/- வீதம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு கட்டணமாக அந்த மாநகராட்சிகளால் வழங்கப்பட்டு வருகிறது. தெரு நாய்களை பிடித்தல், இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல், வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடுதல், குணமடைந்த பின் பிடிக்கப்பட்ட இடங்களிலே அந்த நாய்களை விடுவித்தல் ஆகிய அனைத்துப் பணிகளும் அந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.
3. பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும் மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களிலும் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு மட்டும் தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு ரூ.100/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, மற்ற மாநகராட்சிகளில் வழங்கப்பட்டு வரும் தொகையை ஒப்பிடும் போது இக்கட்டணம் குறைவானதேயாகும்.
4. தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புதுறை சார்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.40,000/- வீதம் ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகரில் தற்போது நிலவிவரும் விலைவாசி மற்றும் வாழ்க்கை முறையை கணக்கில் எடுத்துக் கொண்டால் முறையான பயிற்சி பெற்ற, தகுதிவாய்ந்த கால்நடை அறுவை சிகிச்சை மருத்துவருக்கு மாதந்தோறும் ரூ.40,000/-க்கு குறையாமல் கட்டணம் வழங்கினால்தான் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை திட்டத்தை மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களிலும் தொய்வில்லாமல் மேற்கொள்ள முடியும்.

5. ஆண் நாய்களுக்கு இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதைக் காட்டிலும், பெண் நாய்களுக்கு இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதற்கு அதிக நேரமும், சிரத்தையும் தேவைப்படும். ஆகவே, ஆண் நாய் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை கட்டணத்தைவிட பெண் நாய் அறுவை சிகிச்சைக்கு கூடுதல் கட்டணம் அளிக்கப்பட வேண்டும்.

6. இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சையின் எண்ணிக்கையினை அதிகப்படுத்த, தனியார் கால்நடை மருத்துவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக அறுவை சிகிக்சை கட்டணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியுள்ளது.

7. இதன்மூலம் தனியார் கால்நடை மருத்துவர்கள் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை பணியை ஈடுபாட்டுடன் தொடர்ச்சியாக மேற்கொள்ள ஏதுவாக அமையும்.

8. மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து காரணங்களையும் பரிசீலித்ததில், ஆண் நாய் ஒன்றிற்கு ரூ.200/- எனவும், பெண் நாய் ஒன்றிற்கு ரூ.300/- எனவும் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை கட்டணமாக தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு வழங்கிட பரிந்துரைக்கப்படுகிறது.

ஆகவே, கட்டண நிர்ணயக்குழுவின் மேற்படி பரிந்துரைகளை பரிசீலனை செய்து,

1. ஆண் நாய் ஒன்றின் கருத்தடை அறுவை சிகிச்சைக்கு தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கட்டணத்தொகையான ரூ.100/- ஐ உயர்த்தி ரூ.200/- ஆக வழங்கிடவும்,
2. பெண் நாய் ஒன்றின் கருத்தடை அறுவை சிகிச்சைக்கு தனியார் கால்நடை மருத்துவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கட்டணத்தொகையான ரூ.100/- ஐ உயர்த்தி ரூ.300/-ஆக வழங்கிடவும்,
3. மேலும் இச்செலவினத்தை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வந்த பிரிவுகுறியீடு எண். 40-43-02 மற்றும் கணக்கு குறியீடு எண் 210-20-07-02 (Incentive other-Staff) என்ற கணக்குத்தலைப்பில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

வ.து.ந.க.எண்.தொ.வ./ 1847/ 2020

தீர்மான எண்.571/2020 **நாள்:25-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - கொரோனா வைரஸ் தொற்று பரவல் (Covid 19) - ஊரடங்கு உத்தரவு - தொழில்வரி மற்றும் தொழில் உரிமம் செலுத்த காலக்கெடு 30.06.2020 வரை தள்ளிவைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - சிறப்பு அதிகாரி-மன்ற தீமானம் பெறப்பட்டது - 01.07.2020 முதல் 31.07.2020 வரை பின்னேற்பும் / 01.08.2020 முதல் 30.09.2020 வரை அபராதம் மற்றும் தண்ட தொகையில்லாமல் வசூலிக்கவும் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறையின் முக்கிய வருவாய் இனங்களான சொத்துவரி, தொழில்வரி மற்றும் தொழில் உரிமம் புதுப்பித்தல் உட்பட வரி வருவாய் இனங்கள், வரி வருவாய் அல்லாத இனங்கள் / கட்டணங்கள் நடப்பு நிதி (2020-21) ஆண்டின் 30.09.2020க்குள் சொத்து உரிமையாளர்கள்/நிறுவனதாரர்களால் சட்ட விதிகளின்படி செலுத்தப்பட வேண்டிய நிலையில், தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவல் (Covid 19) காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி வரிவருவாய் இனங்களை வசூலிக்க இயலாத சூழ்நிலை உருவாகியுள்ளதால், இந்த நிதி ஆண்டிற்கு (2020-21) செலுத்த வேண்டிய வரிவருவாய் இனங்களை (தொழில்வரி, தொழில் உரிமம் உட்பட), எவ்வித தண்டத்தொகையும் விதிக்கப்படாமல் செலுத்த ஏதுவாக காலக்கெடு 30.06.2020 வரை நீட்டித்து வழங்குமாறு, ஆணையர் அவர்களின் 30.03.2020 நாளிட்ட கடிதம் மூலம் அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண்.141, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள்: 23.04.2020ல், கீழ்கண்டவாறு குறிப்பிட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

The Government after careful examination of the proposal of Commissioner of Municipal Administration, hereby order's to defer the payment of taxes and dues to the Urban Local Bodies (All Corporations including Greater Chennai Corporation, Municipalities and Town Panchayats) and also the renewal of D&O Trade License arising up to June 2020 for 3 months till 30.06.2020, without levying any penalty in view of COVID-19.

மேற்படி அரசாணையின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட) செலுத்த வேண்டிய வரிகள், நிலுவைகள் (தொழில்வரி, தொழில் உரிமம் புதுப்பித்தல் உட்பட) அனைத்தும் எவ்வித தண்டத்தொகையும் விதிக்கப்படாமல் செலுத்துவதற்கு காலக்கெடு 30.06.2020 வரை ஒத்திவைக்க அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கு சிறபபு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.355/2020, நாள்.28.05.2020ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 01.07.2020 முதல் 31.08.2020 வரை முழு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், 01.07.2020 முதல் 31.07.2020 வரை எவ்வித தண்டத் தொகையும் விதிக்காமல் தொழில் உரிமம் புதுப்பித்ததற்கும் தொழில் வரி வசூலித்ததற்கு பின்னேற்பும் மற்றும் 01.08.2020 முதல் 30.09.2020 வரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி (தொழில்வரி மற்றும் தொழில் உரிமம் புதுப்பித்தலுக்கு) எவ்வித அபராதம் மற்றும் தண்டத்தொகையின்றி பெற்றிட சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/ 1284/2019

தீர்மான எண்.572/2020 **நாள்:25-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - மண்டலம்-5, பகுதி-12, கோட்டம்-52 தொப்பை தெரு அம்மா உணவகம் கட்டிடத்தின் மாடியில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை இராயபுரம் மண்டலம் உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தை ஒதுக்கீடு செய்ய அனுமதி.

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அவர்களின் 11/06/2019 நாளிட்ட கடிதத்தில் இராயபுரம் சோமு 6வது தெருவில் உதவி ஆணையாளர் அலுவலகம், செயல்பட்டு வருவதாகவும், அக்கட்டிடம் போதிய வசதி இல்லாததாலும், பிற அசௌகர்ய காரணங்களாலும் தொடர்ந்து அதே இடத்தில் செயல்பட முடியாத நிலை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், **மன்றத் தீர்மான எண்.190/2012, நாள்.19.06.2012** மண்டலம் 5, வார்டு எண்.50 ஷேக் மேஸ்திரி தெருவில் உள்ள சமுதாயக்கூடத்திற்கு மாற்றம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி சமுதாயகூட கட்டிடத்திற்கு சென்னை பொதுபணித்துறை கண்காணிப்பு பொறியாளரால் வாடகை நிர்ணயம் பெறப்பட்டதன் அடிப்படையில் இணை ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அவர்களின் ஆணையில் மேற்படி கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் கடிதத்தில், மேற்படி கட்டிடத்திற்கு வாடகை மற்றும் 12 மாத வாடகை முன்பணம் தொடர்பான இசைவினை அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

மன்றத் தீர்மானம் எண்.310/2016 நாள்.30.06.2016ல் தமிழ்நாடு குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் மற்றும் மண்டலம்-4 வார்டு 40 மங்கம்மாள் தோட்டம் சமுதாய நலக்கூடத்தில் உணவுப்பொருள் வழங்கல் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆர்.கே.நகர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம் செயல்பட 12 மாத வாடகை முன்பணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து தீர்மானம் நிறைவேற்றி அனுமதி வழங்கப்பட்டதினை தொடர்ந்து உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மேற்படி கட்டிடத்திற்கான 12 மாத வாடகை முன்பணமாக செலுத்துவதில் இருந்து விலக்கு அளித்து திருத்திய மாநகராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றி வழங்க கோரப்பட்டுள்ளது.

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலகங்கள் அரசின் பொதுவிநியோகத்திட்டத்தின் மூலம் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் பயன்பெறவும் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் குடும்ப அட்டை அடிப்படையிலும் பெரும்பாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் உதவி ஆணையாளர், இராயபுரம் மண்டல அலுவலகம் அரசுத்துறை என்பதால் 12 மாதத்திற்கு வாடகைத் தொகை முன்பணம் வழங்க வழிவகை இல்லை. மேலும் கட்டிட இடமாற்றம் தொடர்பாக ஆணையாளர் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அவர்களின் கடிதங்களில் விரைந்து அலுவலகத்தை மேற்படி ஷேக் மேஸ்திரி தெருவில் உள்ள சமுதாய நலக்கூடத்திற்கு மாற்றம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தொடர்ந்து கடிதங்களும், நினைவூட்டு கடிதங்களும் வந்த வண்ணம் உள்ளதாலும் இத்துறை முற்றிலும் அனைத்து தரப்பு பொதுமக்களுக்கும் அரசு அலுவலகப்பணி புரிந்து வருவதால் பொதுப்பணித்துறை பொறியாளர் மூலம் ஒரு மாதத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்தும், 12 மாத வாடகைத் தொகை முன்பணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தும் திருத்திய மாநகராட்சி மன்றத் தீர்மானம் நிறைவேற்றி, பொதுமக்களின் நலனை மற்றும் அரசுப்பணி அலுவலகக்கட்டிடம் என்பதையும் கருத்தில் கொண்டும் இவ்வலுவலகம் தற்சமயம் செயல்படும் இடத்திலிருந்து வீட்டு உரிமையாளர் உடனடியாக மாற்றம் செய்ய அவசரப்படுத்துவதால் அதனை கருத்தில் கொண்டும், இராயபுரம் ஷேக் மேஸ்திரி தெருவில் உள்ள சமுதாய நலக்கூடத்தை இராயபுரம் மண்டலம் உதவி ஆணையாளர் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலக பயன்பாட்டிற்கு வாடகைக்கு ஒதுக்கீடு செய்யுமாறு கோரப்பட்டது.

மேற்படி கட்டிடத்தினை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இராயபுரம் மண்டல அலுவலகம் இயங்க கட்டிடம் ஒதுக்கீடு செய்ய இயலுமாயின் அதன் விவரம்,

பெருநகர சென்னை மாநகராட்சி எதிர்கால தேவை, பயன்பாட்டுத் தன்மை, பரப்பளவுடன் கூடிய புல வரைப்படம், வரைப்பட நகல் (உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்று), நிரந்தர நிலப் பதிவேட்டின் நகல் ஆகியவற்றுடன் வாடகை நிர்ணயம் செய்து இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறும், மன்றத் தீர்மானம் பெற்று 7 ஆண்டுகள் கடந்த நிலையில் இந்நாள்வரை உணவுப்பொருள் வழங்கல் துறைக்கு கட்டிடம் ஒப்படைப்பு செய்ய நடவடிக்கை, மேற்கொள்ளாமல் இருக்கக் காரணம், அக்கட்டிடத்தின் பயன்பாட்டுத் தன்மை ஆகிய விவரங்களை அனுப்பி வைக்குமாறு 28.06.2019, 05.08.2019 மற்றும் 04.09.2019 –ஆம் நாளிட்ட கடிதம் மூலம் மண்டலத்தில் விவரம் கோரப்பட்டது.

இந்நிலையில் உதவி ஆணையாளர் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அவர்களின் 14/10/2019 மற்றும் 20.12.2019 நாளிட்ட கடிதத்தில் இராயபுரம் ஷேக் மேஸ்திரி தெருவில் உள்ள சமுதாய நலக்கூடத்தை அலுவலக பயன்பாட்டிற்கு கோரப்பட்டு 5-வது மண்டலத்திலிருந்து எவ்வித தகவலும் வரவில்லை எனவும், மேற்படி கட்டிட உரிமையாளரின் சொந்த பயன்பாட்டிற்கு தேவைப்படுவதால் உடனடியாக அலுவலக கட்டிடத்தை காலி செய்ய கோருவதால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம்-5, வார்டு-52 தொப்பை தெருவில் உள்ள அம்மா உணவகம் செயல்படும் கட்டிடத்தின் மாடியில் காலியாக உள்ள சுமார் 2000 சதுரஅடி கொண்ட கட்டிடத்தில் போதுமான இடவசதி, வெளிச்சம் காற்றோட்டம் கொண்டதாகவும், பொதுமக்கள் வந்து செல்ல போதிய போக்குவரத்து வசதிகள் கொண்டதாகவும் உள்ளதால் அவ்விடத்தினை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, இராயபுரம் மண்டல அலுவலகம் செயல்பட ஒதுக்கீடு செய்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேற்படி கட்டிடம் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, இராயபுரம் மண்டல அலுவலகம் செயல்பட ஒதுக்கீடு செய்ய இயலுமாயின் அதன் விவரங்களுடன் வாடகை நிர்ணயம் செய்து இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு 5-வது மண்டல அலுவலர் அவர்களுக்கு 24.10.2019-ஆம் நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டு விவரம் ஏதும் பெறப்படவில்லை.

5-வது மண்டல அலுவலர் அவர்களின் 07.01.2020 கடிதத்தில் மண்டலம்-5, வார்டு-52 தொப்பை தெருவில் உள்ள அம்மா உணவகம் செயல்படும் கட்டிடத்தின் போதுமான இடவசதி, வெளிச்சம் காற்றோட்டம் கொண்டதாகவும், பொதுமக்கள் வந்து செல்ல போதிய போக்குவரத்து வசதிகள் கொண்டதாகவும் உள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கட்டிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடம் சமுதாய நலக்கூடமாக செயல்பட்டு வந்தது. கடந்த 2014-2015 நிதியாண்டில் மக்கள் நலன் கருதி கீழ்தளத்தில் அம்மா உணவகம் திறக்கப்பட்டு தற்சமயம் இயங்கி வருவதாகவும், முதல் தளத்தில் சுமார் 270 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட தளம் போடப்பட்ட அறைகள் மராமரத்து பணிகள் மேற்கொள்ளப்படாமல் தற்பொழுது பயன்பாடற்று உள்ளதாகவும், அப்பகுதியில் மராமரத்து பணிகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் பயன்பாட்டிற்கு தர இயலும் என தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கட்டிடத்தினை மராமரத்து பணிகள் செய்து உணவுப்பொருள் வழங்கல் துறை உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்ய இயலுமாயின்அதன் விவரம் ஆகியவற்றுடன் வாடகை நிர்ணயம் செய்து இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு 12.02.2020-ஆம் நாளிட்ட கடித மூலம் மண்டலத்தில் விவரம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, இராயபுரம் மண்டலம் அவர்களின் 24.01.2020 நாளிட்ட கடிதத்தில், மேற்படி கட்டிடம் அரசு பயன்பாட்டிற்கு கோரப்படுவதால் முன்பணம் (Advance) வழங்க வழிவகை ஏதும் இல்லை எனவும், மாதவாடகையினை பொதுப்பணித்துறையின் நியாய வாடகைச் சான்றின்அடிப்படையிலேயே பெற்றுக் கொள்வதற்கான சம்மதத்தினையும் தெரிவித்துள்ளார்.

மேற்படி கட்டிடத்தினை மராமரத்து பணிகள் செய்து உணவுப்பொருள் வழங்கல் துறை உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்ய இயலுமாயின்அதன் விவரம், பெருநகர சென்னை மாநகராட்சி எதிர்கால தேவை, பயன்பாட்டுத் தன்மை, பரப்பளவுடன் கூடிய புல வரைப்படம், வரைப்பட நகல் (உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்று), நிரந்தர நிலப் பதிவேட்டின் நகல் ஆகியவற்றுடன் வாடகை நிர்ணயம் செய்து இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறும், 12 மாத வாடகை முன்பணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிப்பது குறித்தும், மாதவாடகையினை

பொதுப்பணித்துறையின் நியாய வாடகைச் சான்றின் அடிப்படையிலேயே பெற்றுக் கொள்வதற்கான சம்மதத்தினை தெரிவிக்குமாறு 14.03..2020 ஆம் நாளிட்ட இத்துறை கடிதம் மூலம் கோரப்பட்டது.

மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களின் 13.03.2020 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-5, வார்டு-52 தொப்பை தெருவில் உள்ள அம்மா உணவகம் கட்டிடத்தின் முதல் மாடியில் காலியாக உள்ள கட்டிடத்தினை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இராயபுரம் மண்டல அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்வது குறித்து கடிதம் பெறப்பட்டதாகவும், அக்கட்டிடத்தின் தரைதளத்தில் தற்போது அம்மா உணவகம் இயங்கி வருவதாகவும், அக்கட்டிடத்தின் முதல் தளத்தில் தற்சமயம் பயன்படுத்தப்படாமல் உள்ளது என்றும் அக்கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டிற்கு உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி வருவாய் அலுவலர், மண்டலம்-5 அவர்களின் கடிதத்தின்படி ஒரு சதுர அடிக்கு ரூ.41/- என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், முதல் தளத்தில் உள்ள 270 சதுர மீட்டரில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, இராயபுரம் மண்டல அலுவலக பயன்பாட்டிற்கு தேவைப்படும் 1720 சதுர அடிக்கு வாடகை தொகை (1720ச.அடிx41ச.அடி)=70,520/- (எழுபதாயிரத்து ஐநூற்று இருபது மட்டும்) நிர்யணம் செய்து உதவி ஆணையாளர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறைக்கு (இராயபும் மண்டலம்) ஒதுக்கீடு செய்து பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உதவி ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புதுறை இராயபுரம் மண்டலம், அவர்களின் 18.03.2020 நாளிட்ட கடிதத்தில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, இராயபுரம் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம், இராயபுரம் சோமு 6வது தெருவில் செயல்பட்டு வருவதாகவும், அக்கட்டிடம் போதிய வசதி இல்லாததாலும் பிற அசௌகர்ய காரணங்களாலும் தொடர்ந்து அதே இடத்தில் செயல்பட முடியாத நிலை உள்ளதாலும், இராயபுரம் பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம்-5 வார்டு 52 தொப்பை தெருவில் உள்ள அம்மா உணவகம் செயல்படும் கட்டிடத்தின் மாடியில் காலியாக உள்ள கட்டிடத்தினை ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும், இராயபுரம் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்தின் பயன்பாட்டிற்கு மாத வாடகைக்கு வழங்குவது குறித்து முன்நுழைவு அனுமதி கடிதத்தினை (அலுவலகத்தின் பரப்பளவு மற்றும் வாடகை விவரங்கள்) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்திலிருந்து பெற்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் மேற்படி கட்டிடத்தினை 20.03.2020 அன்று திறப்பு விழா நடைபெற ஆவண செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5 செயற்பொறியாளர் மூலம் புதிய கட்டிடத்தில் அலுவலகம் அமைக்க முழுவீச்சில் உரிய பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இராயபுரம் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்தின் பயன்பாட்டிற்கு மாத வாடகைக்கு வழங்குவது குறித்து முன்நுழைவு அனுமதி கடிதத்தினை பெற்று வழங்கிடுமாறு கோரப்பட்டுள்ளது-

மண்டலம்-5 அலுவலர் அவர்களின் 05.08.2020 நாளிட்ட கடிதத்தில், இராயபுரம் மண்டல அலுவலக பயன்பாட்டிற்கு உதவி வருவாய் அலுவலரின் பரிந்துரைப்படி வாடகை தொகை 1720ச.அடிX41ரூ= ரூ.70,520/-மாத வாடகையாக நிர்ணயம் செய்தும் பரிந்துரைக்கப்படுகிறது. மேலும், மீதமுள்ள 1186 சதுரஅடி திறந்தவெளி மொட்டைமாடியாக உள்ளதால் இதனை உபயோகபடுத்த முடியாது எனவும், அப்பகுதி மிகவும் சேதமடைந்து உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, மண்டலம்-5, வார்டு-52 தொப்பை தெருவில் உள்ள அம்மா உணவகம் கட்டிடத்தின் முதல் மாடியில் காலியாக உள்ள கட்டிடத்தினை கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில்,

அ) மண்டலத்தில் பரிந்துரைக்கப்பட்ட 1720 சதுர அடி கொண்ட கட்டிடத்தினை ஒரு சதுர அடிக்கு ரூ.41/-வீதம் (1720ச.அடிx41ச.அடி)=70,520/-(எழுபதாயிரத்து ஐநூற்று இருபது மட்டும்) மாத வாடகை நிர்ணயம் செய்யவும்,

ஆ) 12 மாத வாடகை முன்பணத் தொகை ரூ-8,46,240/- செலுத்த வேண்டும் என்றும்,

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/ 1284/ 2019

இ) கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யவிருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்றும்,

ஈ) அரசாணை எண்.92-ன்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007-ன்படி வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும் கட்டிடங்களின் வாடகைத் தொகையினை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை 15% உயர்த்தவும்,

மேற்படி உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இராயபுரம் மண்டல அலுவலகத்திற்கு கட்டிடம் ஒதுக்கீடு செய்வதற்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"கட்டிடம் ஒதுக்கீடு செய்வதற்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.13.பொ.சு.து.ந.க.எண்.எச்1/ 0856 / 2020

தீர்மான எண்.573 / 2020 **நாள்:25-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -13, கொரனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 1472 தற்காலிக பணியாளர்களை 03.07.2020 முதல் 90 நாட்களுக்கு பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13ல் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 170 முதல் 182 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய மலேரியா செக்டார் பணியாளர்கள் (NULM), நகர சுகாதார செவிலியர்கள், அங்கான்வாடி பணியாளர்கள், அனிமேட்டர்ஸ், மகிளா ஆரோக்கிய சமிதி(MAS), மகிளர் சுய உதவிக்குழுக்கள் (SHG) மற்றும் தன்னார்வலர்கள் என மொத்தம் 1472 பணியாளர்களை (Survey Worker) 04.04.2020 முதல் மூன்று மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டு, மீண்டும் 03.07.2020 முதல் 90 நாட்களுக்கு சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.451/2020. நாள்-06.07.2020ன்படி பணியமர்த்தி கொள்ள அனுமதி பெறப்பட்டு, அதில் மாத ஊதியம் பெற தகுதியான மகிளா ஆரோக்கிய சமிதி(MAS), மகிளர் சுய உதவிக்குழுக்கள் (SHG) மற்றும் தன்னார்வலர்கள் என 1241 தற்காலிக பணியாளர்களை கணக்கீட்டு மூன்று மாத காலத்திற்கு மட்டும் தற்காலிகமாக ஒரு நாளைக்கு ரூ.500/- வீதம் ஊதியம் வழங்க நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே 208 நபர்கள் (ORW) களப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர். கூடுதலாக தேவைப்பட்ட களப்பணியாளர்களை மாத ஊதியம் பெற தகுதியான 1241 தற்காலிக பணியாளர்களிலிருந்து 197 நபர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டு மொத்தம் 405 நபர்கள் (ORW) களப்பணியாற்றி வருகின்றனர்.

மண்டலம்-13, கோட்டம்-173ல் solar institute of tech என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இல்லை, இந்த NGO நிறுவனத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்கள் காய்ச்சல் மற்றும் கொரோனா அறிகுறிகளை சரிவர கவனிப்பது இல்லை மற்றும் மேற்பார்வையாளர்களும் சரிவர பணியினை மேற்கொள்வதில்லை என்றும், மேற்படி solar institute of tech என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பணி முழுமையாகவும் திருப்திகரமானதாகவும் இல்லாததால் கொரோனா நோய் தொற்று அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் solar institute of tech என்ற தன்னார்வ நிறுவனத்தினை மாற்றி அதற்கு பதிலாக வேறு ஏதேனும் தன்னார்வ நிறுவனத்தின் மூலமாகவோ அல்லது மகிளர் சுய உதவிக்குழுக்கள் (SHG) மற்றும் தன்னார்வலர்கள் மூலமாகவோ களப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வ. எண்	கோட்டம்	தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட களப் பணியாளர்களின் எண்ணிக்கை	ஏற்கனவே தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் களப்பணியில் ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்கள் (ORW)	தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வந்த களப்பணியாளர்களிலிருந்து NGO விற்கு அளிக்கப்பட்ட பணியாளர்கள்	தற்போது தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை	மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை
1	170	79	159	188	17	96
2	171	80			39	119

3	172	56			33	89
4	173	129			0	129
5	174	60			44	104
6	175	51			20	71
7	176	94			10	104
8	177	182			52	234
9	178	80			11	91
10	179	110			0	110
11	180	42			78	120
12	181	82			28	110
13	182	80			15	95
Total		**1125**	**159**	**188**	**347**	**1472**

எனவே, மேற்கண்ட 1125 தற்காலிக மாத ஊதியம் பெற தகுதியான களப்பணியாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு அளித்த 188 களப்பணியாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 159 களப்பணியாளர்கள் (ORW) என மொத்தம் 347 களப்பணியாளர்களும், ஆக மொத்தம் 1472 பணியாளர்கள் கள ஆய்வில் ஈடுபடுத்தினால் மட்டுமே கொரோனா நோய்தொற்று தடுப்பு பணி தொய்வில்லாமல் நடைபெறும்.

எனவே,

1. மண்டலம்-13ல் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 170 முதல் 182 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்கும் பணிக்கு 1125 தற்காலிக மாத ஊதியம் பெற தகுதியான களப்பணியாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு அளித்த 188 களப்பணியாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 159 களப்பணியாளர்கள் ஆக மொத்தம் 1472 பணியாளர்களை (Survey Worker) 03.07.2020 முதல் 90 நாட்களுக்கு பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட 1472 பணியாளர்களில் (Survey Workers) ஊதியமாக ஒரு நாளைக்கு ரூ.500/- வீதம் ஊதியம் பெற தகுதியான பணியாளர்களாக கருதி மண்டலம்-13, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் தற்காலிக களப்பணியாளர்கள் 1125 நபர்களுக்கு 90 நாட்கள் ஊதியம் வழங்கவும், மீதமுள்ள 347 தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் (NGO) பணியாளர்களுக்கு (ORW) தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து ஊதியம் வழங்க வேண்டியும்,
3. மேற்கண்ட 1125 தற்காலிக பணியாளர்களுக்கு கோட்ட சுகாதார ஆய்வாளர்கள் மூலம் வருகை சான்றொப்பம் பெற்று பணிபுரிந்து வந்த நாட்களுக்கு மட்டும் ஊதியம் வங்கி கணக்கில் National Electronic Funds Transfer (**NEFT**) மூலம் வழங்கவும், தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் (NGO) கீழ் பணிபுரியும் களப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மீதமுள்ள 347 பணியாளர்களுக்கு(ORW) அந்தந்த தொண்டு நிறுவனத்தின் மூலம் ஊதியம் வழங்கவும்,

4. மேற்கண்ட 1125 தற்காலிக பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் செலவீனத்தை கணக்கு குறியீட்டு எண்.20-21-07, கணக்கு தலைப்பு எண். 230-70-12-03 என்ற தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து ஊதியம் வழங்க அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.5.நக.எண். *5924 / 2020*

தீர்மான எண்.574 / 2020 **நாள்:25-08-2020**

மண்டலம் - 5, வார்டு -57, அண்ணாபிள்ளை தெரு - பொது பட்டறையின் உட்பகுதியில் உள்ள மிகவும் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள பட்டறையை இடிப்பதற்கு அனுமதி.

மண்டலம்- 5, பகுதி-13, வார்டு-57க்கு உட்பட்ட அண்ணாபிள்ளை தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொது பட்டறையின் உட்பகுதியில் தேவையற்ற மர கழிவுகளை பயன்படுத்தி மாற்று உபயோக பொருட்கள் தயாரிக்கும் ஆலைகள் *(Wood Processing Unit)* நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள உபயோகமற்ற நிலையில் உள்ள கட்டிடம் மற்றும் எஃகு கூரையிலான பட்டறையானது சுமார் 70 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டது. எனவே, தேவையற்ற மர கழிவுகளை பயன்படுத்தி மாற்று உபயோக பொருட்கள் தயாரிக்கும் ஆலைகள் *(Wood Processing Unit)* நிறுவும் பணி மேற்கொள்ள இடையூறாக இருக்கும் மிகவும் பழுதடைந்து மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள கட்டிடம் மற்றும் எஃகு கூரையிலான பட்டறையை *(Steel Roof Truss)* அகற்றுவது அவசியமாகிறது.

பொது பட்டறையின் உட்பகுதியில் உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடம் மற்றும் பட்டறையின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை தளம் = 809.08 சதுர மீட்டர் *(20.50மீ x 33.60மீ) + (6.20மீ x 19.40மீ)*

தற்போதைய புத்தக மதிப்பு = ரூ. 5,982.27

ஆகவே, மண்டலம்-5, வார்டு-57, அண்ணாபிள்ளை தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொது பட்டறையின் உட்பகுதியில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்தும் மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள பட்டறையை இடித்து அகற்றுவதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *24.08.2020* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"பட்டறையை இடித்து அகற்றுவதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

க.து.ந.க.எண்.இ1/1278/2019

தீர்மான எண்.575/2020 **நாள்:26-08-2020**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - திரு.ஈ.கோவிந்தசாமி, கல்வி அலுவலர் அவர்கள் - 02.08.2019 அன்று தன் விருப்ப ஓய்வில் சென்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடம் - ஊட்டுப்பதவியில் பணிபுரியும் பணியில் மூத்த உதவிக்கல்வி அலுவலர்களைக் கொண்டு - 2019-2020 ஆம் ஆண்டிற்கான முந்துரிமைப்பட்டியல் முறைப்படுத்தி - பதவி உயர்வு மூலம் கல்வி அலுவலர் பதவியினை நிரப்ப - அரசிடம் இருந்து கூடுதல் விவரம் கோரப்பட்டது - அரசுக்கு விளக்கம் அளித்து மற்றும் கூடுதல் கல்வி அலுவலர் பதவியிலிருந்து பணிமாற்றம் (Transfer of Post) மூலம் கல்வி அலுவலர் பதவிக்கான - நியமன விதிகளை மாற்றியமைக்க (Amendment) கோருதல் குறித்து அரசுக்கு கடிதம் அனுப்ப அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் 26.12.2019 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி அலுவலர் காலிப்பணியிடத்தினை நிரப்புவது குறித்து, தற்போது கல்வி அலுவலர்(பொ) பதவி வகிக்கும் திரு.ஆர்.பாரதிதாசன், கூடுதல் கல்வி அலுவலர் அவர்கள், தான் கல்வி அலுவலர் பதவி புரிய அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மற்றும் பணிமூப்பில் முதுநிலையில் உள்ள தன்னை பணிமூப்புப்பட்டியலில் சேர்த்து பெருநகர சென்னை மாநராட்சி, கல்வி அலுவலராக பதவி உயர்வு அளிக்குமாறு கோரியுள்ளார். ஆனால், விதிகளின்படி கூடுதல் கல்வி அலுவலர் பணியிடமானது கல்வி அலுவலருக்கான ஊட்டுப்பதவியில் இல்லை என்ற காரணத்தினால், திரு.ஆர்.பாரதிதாசன் அவர்களது பெயர் பரிந்துரை செய்யப்படவில்லை. உதவி கல்வி அலுவலர் பதவியானது கல்வி அலுவலர் பதவியின் ஊட்டுப்பதவியாக இருப்பதின் காரணத்தினால் மூத்த உதவி கல்வி அலுவலரான திருமதி. வி. சாந்தி அவர்களை கல்வி அலுவலராக பதவி உயர்வு மூலம் நிரப்ப பரிந்துரை செய்யப்பட்டு 2019-2020 ஆம் ஆண்டிற்கான முந்துரிமைப்பட்டியலை முறைப்படுத்தி, பதவி உயர்வு மூலம் கல்வி அலுவலர் பதவியினை நிரப்ப அரசாணை வழங்க வேண்டி கோரப்பட்டது.

முன்னதாக பெருநகர சென்னை மாநகராட்சியில் கூடுதல் கல்வி அலுவலராக பணிபுரியும் திரு.ஆர்.பாரதிதாசன் என்பவருக்கு சென்னை மாநகராட்சி, கல்வி அலுவலராக பதவி உயர்வு வழங்கக் கோரிய தங்களது 15.08.2019 நாளிட்ட கருத்துரு குறித்து 06.09.2019 நாளிட்ட அரசுக்கடிதத்தில் விவரங்கள் கோரப்பட்டது.

பதில்: பெருநகர சென்னை மாநகராட்சியில் கூடுதல் கல்வி அலுவலராக பணிபுரியும் திரு.ஆர்.பாரதிதாசன் அவர்களுக்கு சென்னை மாநகராட்சி கல்வி அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு கோரி அனுப்பப்பட்ட இவ்வலுவலக 15.08.2019 நாளிட்ட கருத்துரு குறித்து கோரப்பட்ட விவரங்களை இவ்வலுவலக கடித எண்.க.து.ந.க.எண்.இ1/0005/2019, நாள்:15.11.2019-ல் விவரங்களை சமர்ப்பித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. அக்கடிதத்தின் நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. மேலும், அரசு கடிதத்தில் கோரியுள்ள விவரங்களை கீழ்கண்டவாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

i. பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி அலுவலர் பணியிடமானது, பெருநகர சென்னை மாநகராட்சி கல்விப்பணி விதி 1970ன்படி, தோற்றுவிக்கப்பட்ட நிரந்தர பணியிடமாகும். இப்பணியிடம் சென்னை மாநகராட்சி கல்விப்பணி விதிகள் 1970ன் கீழ் உள்ளது. இப்பணியிடத்திற்கான நியமனம் செய்யும் அதிகாரம் அரசுக்கே உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி கல்விப்பணி விதிகள் 1970ன்படி கீழ்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்பட்டு நிரப்பப்படுகிறது.

Class IA

Educational Officer

Posts	Method of Recruitment
Class I-A Educational Officer	i) By Promotion from category 1 and 2 in class II or By appointment from among the holders of the post of District Educational Officers or Headmasters and Headmistress in the Tamil Nadu Educational Service on deputation basis.

(4) Qualification:- No person shall be eligible for appointment to the posts specified in column (1) of the table below unless he/ she possess the qualification specified in the corresponding entries in column (2) thereof:

Posts	Method of Recruitment
Educational Officer	i) B.A., or B.Sc., degree of a recognized university or Institution ii) B.T.Degree of a recognized University or Institution, iii) Experience for a period of not less than two years of Asst.Educational Officer in the case of those other than District Educational Officer in the Tamil Nadu Educational Services appointed as deputation basis; and iv) pass in the Account Test for subordinate officers part-I & II or any similar test prescribed by the Government.

ii. கூடுதல் கல்வி அலுவலர் பணியிடமானது அரசாணை நிலை எண்.303, ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்:28.02.1981-ன்படி தோற்றுவிக்கப்பட்டு, மன்றத்தீர்மான எண்.49/90, நாள்:25.01.1990ன்படி, சென்னை மாநகராட்சி பணிகளில் வகுப்பு 2ன்கீழ் வகைப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அதன் நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

iii. அரசாணை (நிலை) எண். 303, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்துறை, நாள் 28.02.1981ன்படி தோற்றுவிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் கல்வி அலுவலர் பணியிடமானது ஒரு வருடத்திற்கு தற்காலிகமாக தோற்றுவித்த பணியிடமாகும். தற்காலிகமாக செயல்பட்டு வந்த கூடுதல் கல்வி அலுவலர் பணியிடம், கீழ்க்காண் அரசாணைகளின்படி நீட்டிப்பு செய்யப்பட்டு செயல்பட்டு வந்துள்ளது. இவ்வாறு புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	அரசாணை எண்.	நீட்டிப்பு செய்யப்பட்ட காலங்கள்
1.	G.O.Ms.No.16, Municipal Administration and Water Supply Dept., Dated:8.1.1993.	01.10.1991 to 30.09.1993
2.	G.O.Ms.No.15, Municipal Administration and Water Supply Dept., Dated:12.1.1994.	01.10.1993 to 28.02.1994
3.	G.O.Ms.No.267, Municipal Administration and Water Supply Dept., Dated:29.10.1996.	01.03.1994 to 29.02.1996
4.	G.O.Ms.No323, Municipal Administration and Water Supply Dept., Dated:29.10.1996.	01.03.1996 to 30.09.1996

இவ்வாறு சென்னை மாநகராட்சி கல்வித்துறைக்கென ஒப்பளிப்பு செய்யப்பட்ட கூடுதல் கல்வி அலுவலர் பணியிடத்தில், ஒப்பளிப்பு செய்யப்பட்ட நாள்முதல் உதவி கல்வி அலுவலர் நிலையிலிருந்து பதவி உயர்வு மூலம் கூடுதல் கல்வி அலுவலர் பணியிடம் நிரப்பப்பட்டு வந்துள்ளது.

அரசாணை (பத்தாண்டு) எண்.113, நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கு துறை நாள்:14.03.1997ன்படி, திருமதி.பத்மா பால்ராஜ் என்பவர் 01.05.1995 முதல் கூடுதல் கல்வி அலுவலராகவும், அரசு ஆணை(ப)எண்.432, நாள்:06.09.1996-ன்படி, திரு.என்.முத்துகிருஷ்ணன் என்பவர் கூடுதல் கல்வி அலுவலராக 30.04.1997-லும், அரசாணை (உ.ப.) எண்.105, ந.நி.மற்றும் கு.வ.(மா.ந.3)த்துறை, நாள்:06.08.1997ன்படி திருமதி.கோ.மனோகரி, என்பவர் கூடுதல் கல்வி அலுவராக 31.08.1997-லும் பணியாற்றி ஓய்வு பெற்றார்கள். இறுதியாக அரசாணை எண்.193, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்:03.09.1998-ன்படி திருமதி.சுசிலா ஜெல் என்பவர் கூடுதல் கல்வி அலுவலராக பணியாற்றி 29.02.1999ல் ஓய்வு பெற்றார்.

திருமதி. சுசிலா ஜெல், கூடுதல் கல்வி அலுவலர் 29.02.1999-ல் ஓய்வு பெற்றபின், கூடுதல் கல்வி அலுவலராக பதவி உயர்வு பெற்ற திரு.முனிரத்தினம், உதவி கல்வி அலுவலர் அவர்களின் நியமனம் குறித்தான வழக்கு மாநில நிர்வாக தீர்ப்பாயத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பில், **"""IN THE TAMIL NADU ADMINITRATIVE TRIBUNAL AT CHENNAI-04 O.A. Nos.1281/98 and 4171 & 6446/2001. AND M.A.Nos.5959 & 5960 OF 2002 IN O.A. 6446/2001. DT.11.02.2003-ன்படி, "The answer has to be given in the negative and Government also has decided the same even though it has taken long time, For the reasons stated above. I hold that the appointment of the applicant Munirathinam as Assistant Education Officer in the year 1997 and his subsequent promotion as Additional Educational Officer are all arbitrary and against the rules and therefore liable to be set aside and they are set aside."**

அவ்வழக்கு தீர்ப்பில், திரு.முனிரத்தினம், கூடுதல் கல்வி அலுவலர் பதவி உயர்வு அரசு விதிகளுக்கு முரணானது என ரத்து செய்யப்பட்டு, இவ்வழக்கு முடிவுற்றது என்பதை தங்களுக்கு கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அப்பணியிடம் நீண்ட நாட்களாக நிரப்பப்படவில்லை. எனவே, அரசாணை (2டி) எண். 70 பள்ளிக்கல்வி (பக1 (1) துணை நாள் 05.06.2015-ன்படி அப்பணியிடம் நிரப்பப்படும் நாள் முதல் புத்தாக்கம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, திரு. டி. சுப்பிரமணியன், உதவி கல்வி அலுவலர் அவர்கள் கூடுதல் கல்வி அலுவலராக பதவி உயர்வு பெற்று 08.07.2015 முதல் பணிபுரிந்து வந்து 28.02.2018 அன்று பிற்பகல் முதல் வயது ஓய்வு முதிர்வு பெற்றார். எனவே, இப்பதவியின் ஊட்டப்பதவியான உதவி கல்வி அலுவலர் பணிநிலையில் மூத்த திரு. ஆர். பாரதிதாசன், உதவி கல்வி அலுவலர் அவர்கள் கூடுதல் கல்வி அலுவலராக பதவி உயர்வு பெற்று பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.க.து.ந.க.எண். இ1/0003-2/2018 நாள்.14.04.2018 அன்று முதல் பணிபுரிந்து வருகிறார் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

iv. திருமதி. எஸ் சாரதா என்பவர் அப்போதைய கூடுதல் கல்வி அலுவலராக பணிபுரிந்த நிலையில், மன்றதீர்மானத்தின்படி கல்வி அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டதற்கு, அரசாணை (நிலை) எண். 543, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்:08.06.1990-ன்படி, அரசால் பின்னேற்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, கல்வி அலுவலர் பதவியின் நியமன அலுவலர் அரசு என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4. மேற்கண்ட விவரங்கள் ஏதும் பார்வை இரண்டில் காணும் தங்களது கருத்துருவில் தெரிவிக்கப்படவில்லை. கூடுதல் கல்வி அலுவலராக பணிபுரியும் திரு.ஆர்.பாரதிதாசன் என்பவர் தனக்கு சென்னை மாநகராட்சி கல்வி அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க வேண்டியுள்ளார் என தெரிவித்து, பணி முதுநிலையில் முன்னுரிமையில் உள்ள அன்னாரது பெயரை பரிந்துரை செய்யாதற்கான விவரம் ஏதும் தங்களது கருத்துருவில் தெரிவிக்கப்படாமல், பணி முதுநிலையில் அன்னாருக்கு அடுத்ததாக உள்ள திருமதி.வி.சாந்தி என்பவருக்கு கல்வி அலுவலர் பதவி உயர்வு வழங்க தங்களது கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதற்கான காரணங்கள்.

க.து.ந.க.எண்.இ1/1278/2019

பதில்: பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையில், திரு.ஈ.கோவிந்தசாமி, கல்வி அலுவலர் அவர்கள் 02.08.2019 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வு பெற்றதால், 03.08.2019 முதல் கல்வி அலுவலர் பணியிடம் காலிப்பணியிடமாக உள்ளது. எனவே, தற்போது கல்வி அலுவலர்(பொறுப்பு) பதவி வகிக்கும், திரு.ஆர்.பாரதிதாசன், கூடுதல் கல்வி அலுவலர் அவர்களது பதவி ஊட்டுப்பதவி இல்லை எனினும் """"அரசாணை (நிலை) எண். 543, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 08.06.1990-ல், """" திருமதி. எஸ். சாரதா, கூடுதல் கல்வி அலுவலர் அவர்களுக்கு மன்றத்தீர்மான எண். 49/90 நாள் 25.01.1990 ன்படி, ரூ. 3000 – 100 – 3500 – 125- 4500 என்ற ஊதிய விகிதத்தில் 27.01.1990 அன்று கல்வி அலுவலராக பணிநியமனம் செய்யப்பட்டமைக்கு"" அரசின் பின்னேற்பு ஆணை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கூடுதல் கல்வி அலுவலர் பதவியில் வழங்கப்பட்டு வரும் ஊதிய விகிதமானது, கல்வி அலுவலர் பதவியின் ஊதிய விகிதத்திற்கு நிகரானது ஆகும். (Pay Matrix Level 25 Rs. 59,300 – 1,87,700) இப்பதவிகளுக்கான ஊட்டப்பதவியும், உதவி கல்வி அலுவலர் பதவியாக உள்ளது. இந்நிலையில் கடந்த 25.01.1990 நாளிட்ட மன்றத்தீர்மானத்தில் அப்போதைய கூடுதல் கல்வி அலுவலர் அவர்களுக்கு கல்வி அலுவலர் பதவி வழங்கிட மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசின் பின்னேற்பு பெறப்பட்டது. இதில் கூடுதல் செலவினம் எதுவும் ஏற்படாது. கல்வி அலுவலர் மற்றும் கூடுதல் கல்வி அலுவலர் இரு பதவிகளுக்கும் ஒரே சம்பள விகிதம் ஆகும். எனவே கடந்த 08.06.1990-ல் திருமதி. எஸ். சாரதா, (கூடுதல் கல்வி அலுவலர்) என்பவருக்கு கல்வி அலுவலர் பதவி வழங்கப்பட்டது போன்று தற்போது திரு. ஆர். பாரதிதாசன், கூடுதல் கல்வி அலுவலருக்கு, கல்வி அலுவலர் பதவி வழங்கிட ஆணை வேண்டி 15.08.2019 மற்றும் 15.11.2019 ஆகிய நாளிட்ட கடிதம் வாயிலாக அரசை கோரப்பட்டது.

பின்னர், அரசு கடித எண்.2702/பக1(1) 2019-1, நாள்:06.09.2019ல் கல்வி அலுவலர் பணியிடம் பதவி உயர்வு பணியிடமெனில், பதவி உயர்வு வழங்குவதற்கான ஊட்டுப்பதவி மற்றும் அதற்கான பணியிடத்தில் பணிபுரியும் அலுவலர்கள் முன்னுரிமைப்பட்டியல் ஆகியவற்றுடன் திருத்திய கருத்துரு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது.

எனவே, கூடுதல் கல்வி அலுவலர் பணியிடமானது ஊட்டுப்பதவி இல்லாத காரணத்தினால், விதிகளின்படி, கூடுதல் கல்வி அலுவலர் பணியிடத்திலிருந்து கல்வி அலுவலர் பணியிடத்தினை நிரப்ப வழிவகை இல்லை என்ற காரணத்தினால், திரு.ஆர்.பாரதிதாசன், கூடுதல் கல்வி அலுவலர் அவர்களின் பெயர் பரிந்துரை செய்யப்படாமல், ஊட்டுப்பதவியான உதவி கல்வி அலுவலர் பதவி வகிக்கும் அலுவலர்களைக் கொண்டு 01.01.2019 ஐ மையநாளாக கொண்டு தயார் செய்யப்பட்ட முந்துரிமைப்பட்டியலில் இடம் பெற்றுள்ள திருமதி. வி. சாந்தி, உதவி கல்வி அலுவலர் அவர்களை கல்வி அலுவலராக பதவி உயர்வு மூலம் நிரப்ப பரிந்துரை செய்யப்பட்டு 26.12.2019 நாளிட்ட திருத்திய கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

5. இதுகுறித்து விவரங்களுடன், சென்னை மாநகராட்சி கல்விப் பணி விதிகள் 1970ல் கூடுதல் கல்வி அலுவலர் பணியிடம் ஏதும் இடம்பெறாத நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி உதவிக் கல்வி அலுவலர் பணியிடத்திலிருந்து கூடுதல் கல்வி அலுவலர் பணியிடத்திற்கு எதன் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படுகிறது அதற்கான பணி விதிகள் மற்றும் சென்னை மாநகராட்சி கூடுதல் கல்வி அலுவலர் பணியிடம் எந்த விதிகளின்கீழ் நிர்வகிக்கப்படுகிறது என்பது குறித்த விவரங்கள் ஆகியவற்றுடன் சென்னை மாநகராட்சி கூடுதல் கல்வி அலுவலர் பணியிடம் குறித்து பார்வை ஒன்றில் காணும் அரசுக் கடிதத்தில் கோரப்பட்ட விவரங்கள்:

பதில்: சென்னை மாநகராட்சி கல்வித்துறையில், அரசாணை (நிலை) எண்.303, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்துறை, நாள்:28.02.1981-ன்படி கூடுதல் கல்வி அலுவலர் பதவி தோற்றுவிக்கப்பட்டது.

இப்பதவியில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை 1 ஆகும். இக்கூடுதல் கல்வி அலுவலர் பதவியில் கடைசியாக திருமதி. சுசிலா ஜெல் என்பவர் பணியாற்றி 28.02.1999 அன்று ஓய்வு பெற்றுள்ளார். பின்னர் பல்வேறு நிர்வாக காரணங்களால் நிரப்பப்படாமல் இருந்தது.

இந்நிலையில், அரசாணை (2டி) எண்.70, பள்ளிக்கல்வி (பக(1)துறை, நாள்:05.06.2015-ன்படி, சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் நிர்வாக நலன் கருதி ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து, 1999 முதல் நிரப்பப்படாமல் இருந்த கூடுதல் கல்வி அலுவலர் பணியிடத்தினை அப்பணியிடம் நிரப்பப்படும் நாள் முதல் புத்தாக்கம் செய்து அரசு ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.29783/கல்வி-II/2015, நாள்.03.06.2015-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்பட்டது. எனவே, மேற்படி அரசாணையின்படி, கூடுதல் கல்வி அலுவலர் பணியிடம் உதவி கல்வி அலுவலர் பணியிடத்திலிருந்து பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டு வருகிறது மற்றும் இப்பதவி பெருநகர சென்னை மாநகராட்சிக்கென்று தோற்றுவிக்கப்பட்டுள்ளதால், சென்னை மாநகராட்சி கல்விப்பணி விதிகள் 1970 இப்பதவிக்கும் பொருந்தும்.

அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள்:06.10.2009ன்படி கூடுதல் கல்வி அலுவலர் பதவிக்கு பணி நியமனம் செய்யும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. அரசு கடித (நிலை) எண்.103. நாள்:01.06.2005-ன்படி 01.06.1986 முதல் மாநகராட்சி கல்வித்துறை பணியாளர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியல்லாதோர் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்ட பின் அவர்களது பொது நிர்வாகப் பணிகள் அதாவது பணி நியமனம், பதவி உயர்வு, பணியிட மாற்றல், ஊதிய நிர்ணயம் ஓய்வூதிய பயன்கள் அளித்தல் போன்ற பொறுப்புகள் மாநகராட்சி ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.131,கல்வி நாள்:01.02.1991ல், ஏற்கனவே மாநகராட்சி ஆணையர், மாநகராட்சிப்பள்ளிகளை நிர்வகிக்க ஆணையிடப்பட்டுள்ளதையே மீண்டும் வலியுறுத்தப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை மாநகராட்சி கல்வித்துறையில் கூடுதல் கல்வி அலுவலர் காலிப்பணியிடம் நிரப்புவதற்கான காரணங்களை கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

- சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின்னர் சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே உள்ள மண்டலங்களில் செயல்படும் பள்ளிகள் மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளில் செயல்படும் பள்ளிகளில், மாண்புமிகு முதல்வர் மற்றும் சென்னை மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் அறிவிக்கப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் தொய்வு ஏற்படாமல் விரைவாக செயல்படுத்திடவும்.
- சென்னை மாநகராட்சியின் கல்வித்துறை பல சமுதாய கல்லூரிகளை நடத்துவதற்கு ஏதுவாகவும்,
- ஆசிரியர்களுக்கு மற்றும் மாணவர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் நடத்துவதற்கு உறுதுணையாக இருப்பதற்கும்,
- மேலும் செம்மையாக நடைபெற்று வரும் சத்துணவுத்திட்டத்தினை பொறுத்தவரையில் ஒரே அதிகாரியின் (கூடுதல் கல்வி அலுவலர்) கீழ் செயல்படவும்,
- மற்ற மாவட்டங்களில் ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளரின் கீழ் செயல்படும் சத்துணவு திட்டத்தினை போன்று சென்னை மாநகராட்சிக்கென ஒரு அதிகாரியின் கீழ் செயல்பட, கூடுதல் கல்வி அலுவலர் பணியிடம் நிரப்புவது அவசியமாகிறது.

மேற்படி விவரங்களை அரசுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், கல்வி அலுவலர் மற்றும் கூடுதல் கல்வி அலுவலரின் ஆகிய இரு பதவிக்களுக்கும் ஒரே ஊதிய விகிதம் *(Pay Matrix Level 25 Rs. 59,300 – 1,87,700)* உள்ளதால், கூடுதல் கல்வி அலுவலர் பதவி வகிப்பவர் உதவி கல்வி அலுவலர் தெரிவுப்பட்டியல் இருப்பவரை விட பணியில் மூத்தவர் என்பதாலும், கூடுதல் கல்வி அலுவலர் பணியில் இருப்பவருக்கு பதவி வகை மாற்றம் மூலம் கல்வி அலுவலர் பதவிக்கு பணி நியமனம் செய்யவும், விருப்பமின்மை தெரிவிக்கும் பட்சத்தில் ஊட்டு பதவியில் உள்ள உதவி கல்வி அலுவலர் தெரிவுப்பட்டியலில் முதுநிலையில் உள்ள நபருக்கு கல்வி அலுவலர் பதவி வழங்கிட அரசை மீண்டும் இதன் மூலம்

கேட்டுக் கொள்ளப்படுகிறது. கூடுதல் கல்வி அலுவலரை பதவி வகை மாற்றம் மூலம் கல்வி அலுவலராக பணி நியமனம் செய்வதால் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏற்பட வாய்ப்பு இல்லை.

ஆனால், கல்வி அலுவலர் பதவிக்கு கூடுதல் கல்வி அலுவலர் பதவியினை ஊட்டப் பதவியாக நிர்ணயம் செய்து பெருநகர சென்னை மாநகராட்சி பணி விதிகள் 1970-ல் விதித்திருத்தம் ஏதும் இதுவரை மேற்கொள்ளப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்படவில்லை. விதித்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பின் மன்றத்தின் ஒப்புதலுடன் அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

எனவே, கல்வித்துறையில் நிர்வாக நலன் கருதி, கூடுதல் கல்வி அலுவலராக பணிபுரிந்து வரும் நபருக்கு கல்வி அலுவலர் பதவியினை பதவி மாற்றம் மூலம் வழங்க, கல்வி அலுவலர் பதவிக்கான நியமன விதிகளை விதி திருத்தம் மேற்கொள்ளவும், விருப்பமின்மை தெரிவிக்கும் பட்சத்தில் ஊட்டப்பதவியில் இருக்கும் உதவி கல்வி அலுவலர்களுக்கு பதவி உயர்வின் மூலம் கல்வி அலுவலர் பதவியினை நிரப்பவும் கீழ்கண்டவாறு பணிவிதிகளை திருத்தம் மேற்கொள்ள சிறப்பு அதிகாரி/ ஆணையரின் ஆணை வேண்டப்படுகிறது .

Amendment

"In the said Rules, in rule 3, in the Table, in entry (i) in column (2) against the corresponding entry (i)

Class I A

Educational Officer

Posts	Method of Recruitment
(1)	(2)
Educational Officer	Class I-A
	i) By transfer from Additional Educational Officer ; If the Addlitional Educational officer is not willing to the Educational Officer Post then, By Promotion from categories 1 and 2 in class II;or ii) By appointment from among holders of the post of District Educational Officers or Headmasters and Headmistress in the Tamil Nadu Educational Service on deputation basis.

இவ்வாறு விதி திருத்தம் செய்யப்படும் பட்சத்தில், இனி வரும் காலங்களில், பணிமூப்பில் முதுநிலையில் முதலில் உள்ள நபர் கல்வி அலுவலர் பதவிக்கும் அடுத்த நபர் கூடுதல் கல்வி அலுவலர் பதவிக்கும் பணியமர்வு செய்யப்படுவர். இதனால், *Hirachy* (படிநிலை) பின்பற்றப்பட்டு, சீரான நிர்வாகத்திற்கும், மூத்தோர் இளையோர் ஊதிய முரண்பாடு (*Pay anamoly)* இன்றியும் பணிபுரிய ஏதுவாகும்.

எனவே,

(அ) தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் கல்வி அலுவலர் பதவி 03.08.2019 முதல் காலியாக உள்ளதால், துறைத்தலைவர் பதவியின் முக்கியத்துவம் மற்றும் உடனடியாக நிரப்பப்படவேண்டியதன் அவசரம் மற்றும் அவசியத்தினை கருதி, கூடுதல் கல்வி அலுவலர் பதவியிலிருந்து (*Transfer of Post)* பதவி வகை மாற்றம் மூலம் கல்வி அலுவலர் பதவி வழங்க ஏதுவாக """"கல்வி அலுவலர் பதவிக்கான நியமன விதிகளை மாற்றியமைத்து (*Amendment)"* அரசாணை வழங்க அரசினை கோர ஒப்புதலும்,

(ஆ) விதி திருத்தம் (*Amendment*) வழங்கும் பட்சத்தில் தற்போது கூடுதல் கல்வி அலுவலராக பணிபுரிந்து வரும் திரு. ஆர். பாரதிதாசன் அவர்களை பதவி வகை மாற்றம் மூலம் கல்வி அலுவலராக நியமனம் செய்து., அரசாணை வழங்க வேண்டி, அரசு முதன்மைச்செயலாளர், பள்ளிக்கல்வித்துறை அவர்களுக்கு கடிதம் அனுப்பவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *25.08.2020* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"அரசுக்கு கடிதம் அனுப்ப, அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

ம.அ.9.ந.க.எண்.இ1/ 5653/ 2020

தீர்மான எண்.576 / 2020 **நாள்:26-08-2020**

மதிப்பீடு- 2020-21 - மண்டலம்-9, பகுதி- 27A, வார்டு-114,116,120,121 மற்றும் 125 - மெரினா கடற்கரை பூங்கா புல்வெளி 1 முதல் 14 வரை பாரமரிக்கும் பணி - 2019-20-ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,13,63,000/-க்கு நிர்வாக அனுமதி.

பணியின் பெயர் :

வ. எண்.	வார்டு எண்.	பணி / சாலையின் விவரம்	பணியின் விவரம்	நீளம் (மீ)	பரப்பளவு ச.மீ.	மதிப்பீட்டுத் தொகை ரூ.
1	114	மெரினா கடற்கரை பூங்கா புல்வெளி எண்: 1 முதல் 4 வரை	காமராஜர் சாலையில் உள்ள மெரினா கடற்கரை பூங்கா புல்வெளியை பாரமரிக்கும் பணி (ஒரு வருடத்திற்கு)	-	-	28,59,000/-
2	116	மெரினா கடற்கரை பூங்கா புல்வெளி எண்: 5 முதல் 8 வரை		-	-	28,44,000/-
3	120 (ம) 121	மெரினா கடற்கரை பூங்கா புல்வெளி எண்: 9 முதல் 12 வரை		-	-	27,97,000/-
4	125	மெரினா கடற்கரை பூங்கா புல்வெளி எண்: 13 முதல் 14 வரை		-	-	28,63,000/-
		மொத்தம்				**1,13,63,000/-**

02.	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	துணை ஆணையர் (பணிகள்)
03.	எந்த துறைக்காக இப்பணிசெயலாக்கம்	:	மண்டலம் - 9
04.	சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி	:	மண்டலம்-9
05.	தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி	:	செயற்பொறியாளர்-9, செயல்முறை ஆணை எண்: 55,56,57,58/2020, தேதி: 13.08.2020
06.	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் வைத்து தயாரிக்கப்பட்டது.	:	2019-2020
07.	மதிப்பீட்டின் தொகை		
	அ) பணி செலவீனம் மட்டும்	:	ரூ. 98,39,619.24
	ஆ) மேலான மேற்பார்வை	:	ரூ. -
	இ) சிறு மேற்பார்வைசெலவு	:	ரூ. -
	ஈ) மற்றைய எதிர்பாராசெலவு	:	ரூ. 2,44,230.26
	உ) தரக்கட்டுப்பாடு	:	ரூ. -
	ஊ) தமிழ்நாடு தொழிலாளர் நலநிதி	:	ரூ. 98,396.19
	எ) சரக்குமற்றும் சேவைவரி (ஜி.எஸ்.டி)	:	ரூ. 11,80,754.31
	மொத்தம்	:	ரூ. 1,13,63,000.00
08.	மழைநீர் வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலைப் பகுதியாஅதன் அளவு குறிப்பிடவும்	:	இல்லை
09.	ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு	:	ரூ. /-
10.	வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா	:	ஆம்

11.	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	:	-
12.	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	:	பணி நடைபெற்று வருகிறது
13.	நிதியின் மூலத்தன்மை	:	பராமரிப்பு நிதி பணி
	அ) வரவு செலவு ஒதுக்கீடு	:	ரூ.
	ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்டநிதி	:	ரூ.
	இ) மீதம் உள்ள நிதி (அ-ஆ)	:	ரூ.
	ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	:	ரூ. 1,13,63,000/-

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,13,63,000/- (ரூபாய் ஒரு கோடியே பதிமூன்று இலட்சத்து அறுபத்தி மூன்றாயிரம் மட்டும்) சென்னை மாநகராட்சி சட்டம் 1919 விதி 78ன் படி இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் இப்பணிக்கு தேவையான ரூ. 1,13,63,000/-ஐ 20-21-07/230-150-400 என்ற கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும் சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில் துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் 24.08.2020 நாளிட்ட மேற்குறிப்பில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

> **" சென்னை பெருநகரத்தின் மி முக்கிய இடம் மெரினா கடற்கரை, COVID19ற்கான முழு அடைப்புக் காலத்தில் இங்கே உள்ள பூங்காக்கள் முறையாகப் பராமரிக்கப்படவில்லை. நேரடித் தணிக்கையின் போது இது கண்டறியப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியினால் கடந்த 4 மாதங்களாள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அவ்வாறு நேரடியாகப் பராமரிப்பது சிரமமாக உள்ளதால், பிற பூங்காக்களைப் போல ஒப்பந்ததாரர் மூலம் இதைப் பராமரித்திட அறிவுறுத்தப்பட்டது. இதற்கு அனுமதி வழங்கலாம். ஆணைக்காக"**

ஆணையரது 24.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மெரினா கடற்கரை பூங்காக்கள் பராமரிப்பு பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது".

****

க.து.ந.க.எண்.பி2/ 1190/ 2020

தீர்மான எண்.577 / 2020 **நாள்:28-08-2020**

மதிப்பீடு 2018-2019 - கட்டடத்துறை - மண்டலம்-09, வார்டு-123, லஸ் அவென்யூ, 5வது தெருவில் கலை மற்றும் கலாச்சார வளாகம் (Art and Cutural Complex) கட்டும் பணிக்காக 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.2,41,40,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.

மன்றத்தீர்மான எண்.263/2010, நாள்.22.06.2010ன்படி பழைய மண்டலம் - 10 புதிய மண்டலம்-9 லஸ் அவென்யூ நாகேஸ்வர பூங்கா அருகே அமைந்துள்ள செயல்படாத பெருநகர சென்னை மாநகராட்சியின் பள்ளி கட்டிடம் கலை பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் ஜவகர் சிறுவர் மன்ற செயல்பாட்டிற்கு வாடகையின்றி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தின் பயன்பாட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி வழங்கிய பின்னர் அவ்விடத்தில் 22.02.2011 முதல் தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் இயங்கி வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ள இடத்தில் உள்ள பழுதடைந்த கட்டிடத்தை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதிய கட்டிடம் கட்டிக் கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சிடம் கலை பண்பாட்டுத்துறையினர் இசைவு கோரப்பட்டதைத் தொடர்ந்து மன்றதீர்மான எண்.302/2013, நாள்.26.04.2013ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியால் சில நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கியது. அந்நிபந்தனைகளில் நிலம் மற்றும் கட்டிடம் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி சூழ்நிலைகளை பொருத்து விதிக்கும் அனைத்து நிபந்தனைகளையும் கலை பண்பாட்டு துறை ஏற்க வேண்டும் என்றும் மேற் குறிப்பிட்ட கட்டுமானப் பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் மன்றத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டு கலை மற்றும் பண்பாட்டுத்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

கலை மற்றும் பண்பாட்டுத்துறையின் 29.07.2020 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தின் கட்டிடத்திற்க்காக அரசு நிதி நிறுவனங்கள் மூலம் முதலீடுகளாக வைக்கப்பட்டுள்ள தொகை ரூ.175.00 இலட்சங்கள் உள்ளதாகவும் எனவே ஜவகர் சிறுவர் மன்றம் தற்போது இயங்கி வரும் இடத்திலேயே மாநகராட்சிக் கட்டிடத்தை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதியதாக கட்டிடம் கட்டிட ஏதுவாக திட்ட மதிப்பீடு மற்றும் வரைபடம் (Plan and Estimate) தயாரித்து ஆணையர், கலை பண்பாட்டுத்துறை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கலை மற்றும் பண்பாட்டு துறையின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

கலை மற்றும் பண்பாட்டு துறையின் மூலம் அரசாணை நிலை எண்.22, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்1-2) துறை, நாள்.21.01.2020 நாளிட்ட அரசாணை பெறப்பட்டு மண்டலம் -9, வார்டு-123 லஸ் அவென்யூ 5வது தெருவில் கலை மற்றும் கலாச்சார வளாகம் (Art and Cultural Complex) (G+1) கட்டிடம் கட்டுவதற்காக ரூ.175.00 இலட்சங்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்குவதாகவும் அதற்கான மதிப்பீடு தயாரித்து கலை மற்றும் பண்பாட்டுத்துறைக்கு அனுப்ப 24.01.2020 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது.

எனவே, இந்த பணிக்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் பட்டியலிடப்பட்ட கலந்தறிவாளர் திருவாளர்கள் அமுரசுரபி ஆர்க்கிடெக்ட் அவர்கள் நியமிக்கப்பட்டு அவர்களின் மூலமாக மண்பரிசோதனை செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தரைதளம் மற்றும் முதல் தளம் பூகம்ப அதிர்வுகளை தாங்கும் வகையில் (EarthQuake resistent) வடிவமைப்பு செய்து மேற்கண்ட இடத்தில் கட்டிடம் கட்டும் பணிக்காக 2019 -2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.241.40.இலட்சங்கள் மதிப்பீட்டிற்கான விரிவான திட்ட மதிப்பீடு பெறப்பட்டு மேற்கண்ட இடத்தில் (G+1) கட்டிடம் கட்டும் பணிக்காக ரூ.241.40 இலட்சங்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கவும், அத்தொகை கிடைக்கப் பெற்றவுடன் விரிவான திட்ட மதிப்பிட்டின் ஒப்புதல் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பம் கோரப்படும் என தெரிவித்து கலை பண்பாட்டு துறைக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதில், இப்பணிக்காக கலை பண்பாட்டுத் துறையில் மூலமாக போதிய நிதி இல்லாத காரணத்தால் ரூ.1,75,00,000/- க்கு மேல் மான்யமாக வழங்க இயலாத நிலை உள்ளதாக 29.07.2020 நாளிட்ட கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இப்பணிக்காக கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

க.து.ந.க.எண்.பி2/ 1190/ 2020

1	பணியின் பெயர்	மண்டலம்-09, வார்டு-123, லஸ் அவென்யூ, 5வது தெருவில் கலை மற்றும் கலாச்சார வளாகம் (Art and Cutural Complex) கட்டும் பணி.
2	பரிந்துரை செய்தவரின் விவரம்	ஆணையர்
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	கலை மற்றும் பண்பாட்டுத்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2019-2020 ஆம் ஆண்டின் விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 2,41,40,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ 2,05,09,769.22
	(ஆ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 2,05,097.69
	(இ) எதிர்பாரா செலவு	ரூ. 5,03,765.40
	(ஈ) கலந்தறிவாளர் கட்டணம்	ரூ. 4,10,195.38
	(உ) மின்சார கட்டணம்	ரூ. 50,000.00
	(ஊ) GST 12 %	ரூ. 24,61,172.31
	மொத்தம்	**ரூ. 2,41,40,000.00**
6	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
7	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதிய பணி
8	நிதியின் தன்னைம / ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி எண்.	கலை மற்றும் பண்பாட்டுத்துறை மான்யம் மற்றும் மூலதனநிதி
9	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ. 2,41,40,000/-

இந்த சூழ்நிலையில் இந்த பணியின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டும் மேலும் பயனாளிகள் சென்னை மாநகராட்சியில் வசிக்கும் ஏழை குழந்தைகள் என்பதாலும் இப்பணிக்காக கலை மற்றும் பண்பாட்டுத்துறையிலிருந்து ரூ.1,75,00,000/- ஐ மான்யமாக பெற்ற பின் மீதமுள்ள தொகையான ரூ.66,40,000/- ஐ பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதனநிதியின் மூலம் மேற்கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

1) மண்டலம்-09, வார்டு-123, லஸ் அவென்யூ, 5வது தெருவில் கலை மற்றும் கலாச்சார வளாகம் (Art and Cutural Complex) கட்டும் பணிக்காக 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.2,41,40,000/- (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) க்கு நிர்வாக அனுமதியும்,

2) கலை மற்றும் பண்பாட்டுத்துறையிலிருந்து ரூ. 1,75,00,000/- ஐ மான்யமாக பெறவும், மீதமுள்ள தொகையான ரூ.66,40,000/- ஐ பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதனநிதியின் மூலம் பணியை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 27.08.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"*Art and Cutural Complex* கட்டும் பணிக்கு, 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

****

பொ.சு.பூ.த.து.ந.க.எண்.எம்7/262/2020

தீர்மான எண்.578/2020 **நாள்:28-08-2020**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறை - கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க - முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு - கிருமி நாசினி தெளிக்கும் நாப்சாக் தெளிப்பான்கள் (Knapsack Sprayer) 1000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டது - வெளி விற்பனையாளர்களிடம் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள். The Premier Precision Surface மற்றும் Mahamudra ஆகிய இரண்டு நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி.

உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளதன்படி, கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கிருமி நாசினி தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு பொது மக்கள் பெருவாரியாக கூடும் இடங்கள், பொது மக்கள் அதிகம் பயன்படுத்தும் அலுவலக வளாகங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி தெளிப்பதற்கு ஏற்ப இயந்திரங்கள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.

இதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியில், பொது சுகாதார துறை மூலம் போர்க்கால அடிப்படையில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கொரோனா தொற்று நோய் பெரும் அளவில் பரவி வருவதால் கிருமி நாசினி தெளிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து, கொரோனா வைரஸ் பரவுவதை தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை தடுப்பு பணிக்காக வெளிச்சந்தையில் உள்ள இயந்திரங்கள் குறித்து ஆராயப்பட்டது. எளிதில் முதுகில் சுமந்து செல்லக்கூடியதும், கையால் மற்றும் பேட்டரியில் இயக்கக் கூடியதுமான நாப்சாக் (Knapsack Sprayer) தெளிப்பான் கிருமி நாசினி தெளிப்பான்கள் சந்தையில் இருப்பது கண்டறியப்பட்டது.

மேலும், இவ்வகை தெளிப்பான்கள் கையினால் இயக்கவும் மற்றும் பேட்டரியினாலும் இயக்கக்கூடியது என்பதால் எரிபொருள் மூலம் இயங்குவதால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்பிலிருந்து தவிர்க்கலாம் மற்றும் இவ்வகை தெளிப்பான்கள் கிருமி நாசினி தெளிக்க பயன்படுத்தப்படுவதுடன் கொசுப்புழு நாசினி தெளிக்கும் பணியிலும் பயன்படுத்தக்கூடியது என்பதால் கொள்முதல் செய்ய தீர்மானிக்கப்படுகிறது. அதனடிப்படையில் Knapsack Sprayerகள் 1000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய ஆணையர் அவர்களின் *08.05.2020* நாளிட்ட அனுமதி பெறப்பட்டது.

பேரிடர் காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்முதலுக்கு தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதிகள் 1998, பிரிவு-*16(a)*ன் கீழ் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும், மற்றும் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இக்கொள்முதல் மேற்கொள்ளப்படுவதன் அடிப்படையிலும் கிருமி நாசினி தெளிக்கும் நாப்சாக் தெளிப்பான்கள் நேரடி கொள்முதல் செய்ய தகுதி வாய்ந்த விற்பனையாளர்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டது.

இவ்வொப்ப விலைப் புள்ளிகள் *19.05.2020* அன்று திறக்கப்பட்டது. இதில் *5* நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது விலை புள்ளிகளை வழங்கியுள்ளனர் அதன் விவரம் பின்வருமாறு:

நாப்சாக் தெளிப்பான் கொள்முதல் செய்யும் பணியில் கலந்து கொண்ட நிறுவனங்கள்:-

வ. எண்.	விலை புள்ளி வழங்கியவர்களின் விவரம்		விலை	வரிகள் (GST@12%)	மொத்தம்
	நிறுவனத்தின் பெயர்	வழங்கவுள்ள இயந்திரத்தின் தயாரிப்பு மாடல்			
1.	M/s. The Premier Precision Surface	*Power texx*	ரூ.*4800/-*	ரூ.*576/-*	ரூ.*5376/-*
2.	M/s. Mahamudra	*Fortune agro*	ரூ.*4800/-*	ரூ.*576/-*	ரூ.*5376/-*

3.	M/s. Swathi Enterprises	*Fortune agro*	ரூ.5400/-	ரூ.648/-	ரூ.6048/-
4.	M/s. Kongu Sprayers	*Power texx*	ரூ.7600/-	ரூ.912/-	ரூ.8512/-
5.	M/s. Green Kraft Agricultural Equipment	*Power texx*	ரூ.7900/-	ரூ.948/-	ரூ.8848/-

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். The Premier Precision Surface மற்றும் Mahamudra ஆகிய இரு நிறுவனத்தாரும் குறைந்த மற்றும் ஒரே விலைபுள்ளி அளித்துள்ளனர். இந்நிலையில் இவ்விரு நிறுவனங்களும் வழங்கியுள்ள உபகரணங்கள் ஒரே தொழில்நுட்ப வரையறைகளுடன் இருந்ததால் இவ்விரு நிறுவனங்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திருவாளர். The Premier Precision Surface மற்றும் Mahamudra நிறுவனங்கள் 21.05.2020 நாளிட்ட கடிதம் வாயிலாக கீழ்கண்டவாறு விலைக்குறைப்பு வழங்கியுள்ளனர்.

வ. எண்.	நிறுவனத்தின் பெயர்	பணியின் விவரம்	விலை குறைப்பிற்கு பிறகு	வரிகள் (GST@12%)	மொத்தம்
1.	M/s. The Premier Precision Surface	நாப்சாக் தெளிப்பான்கள் (1000 எண்ணிக்கை)	ரூ.4445/-	ரூ.533.40/-	ரூ.4978.40/-
2.	M/s. Mahamudra		ரூ.4445/-	ரூ.533.40/-	ரூ.4978.40/-

திருவாளர். The Premier Precision Surface மற்றும் திருவாளர் Mahamudra ஆகிய இரண்டு நிறுவனங்களுமே ஒரு எண்ணிக்கையிலான Knapsack Sprayer தெளிப்பானின் விலை ரூ.4978.40 (Incl.GST@12%) வீதம் 1000 எண்ணிக்கையிலான நாப்சாக் தெளிப்பான்களுக்கு ரூ.49,78,400/- (Incl. GST@12%) என ஒரே விலைபுள்ளி வழங்கியுள்ள நிலையில் இவ்விரு நிறுவனங்களிடமிருந்து தேவையான உபகரணங்களை கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், திருவாளர். Mahamudra நிறுவனத்தார் தற்பொழுது கொரோனா நோய் தொற்று காலத்தில் தங்களால் 100 எண்ணிக்கையிலான உபகரணங்களை மட்டுமே வழங்க இயலும் என தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் திருவாளர். The Premier Precision Surface நிறுவனத்தாரிடம் கோரியதில் தங்கள் நிறுவனத்தால் 1000 எண்ணிக்கையிலான உபகரணங்களையும் வழங்க இயலும் என தெரிவித்துள்ளார். எனவே, திருவாளர். Mahamudra நிறுவனத்திடமிருந்து 100 எண்ணிக்கையிலான *Fortune agro* தயாரிப்பு *Knapsack Sprayer* உபகரணங்களையும்,திருவாளர். The Premier Precision Surface நிறுவனத்திடமிருந்து 900 எண்ணிக்கையிலான *Power texx* தயாரிப்பு *Knapsack Sprayer* உபகரணங்களையும் கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பணிக்கென செலவீனத்தினை பொது சுகாதாரம், பூச்சி தடுப்பு துறை மூலம் மேற்கொண்டபின் பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் உரிய நிதி ஒதுக்கீடு பெற்றப்பின் இத்தொகையினை நேர் செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

